இவ்விதம் பிறந்த பரமசிவனுடைய அசரீரி வாக்கை சிபி சக்ரவர்த்திகேட்டு ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவராய் பரம ஸந்தோஷத்தை யடைந்து, பின் மிகுந்த பக்தியோடு ஸத்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, வேதாத்யயன ஸம்பத்தோடு கூடிய அங்குள்ள முனீந்த்ரர்களை நமஸ்கரித்தார்; பிறகு புஷ்பம்போல் ம்ருதுவாயுள்ளதாயும் பனிபோல் குளிர்ந்துள்ளதாயும் இருக்கும் வைத்யஸாரம் என்னும் தீர்த்தத்திலும், புத்ர கூபம், ப்ரஹ்ம குண்டம், க்ஷீரகுண்டம் முதலியதான தீர்த்தங்களிலும், பர்வதத்தின் உச்சியிலுள்ள கங்கையிலும் பக்தியுடன் ஸ்நாநம் செய்து, ஸமஸ்த தோஷங்களினின்றும் விடுபட்டவராய் மிகவும் பரிசுத்தமாக்கப்பட்ட மனதுடன் அவ்வரசன் ஆலயத்திற்குள் ப்ரவேசித்தார். அவ்விடத்தில் மார்க்கண்டேய மஹாமுனிவரைக்கண்டு நமஸ்கரித்தார். இன்னும் சிஷ்யகோடிகளோடு தீர்த்த யாத்ரைக்கு வந்துள்ள வேதாந்த பாரகர்களான நாரதாதி முனீஶ்வரர்களையும் தரிசித்து மிக வினயத்தோடும் பக்தியோடும் வணங்கினர். அந்த க்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யத்தை (மஹிமையை) எல்லாம் நாரத மஹா முனிவர் எடுத்துரைக்கக் கேட்டமையாலும், அவ்வுத்தம ஸ்தலத்தை அடைந்தமையாலும், அவ்விடத்தில் மஹேஶ்வரரின் அநுக்ரஹம் பெற்றமையாலும், சிபிசக்ரவர்த்தி க்ருதார்த்தராயினர். (77½

(ஶ்லோ)
ப்ரஹ்ம ப்ரதிஷ்டாம் ஶ்ரத்தயா கரோமீதி ப்ரஹ்ருஷ்டதீ: ।
விமாநம் ப்ரேஷயாமாஸ ப்ராஹ்மணாநயநோத்ஸுக: ॥ (78½)

காஶ்மீர வாஸிந: பஞ்ச ஶத ஸங்க்யா ஸமந்விதாந் ।
ஸகுடும்பாந் ஸாக்நிஹோத்ராந் வேதஶாஸ்த்ர ஸமந்விதாந் ॥ (79½)

ஸமாரோப்ய விமாநேஸ்மிந் மாஸ மாத்ரேண ஸாரதே ।
ஆநயேதி ப்ரேஷயித்வா ஸாரதிம் ந்ருபதிஸ்தத: ॥ (80½)

(உ)
"இவ்விடத்தில் ப்ராஹ்மண ப்ரதிஷ்டை செய்யப்போகின்றேன்" என்னும் எண்ணத்தினால் மிக்க ஸந்தோஷமடைந்த மனத்தினோடு, சக்ரவர்த்தி தன் விமானத்தை வரவழைத்து "காஶ்மீர தேசத்திற்குப்போய் அங்கே குடும்பிகளாயும் அக்னிஹோத்ரிகளாயும் சுருதி ஸ்ம்ருதி தர்ம சாஸ்த்ரங்களில் ப்ரவீணர் (தேர்ந்தவர்) களாயுமுள்ள ஐஞ்ஞூறு ப்ராஹ்மணர்களை குடும்பத்துடன் இந்த விமானத்தில் ஏற்றிக்கொண்டு ஒரு மாதத்தினுள் அழைத்துவா" வென்று தன் ஸாரதிக்குக் கட்டளையிட்டனுப்பினர். (80½)

(ஶ்லோ)
விஶ்வகர்மாண மாஹூய வாஸ்து ஶாஸ்த்ர விதாநத: ।
ஶ்ரீஶைலஸ்யேஶாந திக்பாகே ஶ்ரேஷ்டபூமௌ ஸுவிஸ்த்ருதே ॥ (81½)

ஸ்வஸ்திகம் வாஸ்து நிர்மாணம் ஷோடஶத்வாரஸம்யுதம் ।
காரயாமாஸ விதிநா ப்ராஹ்மணாகமநாத் புரா ॥ (82½)

(உ)
பின்னர் விஶ்வகர்மாவையழைத்து ஸத்யாசலத்திற்கு ஈசான்ய திக்கில் மிக ஶ்ரேஷ்டமான பூமியில் வாஸ்து சாஸ்த்ரத்தை அநுஸரித்து நாற்சந்திவீதிகள் போட்டு மனைகள் அமைத்து பதினாறு வாசல்கள் அடங்கிய அநேகம் வீடுகளை ப்ராஹ்மணர்கள் வருமுன் முறைப்படி கட்டுவித்தார். (82½)

(ஸ-ம)

𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣 𑌕𑍃𑌤𑍇𑌨𑍈𑌵 𑌪𑌰𑍍𑌵𑌤𑌸𑍍𑌯 𑌗𑍃𑌹𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 ।
𑌗𑍃𑌹𑍇𑌷𑍁 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌹𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑍇 ॥ (83½)

𑌏𑌵𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌚𑌕𑍍𑌰𑌰𑌾𑌜𑍇 𑌸𑌮𑌾𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸𑌾𑌰𑌥𑌿𑌃 ।
𑌦𑍍𑌵𑌿𑌜𑍈𑌃 𑌪𑌞𑍍𑌚𑌶𑌤𑍈𑌃 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌮𑌨𑍀𑌷𑌿𑌭𑌿𑌃 ॥ (84½)

𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑌾𑌨𑌂 𑌨𑍃𑌪𑌤𑌿𑌃 𑌸𑌦𑍍𑌵𑌿𑌜𑌂 𑌲𑍋𑌕𑌪𑍂𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌾𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯𑌾𑌥 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌤𑌿 ॥
(85½)

𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍍𑌯 [illegible] ।
𑌸𑌾𑌮𑍍𑌬 𑌸𑌤𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌧𑍀𑌶 [illegible] 𑌕𑍃𑌪𑌾𑌨𑌿𑌧𑌿𑌃 ॥ (86½)

𑌏𑌕𑍈𑌕 [illegible] ।
𑌇𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌗𑍃𑌹𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑌜𑌲𑌂 𑌚 𑌦𑌦𑍌 𑌨𑍃𑌪𑌃 ॥ (87½)

(உ)

அந்த பர்வதத்தை வலம் வந்து வீடுகளுக்கு புண்யாஹவாசனம் செய்துவிட்டு ஸகல ஸம்பத்துகளும் நிறைந்த அவ்வீடுகளுக்குள் சிபிசக்ரவர்த்தி செல்லும்பொழுது, ஸாரதியானவன் ஐஞ்ஞூறு ப்ராஹ்மணர்களையும் விமானத்திலேற்றி அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். ப்ராஹ்மணர்களிடத்தில் விசேஷபக்தியுள்ள அந்த மகாராஜன், லோக பூஜ்யர்களான அந்த ப்ராஹ்மணர்கள் யேறிவருகின்ற அவ்விமானத்தைப்பார்த்து அதிஸந்தோஷத்துடன் ப்ராஹ்மணர்களுக்கு ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்துவிட்டு, ஸ்வாமி ஸந்நிதானத்தில் உட்கார்ந்துகொண்டு "இப்பொழுது நான் செய்யும் பூமி தானத்தினாலே ஸுப்ரஹ்மண்யரும் அம்பிகா ஸமேதரான கருணாநிதி ஸத்யாசலாதீசரும் என் விஷயத்தில் எப்பொழுதும் ப்ரீதி அடையவேண்டும்" என்று ஸங்கல்பஞ் செய்துகொண்டு, வந்திருக்கும் ப்ராஹ்மணர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் ஒரு வீட்டையும் பூமியை (வயலை) யும் ஜலத்துடன் தாரை வார்த்து தானம் செய்தார். (87½)

(மூ-ல)

[illegible]
[illegible] (88½)

[illegible]
[illegible] (89½)

[illegible]
[illegible] (90½)
[illegible] (91)

(உ)

அவ்வாறு செய்யுங்காலத்தில், வந்த ப்ராஹ்மணர்களுள் ஒருவர் காணப்படாத்தினால் ஒரு வீடு ப்ரதிக்ரகம் வாங்கப்படாமல் சூன்யமாயிருப்பதை அரசன் கண்டு அதிவிசாரத்துடன் மேல்வருமாறு கவலைகொண்டு ஆலோசிப்பாராயினர்; "எனது பாப வசத்தால் ஒரு ப்ராஹ்மணன் இங்கு வரவில்லை; நான்செய்த ஸங்கற்பம் வ்யர்த்தமாய்ப் போய்விடுமே! எனது விரதத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிட்டதே! யான் எங்கு செல்வேன்! என்ன செய்வேன்! எங்கே போய்த் தேடுவேன்! இங்குள்ள ப்ராஹ்மணர்களோ வானப்ரஸ்தாஶ்ரமத்தை யனுஷ்டித்தவர்களாய் ஆசையற்றவர்களாயும் பற்றற்றவர்களாயு மிருக்கின்றார்கள். எனது வார்த்தையைக் கேட்கிறார்களில்லையோ?" என்று அரசர்கோன் இவ்விதம் துக்கப்பட்டு மூர்ச்சையடைந்தார். (91)

(மூ-ல)

[illegible]
[illegible] (92)

[illegible]
[illegible] (93)
[illegible] (93½)



சிவபெருமான் "ஸத்யாசலாதீசர்" என்னும் பெயரினையுடைய
பிராம்மண வடிவந்தாங்கி, மனைவிமக்களுடன்கூடி
சிபிசக்ரவர்த்தி முன்தோன்றி க்ருஹதானம் வாங்கி
அவரை ஆசீர்வதித்தல். [பக்கம் 71

(உ)

அவ்வேளையில் ஸாக்ஷாத் சிவபெருமான் தாமே ஒரு ப்ராஹ்மண வேஷம் தரித்து ஸகல வித்யா பாரங்கதராய் "ஸத்யாசலாதீசர்" என்னும் திருநாமம்பூண்டு, பக்தசிகாமணியான அவ்வரசன் செய்துகொண்ட சங்கற்பத்தை ஸத்யமாகச் செய்யவேண்டுமென்னும் திருவுள்ளங்கொண்டு, மனைவி மக்களோடு தோன்றி "(ஸ்தலத்தை) பூமியை அபேக்ஷித்து வந்திருக்கின்றேன்" என்று அரசனிடம் கம்பீரமாய்ச் சொன்னார். (93½)

(மூ)

𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌧𑍍𑌵𑌾 𑌵𑌤𑍍𑌸𑍈𑌃 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑍇𑌦 𑌵𑍇𑌦𑌾𑌂𑌗 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌂 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨 𑌮𑌹𑌾𑌶𑌯𑌃 ॥ (94½)

𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌪𑍂𑌰𑍍𑌣 𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑍋𑌽𑌹𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌚𑌾𑌰𑍈𑌃 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥ 95½
𑌤𑌸𑍍𑌮𑍈 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌦𑌦𑍌 𑌰𑌾𑌜𑌾 𑌤𑌦𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌗𑍃𑌹𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ॥ 96

𑌗𑍃𑌹𑍀𑌤𑌵𑌾𑌨𑍍 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌤𑌦𑍍𑌯𑍋𑌗𑍍𑌯𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌯 𑌵𑍈𑌦𑌿𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌮𑌾𑌸 𑌤𑌦𑌾 𑌰𑌾𑌜𑍍𑌞𑍇 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥ 97

(உ)

வேத வேதாங்கங்களின் உண்மையை அறிந்தவராயும், ப்ராஹ்ம தேஜஸ்ஸால் ஜ்வலித்துக்கொண்டிருப்பவராயும், மனைவிமக்களோடு கூட வந்திருப்பவராயுமுள்ள அந்த ப்ராஹ்மணரைப் பார்த்து விசாலபுத்தியோடு கூடிய அவ்வரசன் ஆச்சர்யம் அடைந்து, தான் மிகவும் அதிஷ்டசாலியென்று மனத்தினுள் நினைத்துக்கொண்டு, ப்ராஹ்மணோத்தமரை ஸகலவிதத்திலும் விசேஷமாய் உபசரித்துப் பூஜித்து, பூமி முதலிய ஸம்பத்துகளோடு கூட மீதியிருந்த கிருகத்தை அவர் கையில் தானஞ்செய்ய, ப்ராஹ்மணரும் ப்ரதிக்ரகத்திற்குரிய மந்த்ரத்தைச்சொல்லி தானத்தைப் பெற்றுக்கொண்டார். உடனே மஹேஶ்வரர் ப்ரத்யக்ஷமாய் அரசனுக்குக் காக்ஷி அளித்தருளினர்.
(97)

(ஶ்லோ)

பக்த்யா பரவஶோ பூத்வா பதித்வா தண்டவத் புவி ।
[illegible] ஸ்தோத்ரவரைஶ்ச ராஜா ஸம்பூர்ணமநோரத:॥ 98
தஸ்தௌ க்ருதாஞ்ஜலி: ஸாம்போ ப்ரோவாச க்ருபாகர:॥ 98½

(உ)

அரசனும் பக்தியினால் பரவசமாகித் தண்டாகாரமாக (தடி போல்) பூமியில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து, சிறந்த அநேகம் ஸ்தோத்ரங்களினாலே சிவபெருமானை ஸ்துதித்து, தனது மனோபீஷ்டம் நிறைவேறினவராய், அஞ்சலிபத்தராய் (கைகளைக் கூப்பிக் கொண்டு) நிற்க, அவரைப் பார்த்து கருணாநிதியான அம்பிகாபதி திருவாய்மலர்ந்தருளுவாராயினர். (98½)

(ஶ்லோ)

ஸம்யக் க்ருதஸ்த்வயா ராஜந் தர்மோ தர்மவிதாம் வர ।
புண்யக்ஷேத்ரேऽத்ர ராஜர்ஷே ஸத்பாத்ரே பூமிதாநத:॥ 99½

யதாऽ[illegible] தர்மைர் [illegible] நராதிப ।
ததா தே கீர்த்திரதுலா பவிஷ்யதி நஸம்ஶய:॥ 100½

[illegible] பக்திர்மோக்ஷஸாம்ராஜ்யதாயிநீ ।
இத்யுக்த்வாऽந்தர்தயே ஶம்பு: ஸத்யஜ்ஞாநகிரீஶ்வர:॥ 101½

(உ)

"தர்மத்தை அறிந்தவர்களுள் சிரேஷ்டனான அரசனே! உன்னால் சிறந்த தர்மமானது நன்றாக அநுஷ்டிக்கப்பட்டது. ஹே ராஜ ரிஷே! மஹா புண்ய ஸ்தலமாயுள்ள இந்த க்ஷேத்திரத்தில் உத்தம ப்ராஹ்மணர்களுக்கு பூதானம் மூலமாய் நீ செய்த தர்மத்தினால் நன்கு திருப்தியுற்றோம்; மற்றைய தர்மங்களைச் செய்வதால் நமக்கு அவ்வளவு த்ருப்தி உண்டாக மாட்டாது; ஆதலினால் நிச்சயமாய் உனக்கு நிகரற்ற கீர்த்தி உண்டாகும்; இதில் ஸந்தேகமில்லை. மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கும் நமது விஷயமான பக்தியானது உனக்கு ஏற்படட்டும்" என்று அநுக்ரகித்துவிட்டு பகவான் ஸத்யஞ்ஞானகிரீஶ்வரர் அந்தர்த்யானமாயினர். (101½)

(ச்லோ)

க்ருதக்ருத்யம் ததா மேநே ராஜா பக்தஶிரோமணி: ॥ 102

ப்ராஹ்மணா ஸம்ப்ரஹ்ருஷ்டாஸ்து ப்ராப்ய ஸர்வைஶ்வர்ய ஸமந்விதாந் ।
ஆஶீர்வாதாம்ஶ்ச க்ருத்வாஸ்ய ராஜ்ஞஸ்தஸ்ய மஹாத்மந: ॥ 103

(உ)

பக்தசிரோன்மணியான அவ்வரசரும் தாம் செய்யவேணுமாய்க் கருதியவைகளை எல்லாம் செய்துமுடித்தவராக எண்ணிக்கொண்டார். ப்ராஹ்மணர்களும் அவ்வரசனை நன்கு ஆசிர்வதித்துவிட்டு அஷ்டைச்வர்யங்களோடு கூடிய தங்கள் வீடுகளை அடைந்தார்கள். (103)

(ச்லோ)

அத ராஜா ததாஶீர்பி: ப்ரஸாதாச்சாம்பிகாபதே: ।
ஸர்வ தோஷ விநிர்முக்த: ஸர்வ ஸம்பத்ஸமந்வித: ॥ 104

புநஶ்ச ஸேதுபர்யந்தம் சசார பரிதோ த்விஜ: ।
க்ஷேத்ராண்யக்ஷேத்ராணி தீர்த்தயாத்ரா பராயண: ॥ 105

அபித்வா விஶாலம் தத்க்ஷேத்ரம் ப்ராப்ய புண்யக்ருத: ।
ஸர்வேயேந யஜ்ஞேந தோஷயித்வா மஹேஶ்வரம் ॥ 106

கௌஶாஸம்பத: பஶ்யத: நிஜாந்தாயிநீம் ।
ஸ்தாபயித்வா ஸத்யலோகே கீர்த்திம் மாஹாத்ம்யதாரகம் ॥ 107
தத்ரைவ ஶிவஸாயுஜ்யம் ஸம்ப்ராப்தவாந் ந்ருபோத்தம: ॥ 107½

(உ)

பின்னர் சிபிசக்ரவர்த்தி ப்ராஹ்மணர்களுடைய ஆசிர்வசனத்தினாலும் அம்பிகாபதியாகிய பகவானுடைய அநுக்ரகத்தினாலும் ஸகல தோஷங்களினின்றும் விடுபட்டு, ஸமஸ்த ஸம்பத்துகளோடும் கூடினவராய் மறுபடியும் யாத்ரை செய்து ஸேதுபர்யந்தமுள்ள க்ஷேத்ரங்களை தர்சித்தார். தீர்த்த யாத்ரையின் மஹிமையால் நவக்ரக தேவதைகளும் அநுக்ரக கிரகங்களாகவே ஆய்விட்டன. விசாலமாயுள்ள பூமியில் தீர்த்த யாத்ரை செய்துவிட்டுத் தமது தேசத்தை அடைந்து புண்யசாலியான சிபி சக்ரவர்த்தியானவர்,

அஶ்வமேத யாகத்தினால் மஹேஶ்வரரை த்ருப்தி செய்வித்து, பின் அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய கைலாஸத்தை அடைந்தார். சந்த்ரஸூர்யர்களிருக்கும் வரையில் நிலை நிற்கக்கூடியதான விசேஷமாயுள்ள தன் கீர்த்தியை பூமியில் ஸ்தாபித்துவிட்டு, எவர்க்கும் கிட்டுதற்கு மிகவுமரியதான சிவஸாயுஜ்யத்தை அந்த சக்ரவர்த்தி அடைந்தார். (107½)

(௪-௫)

𑌸𑌤𑍍𑌯𑌾𑌹𑍍𑌵𑌯𑍇 𑌮𑌹𑌾𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌸𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌕𑍇 ।
𑌨𑌿𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌕𑍍𑌷𑌣𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌪𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ॥ 108¾

𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 𑌸𑌕𑍃𑌜𑍍𑌜𑌾𑌤𑌂 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ।
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑌰𑌸𑍍𑌥𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 ॥ 109½

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌵𑍇 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑌾𑌣𑍇
𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 [illegible] 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌨𑍇
𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

---

(௨)

ஆதலினால் "ஸத்யஞ்ஞானகிரி" எனப் பெயர் விளங்கிய இந்த மஹா புண்ய க்ஷேத்ரத்தில் எந்த மனிதர்கள் நிமிஷகாலமாவது வஸித்து, தங்கள் சக்திக்கேற்ப தான தர்மம் செய்து, இந்த க்ஷேத்ர மாஹாத்ம்யத்தை (ஸ்தல புராணத்தை) மிகுந்த பக்தி சிரத்தையோடு ஒருதடவையாவது கேட்கின்றார்களோ, ப்ராஹ்மண ஶ்ரேஷ்டர்களே! அவர்களுக்கு மோக்ஷ ஸாம்ராஜ்யம் ஸித்திப்பதற்கு ஸாதனமான நான்கு (1) புருஷார்த்தங்களும் இவ்வுலகத்தில் கிடைக்குமென்பதில் ஸந்தேகமில்லை. (109½)

மூன்றாவது அத்யாயம்

முற்றிற்று.

---

(1) தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பன நான்கு புருஷார்த்தங்களாம்.

अथ

அத சதுர்தோऽத்யாய:

உவாச ஸூத: ॥

புநரந்யத் ப்ரவக்ஷ்யாமி ஸத்யாத்ரே: க்ஷேத்ர வைபவம் ।
ஶ்ருண்வதாம் படதாம் ஸத்ய: ஸர்வ பாபவிநாஶநம் ॥ (1)

காலவோ நாம தர்மாத்மா முநி: பரம தார்மிக: ।
மாத்ரு பூஜாபரோ நித்யம் பித்ரு பூஜா பராயண: ॥ (2)

ஸ்வாஶ்ரமோசித வேஷைஶ்ச ஶிஷ்யைஶ்ச வ்ரதஶாலிபி: ।
[illegible] தர்மம் கௌதமீதீர உத்தமே ॥ (3)

நான்காவது அத்யாயம்.

உரை ஸூதர் சொல்வது:—

கேட்பவர்கள் படிப்பவர்களுடைய பாபத்தை உடனே நிவர்த்தி செய்வதாகிய இந்த ஸத்யாத்ரி (திருப்பரங்குன்று) க்ஷேத்ரத்தின் மஹிமையை மறுபடியும் எடுத்துரைக்கின்றேன். (கேளுங்கள்.) தர்மசிந்தையுள்ளவராயும் மாதா பிதாக்களை உபசரித்துப் பூஜிப்பதில் எப்பொழுதும் விசேஷ பக்தியுள்ளவராயுமிருக்கும் "காலவர்" என்னும் முனிவர் தமது ஆச்ரமத்திற்கேற்ப நியமத்தோடு கூடிய சிஷ்யர்களுடன் மேன்மையான கௌதமிநதிக்கரையில் நன் தர்மத்திற்கேற்ற தபஸ் செய்து வந்தார். (3)

(உவாச)

ஏகதா [illegible] ஸமாகத: ।
தம் த்ருஷ்ட்வாதீவ ஸந்துஷ்டோ காலவோ முநிபுங்கவ: ॥ (4)

அர்க்யாதிபி: பூஜயித்வா [illegible] பரஸ்பரம் ।
[illegible] ॥ (5)

(உ)

அந்தஸமயத்தில் தைவாதீனமாக "தைவத்யுதி" முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். காலவமுனிவரும் அவரைப் பார்த்து மிக ஸந்தோஷ மடைந்தவராய் அர்க்யம் பாத்யம் ஆசமனீயம் மதுபர்க்கம் முதலிய உபசாரங்களால் அவரை உபசரித்து மிகுந்த பக்தியுடன் விருந்திற் கழைத்தார். (6)

(ஸம்)

𑌦𑍈𑌵𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌾𑌗𑌤𑍍𑌯 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸𑌾𑌯𑌮𑌤𑌿𑌥𑌿𑌃 ।
𑌤𑌮𑍇𑌵𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌸𑍇𑌵𑌨𑌮𑍍 ॥ (6)

(உ)

பாகவத ஸ்ரேஷ்டரான தைவத்யுதி முனிவரும் அவ்வார்த்தையைக் கேட்டு அப்படியே ஆகட்டுமென்று சொல்லி, அந்த ஸந்தர்ப்பத்தில் தீர்த்த வைபவத்தைப்பற்றி அவருக்கு உரைக்க ஆரம்பித்தார். (6)

(ஸம்) 𑌦𑍈𑌵𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ॥

𑌭𑍋 𑌭𑍋 𑌗𑌾𑌲𑌵 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞 𑌸𑌰𑍍𑌵𑌜𑍀𑌵𑌦𑌯𑌾𑌪𑌰 ।
𑌶𑍃𑌣𑍁𑌷𑍍𑌵 𑌵𑌚𑌨𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌾𑌵𑌧𑌾𑌨𑍇𑌨 𑌚𑍇𑌤𑌸𑌾 ॥ (7)

𑌤𑍀𑌰𑍍𑌥𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌰𑍋𑌽𑌹𑌂 𑌵𑍈 𑌚𑌰𑌾𑌮𑌿 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌿𑌮𑌾𑌮𑍍 ।
𑌕𑍇𑌦𑌾𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌯𑌾𑌵𑌦𑍇𑌵 𑌸𑍇𑌤𑍁𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍 ॥ (8)
𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌵𑌦𑌾𑌮𑌿 𑌤𑍇 ॥ ($8\frac{1}{2}$)

(உ) தைவத்யுதிமுனிவர் கூறுவது:—

"எல்லாவற்றையும் அறிந்தவரும் எல்லா ப்ராணிகளிடத்திலும் இரக்கமுள்ளவருமான காலவமுனிவரே! நான் சொல்லும் இந்த வார்த்தைகளை ஸாவதானமான மனத்துடன் கேளும். நான் தீர்த்த யாத்ரைசெய்வதில் விருப்புற்று இப்பூமியில் கேதாரம் முதல் ஸேது பர்யந்தம் ஸஞ்சாரம் செய்து வருகின்றேன். அதன் மத்தியிலுள்ள விசேஷ தீர்த்தங்களை உமக்குச் சொல்லுகின்றேன், கேளும்". ($8\frac{1}{2}$)

(உ-ம)

கேதாரே பௌஷ்கரம் தீர்த்தம் காஶ்யாந்து மணிகர்ணிகா ।
வேணீ தீர்த்தம் ப்ரயாகே ச கயாயாம் விஷ்ணுதீர்த்தகம் ॥ (9½)

கும்பகோணே வஹ்நிதீர்த்தம் மணிகூடே த்ரிபௌஷ்கரம் ।
ஸப்தாரண்யே ப்ரஹ்மதீர்த்தம் வடாரண்யே குஹாஶ்ரயம் ॥ (10½)
காஞ்ச்யாம் வேகவதீஞ்சைவ ஸர்வதீர்த்தோத்தமோத்தமம் ॥ (11)

ப்ரஹ்மணோ வாரணாதீர்த்தம் மாதங்கஸ்ய ஸுபத்ரதீர்த்தகம் ।
ஶ்ரீமுஷ்ணே பாதரே பத்மே ஶிவகங்காஹ்வயம் பரம் ॥ (12)

ஶ்வேதாரண்யே ச காயத்ரீ ஸாவித்ரீ ஸாவித்ர்யாஹ்வயே ।
காருண்யாக்ஷகம் தீர்த்தம் நைமிஶஸ்ய ஸமீபகம் ॥ (13)

ஶ்ரீகும்பகோண நகரே காவேர்யாம் ஸர்வதீர்த்தகம் ।
சந்த்ரபுஷ்கரிணீ தீர்த்தம் ஶ்ரீரங்கே ச மஹோத்தமம் ॥ (14)

வ்ருஷபாத்ரௌ மஹாபுண்யா நதீ நூபுரகங்கிகா ।
வேங்கடே புஷ்கரிணீ தீர்த்தம் ஸ்வாமிநஸ் ஸர்வபாபநுத் ॥ (15)

ஸத்யாத்ரௌ ஸத்யதீர்த்தஞ்ச ஸ்வாமிபுஷ்கரிணீ ததா ।
ஸேதௌ பந்தே தநுஷ்கோடிஶ்சக்ரதீர்த்தம் மஹாவரம் ॥ (16)

யத்ர யத்ர ச தீர்த்தாநி தாம்ரபர்ண்யாம் மஹோத்தமே ।
பாபநாஶம் மஹாதீர்த்தம் ஹஸ்தி தீர்த்தஞ்ச ஸங்க்ஷிப்தம் ॥ (17)
த்ரிகூடாத்ரௌ மஹாபுண்யே சித்ராநாம நதீ ஶுபா ॥ (17½)

(உ)

“கேதாரத்தில் புஷ்கர தீர்த்தமும், காசியில் மணிகர்ணிகை, ப்ரயாகையில் த்ருவேணி, கயையில் விஷ்ணுதீர்த்தம், கும்பகோணத்தில் வன்னி தீர்த்தம், மணிகூடத்தில் த்ரிபுஷ்கர தீர்த்தம், ஸப்தாரண்யத்தில் ப்ரஹ்ம தீர்த்தம், வடாரண்யத்தில் குஹாஶ்ரய தீர்த்தம், காஞ்சீபுரத்தில் வேகவதி தீர்த்தமும் மிக்க மஹிமை வாய்ந்த ஸர்வ

தீர்த்தமும், ப்ரபாஸ க்ஷேத்ரத்தில் வருண தீர்த்தம், மாளவத்தில் ஸௌர்ய தீர்த்தம், சிதம்பரத்தில் சிவகங்கா தீர்த்தம், ஶ்வேதாரண்யத்தில் (திருவெண்காட்டில்) காயத்ரீ தீர்த்தம், சாயாவனத்தில் சாயா தீர்த்தம், மத்யார்ஜுனத்தில் காருண்யாம்ருத தீர்த்தம், கும்பகோணத்தில் காவேரீநதிக்கரையில் சக்ர தீர்த்தம், ஸ்ரீரங்கத்தில் மேன்மையாகிய சந்த்ரபுஷ்கரணி தீர்த்தம், வ்ருஷபகிரியில் (அழகர் மலையில்) நூபுரகங்கை, த்வாதசாந்த க்ஷேத்ரமாகிய ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தில் (மதுரையில்) ஸ்வர்ண புஷ்கரிணி தீர்த்தம் (பொற்றாமரை), ஸத்யாத்ரியாகிய திருப்பரங்குன்றத்தில் ஸத்ய தீர்த்தமும், ஸ்வாமிபுஷ்கரிணி தீர்த்தமும், ராமேஶ்வரத்தில் தநுஷ்கோடியும் லக்ஷ்மண தீர்த்தமென்னும் பெரிய தடாகமும், அனந்த சயநத்தில் (திருவனந்தபுரத்தில்) தர்மாதர்ம தீர்த்தம், தாம்ப்ரபர்ணியின் உற்பத்தியில் பாபவிநாச தீர்த்தமும் முக்தியளிக்கக்கூடிய ஹஸ்தி தீர்த்தமும், மஹா புண்ய க்ஷேத்ரமாகிய திருக்குற்றாலத்தில் சித்ரகங்கை என்னும் நதியுமேயாம்''. (17½)

(உ-ம்)

[illegible] ।
[illegible] ॥ (18½)

[illegible] ।
[illegible] ॥ (19½)
[illegible] ॥ (20)

[illegible] ।
[illegible] ॥ (21)

[illegible] ।
[illegible] ॥ (22)

[illegible] ।
[illegible] ॥ (23)

கிஞ்சாஶ்சர்யகரம் ப்ரஹ்மந் தத்ரேதிஹாஸம் புராதநம்।
ஸக்ருச்ச்ரவணமாத்ரேண ஸர்வது:காபநோதநம்॥ (24)

(உ)

"இவற்றுள் வேகவதிக்கரையில் மதுரைக்குத் தென்மேற்கிலே ஸத்யாசலம் என்னும் ஒரு க்ஷேத்ரத்தைக் குறிப்பிட்டேனே, அந்த க்ஷேத்ரம் உபநிஷத்தின் ஸாரமாய் விளங்குகின்றது; ஸகல ஸித்திகளையும் வெகு சீக்ரத்தில் கொடுக்கவல்லது; விசேஷமான புண்ய ஸ்தலம். எல்லா தீர்த்தங்களுக்கும் இருப்பிடமாயது. அந்த க்ஷேத்ரத்தில் அநேக புண்ய தீர்த்தங்களிருக்கின்றன. அவைகளில் ஒன்பது தீர்த்தங்கள் மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்றவைகள். பர்வதத்திற்குச் சிறிது வடகிழக்கிலே ஸகல வ்யாதிகளையும் குணமாக்கத்தக்க "வைத்யஸாரம்" என்னும் பெயருடைய தீர்த்தம் ஒன்றிருக்கிறது. அந்த தீர்த்தமானது சந்த்ரனுடைய க்ஷய ரோகத்தை நிர்வர்த்தி செய்திருக்கின்றது. அந்த தீர்த்தத்தில் ஸ்நாநம் பானம் தர்சனம் செய்வோர்களுடைய பிணிகள் யாவும், முக்யமாய் க்ஷயரோகமும் நீங்குகின்றன. ப்ராஹ்மண ஶ்ரேஷ்டரே! முன்னொருகாலத்தில் அவ்விடத்தில் நான் ஒரு மாஸ காலம் தாமதித்திருந்தேன்; ஒருதடவை கேட்டமாத்திரத்தில் ஸகல துக்கங்களையும் போக்கடிக்கத்தக்கதும் மிக ஆச்சர்யமாயுள்ள, அந்த இடத்தில் நடந்த புராதன கதை ஒன்றிருக்கின்றது. (சொல்கின்றேன்; கேளும்.)" (24)

(உ-ரு)

புரா த்ராவிடதேஶீயோ ராஜா [illegible]பராயண:।
[illegible] ஸர்வஶாஸ்த்ரவிஶாரத:॥ (25)
[illegible]॥ (25½)

[illegible]।
[illegible]॥ (26½)
ஶிஷ்யை: ப்ரஶிஷ்யைஸ்ஸஹிதோ வேதவேதாங்கபாரகை:॥ (27)

(உ)

முன் ஒரு காலத்தில் திராவிட தேசத்தில் ஸர்வைஶ்வர்யங்களும் பொருந்தினவனும் தர்ம மார்க்கம் தவராதவனுமாகிய "கோவிதாரத்வஜன்" என்னும் அரசன் "விசாலபுரி" என்னும் நகரத்திலிருந்துகொண்டு அகண்ட பூமண்டலத்தை பரிபாலனம் செய்து வந்தான். அந்த ஸமயத்தில் சிவத்யானபராயணராயும் பேரறிவுடையவராயும் உள்ள முனிசிரேஷ்டராகிய கும்பமுனிவரான அகஸ்த்ய மஹரிஷியானவர், வேத வேதாங்கங்களை நன்கு கரைகண்டிருக்கும் தமது சிஷ்யகோடிகளோடு தற்செயலாய் கோவிதாரத்வஜனுடைய அரண்மனை வாசலை அடைந்தார். (27)

(ஶ்லோ)

[illegible] । (28)
[illegible] ॥ (28½)

(உ)

மஹா பாபியும் தைவாதீனத்தினால் புத்தி இழந்தவனுமாகிய கோவிதாரத்வஜன், அரசாசனத்திலிருக்கும் கும்பமுனிவருக்கு எழுந்திருத்தல் எதிர்கொண்டழைத்தல் ஆஸனங்கொடுத்தல் ப்ரியவார்த்தை பேசுதல் முதலிய உபசாரங்கள் ஒன்றும் செய்தானில்லை. (28½)

(ஶ்லோ)

[illegible] ।
[illegible] ॥ (29½)

[illegible] ।
[illegible] ॥ (30½)

(உ)

முனிவர் பெருமானாகிய கும்பமுனிவரும் அரசனால் செய்யப்பட்ட அவமானத்தினால் வருத்தமுற்று, தர்மசிந்தனை பொருந்தியவரும் பிரஹ்மநிஷ்டருமாகிய "ப்ராம்மிஷ்ட"ரென்னும் தமது சிஷ்

யனைப்பார்த்து, "இவ்வரசனை தேகம் முழுதும் வெண்குஷ்டம் உடையவனாகும்படி சபித்துவிடு" என்று ஆக்ஞாபித்துவிட்டு, உலகத்துக்கு அநுக்ரகஞ் செய்கின்ற விஷயத்தில் ஆசையுடையவராய், சீக்ரமாக வந்தவழியே திரும்பிவிட்டார். (30½)

(ச-ம)

[illegible] ।
[illegible] ॥ (31½)

(உ)

குருவின் உத்தரவுப்படி ப்ரம்மிஷ்டர் அரசனைச் சபித்துவிட்டு மறுபடியும் குருவை அடைந்து நடந்த விஷயத்தை அவரிடம் தெரிவித்தார். (31½)

(ச-ம)

[illegible] ।
[illegible] ॥ (32½)
[illegible] ॥ (33)

(உ)

அரசனும், இளமை செல்வச்செருக்கு கர்வம் மமதை இந்த தோஷங்களினால் ஸம்பாதிக்கப்பட்ட ரிஷி சாபத்தின் பலனை உடனே அடைந்தவனாய், அந்த நிமிஷமே தேக விகாரத்தையும் வெண்குஷ்ட ரோகத்தையும் அடைந்தான். அதன்பின் 'நான் ரிஷியால் சபிக்கப்பட்டிருக்கிறேன்" என்று உணர்ந்து விசாரத்தையும் அடைந்தான். (33)

(ச-ம)

[illegible] ।
[illegible] ॥ (34)

[illegible] ।
[illegible] ॥ (35)
[illegible] ॥ (35½)

इति व्याकुलया बुद्ध्या पुनर्ब्राह्मणसत्तमम् ।
प्रणम्य दीनया वाचा रक्ष रक्षेति चाब्रवीत् ॥ (36½)

(உ)

"ஐயோ! கஷ்டம், என்னுடைய மயக்கத்தையும் கெட்ட மனத்தையும் என்னவென்று சொல்வேன்; பாக்யமற்ற துர்ப்புத்திக் காரனை எனது கஷ்டத்தைப் பாருங்கள்; நான் முன் செய்த பாபவசத்தினால் விரூபத்தைக் கொடுக்கக்கூடிய இந்த சாபமானது எனக்கு நேரிட்டது; ராஜ்யத்தை இழந்து லஜ்ஜைக்காளாகி நான் எவ்வாறு ஜீவித்திருப்பேன்! ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்கிற விஷயத்தில் வம்ச விருத்தி செய்பவனாகிய புத்திரனும் எனக்கில்லையே!" என்று புலம்பி, கலங்கிய மனமுடையவனாய், ப்ராஹ்மணோத்தமரை மறுபடியும் அடைந்து நமஸ்கரித்து, தீனமான குரலோடு "என்னை ரக்ஷித்தருள்மின், ரக்ஷித்தருள்மின்" எனப் ப்ரார்த்தித்தான். (36½)

(மூ)

ब्रह्मिष्ठो मुनिशार्दूलो नृपेणैवं प्रसादितः ।
शान्तात्मा मुनिराट् प्राह शापावसानकम् ॥ (37½)

(உ)

ப்ரம்மிஷ்ட முனிசிரேஷ்டர் அரசனால் இவ்வாறு ப்ரார்த்திக்கப்பட்டதும் பொறுமையை அடைந்து அவனுக்கு சாபவிமோசனத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

(மூ)

त्वया प्रसादितो यस्मात् त्वन्नरेव महीपते ।
शापमोक्षं वदाम्यद्य राज्यप्राप्तिं पुनर्लप्स्यसे ॥ (38½)

पाण्ड्यदेशे स्थितः सह्यपर्वतस्कन्दसंज्ञकः ।
साक्षात्स्कन्दो राजते वेदान्तप्रतिपादितः ॥ (39½)

दक्षिणे पर्वतस्यास्य पादयोजनमात्रके ।
शृङ्गस्य दक्षिणे पार्श्वे तस्यास्ति महातीर्थम् ॥ (40½)

𑌪𑌾𑌤𑌾𑌲𑌗𑌙𑍍𑌗𑌾𑌭𑌿𑌧𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌰𑌾𑌜𑌂 𑌸𑌮𑌾𑌗𑌤𑌮𑍍 ।
𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂 𑌸𑌦𑍍𑌯𑍋 𑌦𑍁𑌰𑌿𑌤𑌾𑌪𑌹𑌮𑍍 ॥ (41½)

(உ)

அரசனே! நீ என்னை இவ்வாறு வேண்டிக்கொண்டமையால் சாபவிமோசனத்தையும் ராஜ்யத்தைத் திரும்பி அடையும் உபாயத்தையும் இப்பொழுது உனக்குக் கூறுகின்றேன், (கேள்); பாண்டியதேசத்தில் வைகை (வேகவதி) ஆற்றின் தென் பக்கத்தில் இரண்டரை மைல் தூரத்திற்கப்பால் மிக மேன்மை பொருந்தியதாயும் ஸாக்ஷாத் சிவ ஸ்வரூபமாயும் வேதாந்தங்களால் வெளியிடப்பட்டதாயும் உள்ள, "ஸத்யாசலம்" எனப் பெயர் பெற்ற க்ஷேத்ரமொன்றிருக்கின்றது. அந்த ஸத்ய மலையின் உச்சியிலுள்ள கொடிமுடியின் தென்பாகத்தில் குமாரஸ்வாமியின் ஆக்ஞையினாலுண்டான அத்யத்புதமான "பாதாளகங்கை" என்னும் தீர்த்தமிருக்கின்றது. அது தரிசித்த மாத்திரத்தில் ஸமஸ்த பாபங்களையும் தீய செயல்களையும் போக்கடிக்கக் கூடியது. (41½)

(ஶ்லோ)

𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑌳𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑍍𑌤𑍇 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌮𑌐𑌚𑍍𑌛𑌤 ।
𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑍇 𑌨𑌾𑌭𑌿𑌕𑌮𑌲𑌾𑌦𑍍 𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑌾𑌨𑌨𑌃 ॥ (42½)

𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌚𑌕𑍍𑌰𑌪𑌾𑌣𑌿𑌂 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌜𑌗𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍇𑌰𑍁𑌪𑌾𑌯𑌂 𑌮𑍇 𑌕𑌥𑌯𑌸𑍍𑌵 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌭𑍋 ॥ (43½)

(உ)

முன்னாளிலே ப்ரளயகால முடிவிற் சுத்தஸ்வரூபியான மஹாவிஷ்ணுவானவர் உலகத்தை ஸ்ருஷ்டி செய்ய விரும்பினார்; தத்க்ஷணத்திலேயே நாபிகமலத்தினின்று ப்ரஹ்மாவானவர் உத்பவித்தார். பின்னர் அவர் சக்ரபாணியை நமஸ்கரித்து விசேஷமாய் ஸ்தோத்ரம் செய்து, மஹாப்ரபோ! உலகத்தை ஸ்ருஷ்டி செய்யும் உபாயத்தை எனக்குச் சொல்லியருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார். (43½)

(ஸ-ம)

[illegible] ।
[illegible] ॥ (44½)

[illegible] ।
[illegible] ॥ (45½)
[illegible] ॥ (46)

(உ)

அப்பொழுது, மஹா விஷ்ணுவானவர் ப்ரஹ்மாவைப் பார்த்துச் சொல்கிறார்; "ஹே! ப்ரஹ்மந்! உலகசிருஷ்டி உபாயம் பெறுவதற்காக நீர் சிவபூஜை செய்யவேண்டும். அப்புண்யவசத்தாலல்லாது வேறு எவ்வித கர்மத்தினாலும் சிருஷ்டி ஸாமர்த்தியம் அடையத்தகாது. ஆதலால், ஹே கமலாஸநா! தபஸ் செய்வதற்குரிய உபாயத்தையும் அதற்கு யோக்யமாயுள்ள புண்ய ஸ்தலத்தையும் சொல்கின்றேன் கேட்பீராக." (46)

(ஸ-ம)

[illegible] ।
[illegible] ॥ (47)

[illegible] ॥ (47½)
[illegible] ॥ (48)

[illegible] ।
[illegible] ॥ (49)

[illegible] ।
[illegible] ॥ (50)
[illegible] ॥ (50½)

[illegible] ।
[illegible] ॥ (51½)

(உ)

"புண்ய ஸ்தலமாகிய "த்வாதசாந்த"த்தில் (அந்தர்கதமாய்) "ஸத்யகிரி" என்னும் அற்புத க்ஷேத்ரம் ஒன்று இருக்கின்றது. அவ்விடத்தில் ஷண்முகக் கடவுளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு "ஸத்யபூதரநாதர்" என்னும் திருநாமம் பூண்ட ஒரு சிவலிங்க முளது. அந்த பகவான் ஸகல ஐஶ்வர்யங்களையும் ஶ்ருஷ்டியாதி சக்திகளையும் அளிக்கவல்லமூர்த்தி. பராசக்தியின் அபஶபூதையான ஸரஸ்வதிதேவி அங்கே தவம் புரிந்தாள். நீரும் அவ்விடத்திற்குப் போய் உமது தண்டத்தினல் மஹா தீர்த்தத்தை உண்டுபண்ணி, அப்பர்வதத்தில் விக்னேஶ்வரரை விதிப்ரகாரம் ப்ரதிஷ்டைசெய்து, விநாயகரையும் ஷண்முகநாதரையும் உமாதேவியாரோடு பரமேஶ்வரனையும் பக்தியுடன் நன்ருய்ப் பூஜித்து, ஹே கமலோத்பவா! பின், ஸரஸ்வதியை விவாகம் செய்துகொண்டு ஸ்ருஷ்டி கர்த்ருத்வத்தையும் ஜகதீசத்வத்தையும் அடைவீராக. முன்னளிலே நான் அவ்விடத்திற்குச் சென்று மூலப்பொருளாகிய ஸத்யாதீசரை ஆராதித்து அவர் கடாக்ஷத்தினல் உலகத்தை ரக்ஷிக்கும் ஸாமர்த்யத்தை அடைந்தேன்", எனத் திருவாய்மலர்ந்தருளினர் கமலநாதர். (51½)

(ஶ்ரீ)

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌮𑌲𑌾𑌨𑌾𑌯 𑌸𑌰𑍋𑌜𑌾𑌯 𑌸𑌰𑍋𑌜𑌜𑌂 ।
𑌸𑌾𑌰𑌾𑌵𑌯𑌂 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍍𑌯𑌾 𑌸𑌹𑌦𑍇𑌵𑌂 𑌪𑌤𑌿𑌂 𑌶𑌿𑌵𑌂 ॥ (52½)
𑌸𑌂𑌪𑍂𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾 𑌶𑌿𑌵𑌸𑌾 𑌹𑌮𑌿𑌮𑌿𑌃 ॥ (53)

(1) 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌉𑌤𑌨𑍍𑌤𑌜𑌪𑌾𑌶𑌂𑌸𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑍍𑌯𑌾 𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌦𑌾𑌯𑌕𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌧𑌿 𑌸𑌾𑌦𑍇𑌵𑌾 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑍍𑌯𑌾 𑌶𑌂𑌕𑌰 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥ (54)

(உ)

மஹாவிஷ்ணுவானவர் இவ்விதம் சொல்லி ப்ரஹ்மதேவரை அழைத்துக்கொண்டு பராசல க்ஷேத்ரத்தை அடைந்து பரசைல

𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌂.

(1) 𑌤𑌦𑌾𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌦𑍇𑌵𑌿𑌷𑌿 𑌵𑌿𑌭𑍂𑌤𑍍𑌯𑌾 𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌦𑌾𑌯𑌕𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌧𑌿 𑌸𑌾𑌦𑍇𑌵𑌾 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑍍𑌯𑌕𑌤𑍍𑌰 𑌸𑌾𑌧𑌾𑌯𑍁𑌧𑍇 ॥

பதியாகிய பரமசிவனைப் பூஜித்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்து, பின் சம்புவின் ஆக்ஞையினால் "வித்ருமாஸ்யர்" எனப் பெயர் பூண்டு சங்கருடைய ஸந்நிதானத்திலே மேற்குமுகமாய் எழுந்தருளினர். (54)

(8 ஞ)

(2) [illegible] ।
[illegible] ॥ (55)

[illegible] ।
[illegible] ॥ (56)

[illegible] ॥ (56½)
[illegible] ॥ (57)

(உ)

பின்னர் ப்ரஹ்மாவானவர் குமார புஷ்கரிணியில் ஸ்நாநம் செய்து நிர்மலமான அறிவை அடைந்து, துர்க்காதேவியின் இடது பக்கமாகச் சிறிது வாயுமூலையில் நானூறு வில்லடி தூரத்திற்கப்பால் தனது தண்டத்தினால் "ப்ரஹ்மகுண்டம்" என்று ஒரு தீர்த்தத்தை உண்டுபண்ணி அதிலும் ஸ்நாநம் செய்து விதிப்ரகாரம் விக்னேஶ்வரரை ப்ரதிஷ்டைசெய்து அவருக்கு "கல்ப விக்னேஶ்வரர்" எனத் திருநாமம் சாத்தினர். அதுமுதல் விநாயகமூர்த்தி அந்த இடத்திலேயே ப்ரஸன்நராயிருக்கின்றார். (57)

பாடாந்தரம்.

(2) [illegible] ।
[illegible] ॥ (1)

[illegible] ।
[illegible] ॥ (2)
[illegible] ॥ (2½)

(ஸ-ம்)

ஸா வதார்த்தம் மஹிஷாஸுரஸ்ய தானவேந்த்ரஸ்ய சண்டிகா ।
கத்வா ஸத்யகிரிக்ஷேத்ரம் ப்ரஹ்மதீர்த்தாக்ய மஹாநதே ॥ (58)

ஸ்நாத்வா தத்ர ச ஸம்பூஜ்ய ஸத்யஶைலாதிபம் ப்ரதி ।
துர்கா பகவதீ தத்ர தப: க்ருதவதீ ஸதீ ॥ (59)
தேவ வர்ஷப்ரமாணேந வத்ஸராணாம் த்ரயந்ததா ॥ (59½)

(த)

முன்னொருகாலத்தில் சண்டிகாதேவியான துர்க்கா பகவதியானவள், ஸத்யகிரி க்ஷேத்ரத்தை யடைந்து ஸத்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து ஸத்யசைலாதிபனைப் பூஜித்து, தானவராஜனை மஹிஷாஸுரனை வதஞ்செய்யக்கருதி, அந்த ஈஶ்வரனைக்குறித்து தேவ வருஷத்தில் மூன்று வருஷ காலம் தபஸ் செய்தாள். (59½)

(ஸ-ம்)

ததா ஸத்யாசலாதீஶ: சண்டிகாதேவ்யை மஹேஶ்வர: ।
பரித்ராணாய தேவாநாம் ஸஜ்ஜநாநாம் த்விஜந்மநாம் ॥ (60½)

நிக்ரஹாய ச ஸுராரிபோர் மஹிஷஸ்ய துராத்மந: ।
ஸ்வஶக்திம் ஸ்வாயுதம் ஶூலம் தத்வா சக்ராயுதம் மஹத் ॥ (61½)

கணைஶ்ச ஶூலிநீம் ஸம்யக் ப்ரேஷயாமாஸ ஶங்கர: ।
உபாதிஶத் ததோ தேவ்யை பஞ்சாக்ஷர மஹாமநும் ॥ (62½)

(த)

அப்பொழுது அந்த மஹேஶ்வரன், தேவர்கள் ஸாதுக்கள் ப்ராஹ்மணர்கள் முதலானவர்களை ரக்ஷிப்பதற்காகவும், தேவ சத்ருவான துஷ்ட மஹிஷாஸுரனைக் கொல்வதற்காகவும் சண்டிகா தேவிக்கு தமது சக்தி சூலம் மஹத்தான கதை முதலிய ஆயுதங்களையும் ப்ரஸாதித்தருளி, நிகரற்ற பஞ்சாக்ஷர மந்த்ரத்தையும் உபதேசித்து, அநேக சூலிகிக்கூட்டங்களைச் சேர்த்துக்கொண்டு யுத்தத்திற்குப் போகும்படி அவளை பரமேஶ்வரன் அனுப்பினர். (62½)

(ஶ்லோ)

𑌅𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑍁𑌖𑌾𑌸𑍍𑌸𑍁𑌰𑌾𑌃 ।
𑌸𑍍𑌵𑌤𑍇𑌜𑌾𑌂𑌸𑌿 𑌸𑍍𑌵𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌿 𑌦𑌦𑍁𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈 𑌮𑍁𑌦𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥ (63½)

(உ)

அப்படியே ப்ரஹ்மா விஷ்ணு முதலாகிய மற்றைய எல்லா தேவர்களும் அதிஸந்தோஷத்துடன் தங்கள் தங்கள் தேஜஸ்ஸை யும் ஆயுதங்களையும் சண்டிகாதேவிக்குக் கொடுத்தார்கள். (63½)

(ஶ்லோ)

𑌤𑌦𑌾 𑌸𑌾 𑌚𑌣𑍍𑌡𑌿𑌕𑌾 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑍀 𑌶𑌿𑌵𑌾 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍁𑌶𑍋𑌭𑌿𑌤𑌾 ॥ (64½)
𑌮𑍁𑌹𑍁𑌰𑍍𑌮𑍁𑌹𑍁𑌰𑌟𑍍𑌟𑌹𑌾𑌸𑌂 𑌚𑌕𑌾𑌰 𑌜𑌨𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌮𑍍 ॥ (65)

(உ)

அப்பொழுது ஸர்வ தேவர்களுடைய சக்திகளையும் ஆயுதங்களையும் தரித்தவளும் மங்களத்தைக் கொடுக்கிறவளும், திவ்யமான ஆடை ஆபரணங்கள் சந்தனம் புஷ்பமாலை முதலானவைகளை தரித்திருப்பதால் அதிக காந்தியுடன் பிரகாசிக்கின்றவளுமாகிய அந்த சண்டிகாதேவியானவள், ஜனங்களுக்கு மிக்க ஆச்சர்யத்தைக் கொடுக்கக்கூடியதாய் அடிக்கடி அட்டஹாஸம் செய்தாள். (65)

(ஶ்லோ)

𑌤𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌰𑌾𑌤𑌿𑌃 𑌮𑌹𑌿𑌷𑍋𑌽𑌸𑍌 𑌮𑌹𑌾𑌸𑍁𑌰𑌃 ।
𑌸𑍍𑌵𑌸𑍈𑌨𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑌃 𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌯𑍋𑌦𑍍𑌧𑍁𑌂 𑌸𑌮𑍁𑌪𑌚𑌕𑍍𑌰𑌮𑍇 ॥ (66)

(உ)

தேவதைகளின் சத்ருவாகிய அந்த மஹிஷாஸுரன் துர்க்கா தேவியைப்பார்த்து கோபமடைந்து தனது ஸைன்யங்களால் சூழப்பட்டவனாய் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தான். (66)

(ஶ்லோ)

𑌤𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌯𑌕𑌰𑌾 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑍈𑌰𑌭𑌿𑌷𑍍𑌟𑍁𑌤𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾 𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑌾 𑌕𑌾𑌲𑌾𑌨𑌲𑍋𑌪𑌮𑌾 ॥ (67)

[illegible]
[illegible] (68)

(உ)

அப்பொழுது, ஸகல ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு ஸர்வ தேவதைகளின் ஸ்வரூபமாய், ஸமஸ்த தேவதைகளாலும் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு விளங்கும் துர்க்கா பரமேஶ்வரியானவள், ப்ரளயகாலாக்னிபோல கோபமுற்று அந்த மஹிஷாஸுரனுடைய சேனாதிபதியான சிக்ஷுரன் முதலிய அஸுரர்களையும், இன்னும் மற்ற கோடானுகோடி ஸைந்யங்களையும் நொடிப்பொழுதில் நாசம் செய்தாள். (68)

(ஶ்லோ)

[illegible]
[illegible] (69)

(உ)

பின் மஹிஷாஸுரன் சினங்கொண்டு மஹிஷ (எருமைக்கடா) ரூபத்தை எடுத்துக்கொண்டு ஸ்தாவரஜங்கமங்களான மூவுலகங்களையும் தனது பலத்தினால் கலங்கச் செய்தான். (69)

(ஶ்லோ)

[illegible]
[illegible] (70)
[illegible] (70½)

(உ)

அதனைப்பார்த்து துர்க்காதேவியானவள் கடுஞ்சினங்கொண்டு கையில் சூலத்தை ஏந்தி, மஹிஷாஸுரனைப் பாசத்தினால் கட்டி இழுத்துத் தன் பாதத்தினால் அவன் சிரஸை மிதித்து அமுக்கிக் கொண்டு, பெரிய சூலாயுதத்தினாலே (அவன் மார்பைக்குத்திப் பிளந்து) சீக்ரமாக அவனது ப்ராணனை அபஹரித்தாள். (70½)

(ஸ-ம்)

ததைவ புஷ்பவர்ஷாணி வவ்ருஷுஸ் த்ரிதிவௌகஸ: ।
ஸ்துத்வா ஶக்ராதயோ தேவீம் ஸ்வஸ்தாநம் ப்ராபுரஞ்ஜஸா ॥ (71½)

(உ)

அந்தக் காலத்தில் ஆகாயத்திலிருந்து இந்த்ராதி தேவர்கள் புஷ்பமாரி வருஷித்து தேவியை ஸ்தோத்திரம் செய்துவிட்டு தமது இருப்பிடஞ் சென்றார்கள். (71½)

(ஸ-ம்)

ததா ப்ரப்ருதி ஸா துர்கா மஹிஷாஸுரமர்திநீ ।
ப்ரதாநபூதா தேவாநாம் ஸத்யாத்ரௌ ஸம்வ்யவஸ்திதா ॥ (72½)

(உ)

அதுமுதல் மஹிஷாஸுரமர்த்தினியாகிய துர்க்காபரமேஶ்வரியானவள் ஸத்யாத்ரி என்னும் திருப்பரங்குன்றம் க்ஷேத்ரத்திலுள்ள எல்லா தேவதைகளிலும் ப்ரதானதேவதையாய் அவ்விடத்திலேயே ஸாந்நித்யமாய் விளங்குகின்றாள். (72½)

(ஸ-ம்)

புரா ஹிரண்யகர்ப்பஸ்ய ஸுதஸ்ய பரமேஷ்டிந: ।
விவாஹார்த்தம் ஸரஸ்வத்யா ரமயா ஸஹிதோ ஹரி: ॥ (73½)
ஸத்யாத்ரௌ ஸத்யஸங்கல்ப ஸ்ஸர்வதேவைஸ்ஸமாகத: ॥ (74)

(உ)

முன்னொரு காலத்தில் மஹாவிஷ்ணுவானவர், பரமேஷ்டி என்றும் ஹிரண்யகர்ப்பரென்றும் பெயர் பெற்ற தனது புத்திரரான ப்ரஹ்மதேவருக்கு ஸரஸ்வதி தேவியை விவாகம் செய்து வைக்கக்கருதி, லக்ஷ்மீதேவி ஸமேதராய், ஸமஸ்த தேவர்களையும் அழைத்துக்கொண்டு ஸத்யகிரிக்கு வந்து சேர்ந்தார். (74)

(ஸ-ம்)

உத்வாஹாதநந்தரம் ஸம்ப்ராப்ய ப்ரஹ்மாணம் ப்ரஹ்மணஸ்பதி: ।
ஹிரண்யகர்ப்போ பகவாந் ஸத்யாத்ரீஶ ப்ரஸாதத: ॥ (75)



திருப்பரங்குன்றம் க்ஷேத்ரத்தில் விக்னேஶ்வரர், துர்க்காதேவி, ஸத்தியாசலேஶ்வரர், ஸுப்ரஹ்மண்யர், மகாவிஷ்ணு, கல்பவிநாயகர், நந்திமண்டபம் முதலிய ஆலயம் அமைப்பு. [பக்கம் 90

[illegible] ।
[illegible] ॥ (76)

[illegible] ।
[illegible] ॥ (77)

[illegible] ।
* [illegible] ॥ (78)

(உ)

தன்னுடைய விவாகாரம்பத்தில் வேதங்களின் பதியாகிய விக்னேஶ்வர மூர்த்தியை பூஜை செய்து ஷாட்குண்ய பரிபூர்ணரான ப்ரஹ்மதேவரும் ஸ்ரீ ஸத்யாத்ரீச (ஸத்யகிரிநாத) ருடைய கிருபையால் ஸ்ரீ சக்ரபாணியால் அநுக்ரஹிக்கப்பட்ட பிரகாரம், ஸத்யகிரி ஸ்தலமாகிய திருப்பரங்குன்றத்தில், தேவஸேநாதிபதியான ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் ஸந்நிதானத்தில், திருக்கல்யாண மஹோத்ஸவ தரிசனத்தின் பொருட்டு வந்திருப்பவர்களான கஶ்யபர் அத்ரி பரத்வாஜர் விஶ்வாமித்ரர் ஸ்ரீவேதவ்யாஸர் வஸிஷ்டர் முதலான பூலோக தேவர்களான மஹரிஷிகளால் சூழப்பட்டவராய்க்கொண்டு, மங்களகரமான நல்ல தினத்தில் சுபமுகூர்த்தத்தில் ஸரஸ்வதி தேவியை விவாகம் செய்துகொண்டார். இவ்விதமாய் விவாக மங்களத்தையும் ஸ்ருஷ்டி கர்த்ருத்வத்தையும் ப்ரஹ்மதேவர் அடைந்தார். (78)

(8-ஏ)

[illegible] ।
[illegible] ॥ (79)

[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥
[illegible] ॥
[illegible] ॥

(உ)
காத்யாயனிதேவி பரமேச்வரனை அடைந்ததுபோல, வாக்ரூபிணியும் ஞானரூபிணியும் வேத வேதாந்தங்களைக் கரைகண்டவளுமான அந்த ஸரஸ்வதிதேவியும், அந்த ஸ்தலத்திலேயே ப்ரஹ்மதேவனை பதியாக அடைந்தாள். (79)

(ஸ-மூ)
ஸர்வே ச முநயஸ்தத்ர த்³ருஷ்ட்வா வைவாஹிகம் மஹம் ।
வேதோ³க்தைர் மங்க³ளைர் மந்த்ரைராஶீர்வாதா³ந் ப்ரசக்ரிரே ॥ (80)

(உ)
மஹரிஷிகளெல்லோரும் விவாஹ மஹோத்ஸவத்தை தரிசித்துவிட்டு பின்னர் மங்களகரமான வேத மந்த்ரங்களினால் ஆசிர்வாதங்களைச் செய்தார்கள். (80)

(ஸ-மூ)
ஸோऽபி லப்³த்⁴வாஶிஷம் தே³வீம் ஸர்வவித்³யாதி⁴பாம் விதி⁴꞉ ।
தீர்த²ம் ச தத்ர ஸம்ஸ்தா²ப்ய லோகாநுக்³ரஹ காம்யயா ॥ (81)
ஸ்வம் யயௌ ப்ரதிவஸ்த்வாஶு தேந தே³வ்யா ஸஹாத்மபூ⁴꞉ ॥ (81½)

(உ)
ஸ்வயம்புவாகிய அந்த ப்ரஹ்மதேவரும் ஸமஸ்த வித்யாரூபிணியாகிய ஸரஸ்வதி தேவியையும் மஹரிஷிகளின் ஆசிர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு, லோகாநுக்ரகார்த்தமாக அந்த க்ஷேத்ரத்தில் (1) "ப்ரஹ்மதீர்த்த"த்தையும் ஏற்படுத்திவிட்டு சீக்ரமாக தனது ப்ரஹ்மலோகத்தை அடைந்து தேவியோடு ஸுகமாயிருந்தார். (81½)

(ஸ-மூ)
தத்³தீர்த²ம் யத்ர காமாய மோக்ஷத³ம் ஸர்வதா³யகம் ॥ (82)
த்வம் ச ஸத்யாஶ்ரமம் ராஜந் க³த்வா க்ஷிப்ரம் ததந்தரம் ।
க்ருத்வா ஸ்நாநம் ப்³ரஹ்மகுண்டே³ தத்க்ஷணாந்முக்திமேஷ்யஸி ॥ (83)

(1) "சன்யாசிக்கிணறு" எனப் பெயர் வழங்கும் தீர்த்தம்.

(த)

“அரசனே! அந்த ப்ரஹ்ம தீர்த்தமானது தர்ம அர்த்த காம மோக்ஷமாகிற நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கும் சக்தியுள்ளது; மனோபீஷ்டங்களை பூர்த்திசெய்யும் மேன்மை பொருந்தியது. ஆகையால் நீரும் ஸத்யாசலத்திற்குப் போய் உத்தமமான அந்த ப்ரஹ்ம கூபத்தில் ஸ்நாநம் செய்வீராகில் சீக்கிரத்தில் சாபவிமோசனம் பெற்று வெண்குஷ்டம் நீங்கி ஸுகமடைவீர்.” (83)

(ஸம்)

𑌇𑌤𑍀𑌦𑌂 𑌸𑌮𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌪𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌿𑌷𑍍𑌠𑍋 𑌵𑍇𑌦𑌪𑌾𑌰𑌗𑌃 ।
𑌯𑌥𑌾𑌗𑌤𑌂 𑌯𑌯𑍌 𑌪𑌶𑍍𑌚𑌾 𑌦𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑍁 𑌮𑌤𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥ (84)

(த)

என்று இவ்வாறு அநுக்ரகித்துவிட்டு, வேதங்களைக் கரை கண்டவரும் அகஸ்த்ய முனிவரின் சிஷ்யருமான ப்ரஹ்மிஷ்டர் வந்தவழி சென்று, பின் அகஸ்த்ய மகரிஷியின் உத்திரவுப்படி நடந்தார். (84)

(ஸம்)

𑌰𑌾𑌜𑌾 𑌤𑍁 𑌤𑍇𑌨 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍋 𑌦𑍈𑌵𑌯𑍋𑌗𑌤𑌃 ।
𑌜𑌵𑌾𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌾𑌚𑌲𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍁𑌣𑍍𑌡𑌂 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌚 ॥ (85)

𑌨𑌤𑍍𑌵𑌾 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 ।
𑌸𑌂𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌦𑍍𑌯𑌶𑍍𑌶𑌾𑌪 𑌦𑍋𑌷𑌾𑌤𑍍 𑌕𑍁𑌰𑍂𑌪𑌤𑌃 ॥ (86)

(த)

அரசனும் ப்ரஹ்மிஷ்டரின் வார்த்தையைக் கேட்டு மிக்க ஸந்தோஷித்து அதிர்ஷ்டவசத்தால் சீக்கிரமாய் ஸத்யாசல க்ஷேத்ரமென்னும் திருப்பாங்குன்றத்துக்குப் போய் ப்ரஹ்மகுண்டத்தை அடைந்து நமஸ்கரித்து, ப்ராஹ்மணர்களின் அநுக்ரகத்தைப் பெற்று ஸங்கல்ப பூர்வமாய் அதில் ஸ்நாநஞ்செய்தமாத்திரத்தில் மஹரிஷி சாபத்தாலேற்பட்ட குரூபத்தினின்றும் விடுபட்டார். (86)

(ச்லோ)

ஸ்நாநாநி க்ருத்வா விப்ரேப்ய: ஸர்வதீர்த்தாந மாஹாத்ம்ய ச ।
நத்வா ஸத்யகிரீஶம் ச ஸுப்ரஹ்மண்யம் ப்ரணம்ய ச ॥ (87)

ஸந்துஷ்ட: ப்ரயயௌ ராஜா ஸ்வதேஶம் க்ஷேத்ரதீர்த்தயோ: ।
ப்ரஶம்ஸமாந: ஸ்வஜநைர் மஹிமாநம் மஹாத்புதம் ॥ (88)

(உ)

பின்பு மற்றைய தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்து ப்ராஹ்மணர்களுக்கு தானமளித்து ஸ்ரீஸத்யகிரீஶ்வரரையும் ஸ்ரீஸுப்ரஹ்மண்ய மூர்த்தியையும் தர்சித்து நமஸ்கரித்துவிட்டு, மிக ஸந்தோஷ சித்தனும் அந்த க்ஷேத்ரத்தினுடைய மஹிமையையும் தீர்த்தத்தினுடைய மஹா ஆச்சர்யத்தையும் குறித்து தன் பரிஜனங்களோடு புகழ்ந்து கொண்டாடிக் கொண்டு, கோவிதாரத்வஜ மகாராஜன் தனது தேசத்துக்குத் திரும்பிச்சென்றார். (88)

(ச்லோ)

ததா தத்ர ஸ்திதோஹம் ச க்ஷேத்ர தீர்த்த பராயண: ।
த்ருஷ்டஶ் ச ஸர்வம் ஆஶ்சர்யம் தீர்த்தே ப்ரஹ்மவிநிர்மிதே ॥ (89)
தவைவைதந்நயா ப்ரோக்தம் ப்ரஸங்காத் ப்ராஹ்மணோத்தம ॥ (89½)

(உ)

க்ஷேத்ரயாத்ரை தீர்த்தயாத்ரை செய்துகொண்டிருந்த நான் அக்காலத்தில் அவ்விடத்திலிருந்தேன். ப்ரஹ்மதேவரால் நிர்மாணம் செய்யப்பட்ட அந்த ப்ரஹ்மகூபத்தில் இப்போது சொல்லிவந்த ஆச்சர்யங்களெல்லாம் நடந்தபொழுது என்னால் நேரில் பார்க்கப் பட்டது. "ஹே ப்ராஹ்மணஸ்ரேஷ்டரே! வார்த்தையோடு வார்த்தையாய் இந்ததீர்த்த மகிமையாவற்றையும் உமக்குரைத்தேன்." (89½)

(ச்லோ)

இதி ப்ரஹ்மாணே விப்ரேந்த்ர ஶ்ராவயாமாஸ முநிபுங்கவ: ।
ஸர்வேஷாமபி ஸர்வஜ்ஞ தத்வா தேஷாம் ப்ரீதிம் த்விஜ ॥ (90½)
ஶோஷயித்வா ஸர்வேநாந்த்ர ஸத்யா கீர்த்திர் ஶ்ருதி லக்ஷணா ॥ (91)

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀 𑌶𑍈𑌵𑍇 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑌾𑌣𑍇
𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌮𑌹𑌿𑌮𑌾𑌖𑍍𑌯𑍇 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌵𑍈𑌭𑌵𑍇
𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

(உ)

என்று இவ்வாறு ப்ராஹ்மணஶ்ரேஷ்டரான தைவத்திய முனிவர் கூற, அவரை காலவமுனி புங்கவர் ஸர்வோபசாரங்களாலும் பூஜித்து விருந்தளித்து நமஸ்கரித்து அனுப்பிவிட்டு, ஸத்யாசலேஶ்வரரிடத்தில் விசேஷ பக்தியுடையவராகி ஸுகமாய் பக்திசெய்து வந்தார். (91)

நான்காவது அத்யாயம்
முற்றிற்று.

𑌅𑌥 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

(𑌮𑍂𑌲𑌂) 𑌸𑍂𑌤𑌃 ॥

𑌏𑌤𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍 𑌪𑌾𑌪𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌪𑌠𑌨𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌦𑌂 𑌦𑍇𑌵𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥ (1)

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑌮𑌾𑌜𑍇𑌷𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌚𑍍𑌛𑌿𑌵 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ।
𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌸𑌮𑌯𑍇𑌷𑍁 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑌠𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑍈𑌃 ॥ (2)
𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌾𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 ॥ (2½)

ஐந்தாவது அத்யாயம்.

(உரை) ஸூதர் சொல்கிறார்:—

இந்த க்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யமானது கேள்க்கப்பட்ட மாத்திரத்தில் பாபத்தை நாசஞ் செய்யத்தக்கது; தேவாலயத்தில் வைத்துப் படித்தால் தர்ம அர்த்த காம மோக்ஷமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் கொடுக்கத்தக்கது; ப்ராஹ்மண ஸமூகத்

திலாவது, விசேஷமாய் சிவஸந்நிதானத்திலாவது, ஸந்த்யா மடத்திலாவது, கலியுகத்தில் இஷ்டார்த்தங்களை அடையும் பொருட்டு ப்ராஹ்மணோத்தமர்களால் பக்தியோடு அவசியம் படிக்கத்தக்கது; பக்திமான்களால் கேட்கத்தக்கது. (2½)

(௬-௫)

𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑍌 𑌶𑌿𑌖𑌰𑍇 𑌰𑌮𑍍𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑍈𑌰𑍍𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑍇 ।
𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌨𑌵𑌕𑌂𑌚𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇𑌷𑍁 𑌤𑍀𑌰𑍍𑌥𑌤𑍍𑌰𑌯𑌂 𑌪𑌰𑌮𑍍 ॥ (3½)

𑌕𑍁𑌮𑌾𑌰𑍇𑌣 𑌕𑍃𑌤𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌤𑌪𑌃 𑌪𑍍𑌰𑌾𑌰𑌂𑌭𑌕𑌾𑌲𑌕𑍇 ।
𑌶𑍃𑌂𑌗𑌸𑍍𑌯𑍈𑌶𑌾𑌨 𑌦𑌿𑌗𑍍𑌭𑌾𑌗𑍇 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍀𑌤𑌿 𑌚 ॥ (4½)

𑌶𑌿𑌖𑌰𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑍇 𑌭𑌾𑌗𑍇 𑌹𑌰𑌿𑌶𑍍𑌚𑌂𑌦𑍍𑌰𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌤𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌪𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌸𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌮𑍍 ॥ (5½)
𑌹𑌰𑌿𑌶𑍍𑌚𑌂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑍃𑌪𑌤𑍇𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌯𑌤𑍍𑌵𑌦𑌾𑌯𑌕𑌮𑍍 ॥ (6)

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌪𑌰𑌮𑌰𑍍𑌷𑌯𑌃 ।
𑌪𑌰𑍍𑌵𑌤𑍋𑌪𑌰𑌿 𑌪𑌾𑌤𑌾𑌳 𑌗𑌂𑌗𑌾𑌖𑍍𑌯𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥ (7)
𑌏𑌤𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌤𑍍𑌰𑌯𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌯𑍇 ॥ (7½)

(௨)

சௌநகாதி மஹரிஷிகளே! ஸகல தேவர்களாலும் வணங்கப்பட்டதும் மிகுதியும் மேலானதுமாகிய "ஸத்யகிரி"யின் கொடுமுடியில் ஒன்பது விசேஷ தீர்த்தங்களிருக்கின்றன. அவைகளில் மூன்று தீர்த்தங்கள் மிக உத்தமமானவை; அவையாவன:—

குமாரஸ்வாமி தபஸ் புரிய ஆரம்பிக்கும் காலத்தில் கொடுமுடியின் ஈசான்ய பாகத்தில் ஏற்படுத்திய "ஸ்வாமி புஷ்கரிணி"யும் கொடுமுடியின் வடபாகத்தில் ஹரிச்சந்த்ர மஹாராஜாவினால் ஸேவிக்கப்பட்டு அவருக்கு ஸத்யம் தவறாமலிருக்கும் தன்மையை அளித்ததும், ஸத் சித் ஆனந்த வடிவமாயும் எல்லாதீர்த்தங்களுக்கும் மேலானதாயும் இருக்கிறதுமான, "ஸத்ய தீர்த்த"மும் பர்வதத்தின் உச்சியில் "பாதாள கங்கை" என்று பெயருடைய உத்தமமான

தீர்த்தமுமேயாம். இந்த மூன்று தீர்த்தங்களும் ரொம்பவும் பரிசுத்தமானவைகள் என்றும், மூன்று உலகங்களிலும் பேர்போனவைகள் என்றும் பெரியோர்கள் சொல்கின்றார்கள். (7½)

(உ-ஞ)

[illegible]
[illegible] (8½)
[illegible]
[illegible] (9½)

[illegible]
[illegible] (10½)
[illegible] (11)

[illegible]
[illegible] (12)
[illegible] (12½)

[illegible]
[illegible] (13½)

[illegible]
[illegible] (14½)

[illegible]
[illegible] (15½)

[illegible]
[illegible] (16½)

(உ)

இந்த மலைக்கு வாயுதிக்கில் "புத்ர தீர்த்தம்" என்றொரு விசேஷ தீர்த்தமிருக்கிறது. முன் ஒருகாலத்தில் "ஸௌபரி" என்பவர் அந்த

"புத்ர தீர்த்த"த்தில் ஸ்நாநம் செய்து வெகுபுத்ரர்களை அடைந்தார். கௌதம மஹரிஷியால்சபிக்கப்பட்ட (1) அகல்யை (தன் பார்யை) யானவள் சிலாரூபத்தைப் பெற்றிருந்து பின்னர், ஸ்ரீ ராமச்சந்தரனால் ஜீவதசையை அடைந்து அவருடைய அநுக்ரகத்தினால் **"புஷ்ப மார்தவதீர்த்த"**த்தில் ஸ்நாநம் செய்து தனது சரீரம் புஷ்பத்தினும் ம்ருதுவாகப் பெற்று, பதியாகிய கௌதமரை அடைந்தாள். உலகப்ரஸித்தமான அந்தத் தீர்த்தமானது இம்மலையின் ஈசான்ய திசையிலிருக்கின்றது. அதற்கு மேற்குதிக்கில் இருக்கின்ற **"வைத்ய ஸாரம்"** எனப் பெயர் பெற்ற தீர்த்தமானது தக்ஷப்ரஜாபதியினுடைய சாபத்தினால் சந்த்ரனுக்கு ஏற்பட்ட க்ஷயரோகத்தையும் அக்னிக்கு யேற்பட்ட த்வந்த்வ ரோகத்தையும் நிவர்த்தி செய்தது. சிவபெருமானுடைய பாதாரவிந்தத்தைத் தேடினமையால் தமக்கு நேர்ந்த (2) தாபத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு மஹாவிஷ்ணுவானவர் பரமசிவனுடைய அநுக்ரகத்தினாலே மிகஶ்ரேஷ்டமான பராசல க்ஷேத்ரத்தை அடைந்து **"ஹிமமார்தவ தீர்த்த"**த்தில் ஸ்நாநம் செய்து ஸுகத்தை அடைந்தார். அந்த தீர்த்தமானது இந்த ஸத்யகிரிக்கு ஆக்நேய திக்கிலிருக்கின்றது. பர்வதத்தின் மேலே **"பாதாள கங்கை"** என்னும் தீர்த்தமானது சங்கப்புலவர்களுள் ஶ்ரேஷ்டராகிய (3) "நக்கீரகவி"யின்பொருட்டு குஹஸ்வாமியின் ஆக்ஞையினால் வந்தது. கீழே சொல்லப்பட்ட இந்த ஐந்து தீர்த்தங்களும் இந்தப் பர்வதத்தோடு கூட வந்தன. மயில்வாகனராகிய குமாரஸ்வாமி அவைகளின் பெயரையும் மகிமையையும் விளக்கி வைத்தார். (16½)

---

(1) கௌதமமுனிவரின் பத்னியாகிய அகல்யாதேவிமேல் விருப்பங்கொண்ட தேவேந்த்ரன் குக்குடவேஷந்தரித்துக் கூவி, ப்ராஹ்ம முகூர்த்தத்துக்குமுன் கௌதமரை ஸ்நாநத்துக்கனுப்ப, அவன் அபிப்ராயத்துக்கு அகல்யை இணங்கியமையால், அவள் கல்லாய்ப்போகும்படி கௌதமரால் சபிக்கப்பட்டு, பின் ஸ்ரீராமபிரானால் சாப விமோசனம் அடைந்தாள்.

(2) இதின் வரலாற்றை மேல் 11-வது அத்யாயத்தில் காண்க.

(3) இதின் வரலாற்றை மேல் 7-வது அத்யாயத்தில் காண்க.

(மூ-ல)

காமதேநு: புரா ஶைலம் க்ஷீரேணாப்லாவயத்ததா ।
தந்நிர்மால்யம் ஸஶைலாக்ரே குண்டாகாரேண வர்த்ததே ॥ (17½)

க்ஷீராப்தி ஸ்நாநதோ தத்யம் ஸ்நாநபுண்யம் ப்ரதாஸ்யதி ।
ததீயம் விஶ்ருதம் லோகே க்ஷீரகுண்டம் ப்ரசக்ஷதே ॥ (18½)

ஶைலஸ்ய ஸோத்தர திக்பாகே விரிஞ்சேந க்ருதம் ஶுபம் ।
ததீர்த்தம் லோகவிக்யாதம் ப்ரஸித்தம் ரோகநாஶநம் ॥ (19½)

ஏதேஷ்வ நவதீர்த்தேஷு ஸக்ருத் ஸ்நாஸ்யதி யோ நர: ।
ஸ லபேத ஸகலம் காமம் யதேஷ்டம் நாத்ர ஸம்ஶய: ॥ (20½)

(உ)

முற்காலத்தில் காமதேனுவானது தனது பாலை இந்த மலையில் சொரிந்து அதைப் பரிசுத்தமாக்க, அந்த நிர்மால்யமானது ஒடிக்கிப்புரத்தில் ஓர் குட்டையாகத் தேங்கிற்று. அதில் ஸ்நானம் செய்தால் பாற்கடலில் ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும். அந்த ப்ரஸித்திபெற்ற "க்ஷீரகுண்ட" தீர்த்தமானது மலையின் ஆக்னேய திக்கிலிருக்கின்றது. மலையின் வடபாகத்திலே ப்ரஹ்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட "ப்ரஹ்மகுண்டம்" என்னும் புண்ய தீர்த்தமானது ஸர்வ ரோகங்களையும் நாசஞ் செய்வதாக உலகத்தில் ப்ரஸித்தி பெற்றுள்ளது. கீழே கூறப்பட்டுள்ள இந்த ஒன்பது தீர்த்தங்களிலும் எவரேனும் ஒருமுறையாவது ஸ்நாநம் செய்வாராயின், அவர் ஸர்வாபீஷ்டங்களையும் அடைவார் என்பதில் ஸந்தேகமே இல்லை. (20½)

(மூ-ல)

க்ஷணம் க்ஷணார்த்தமபி வா ஸத்யாத்ரௌ நிவஸந்தி யே ।
தேஷாம் ஸாரூப்ய முக்திஶ்ச பவிஷ்யதி ந ஸம்ஶய: ॥ (21½)

(உ)

இந்த ஸத்யகிரி என்னும் திருப்பரங்குன்றத்தில் ஒரு நிமிஷமேனும் அரை நிமிஷமேனும் வஸிக்கின்றவர்களுக்கு ஸாரூப்ய முக்தி கிடைக்குமென்பதில் ஸந்தேகமில்லை. (21½)

(மூ)

[illegible]
[illegible] (22½)
[illegible] (23)

(உ)

ஸர்வ ஸித்திகளையும் அளிக்கும் இந்த ஸத்யகிரி க்ஷேத்ரத்தைச்சுற்றிலும் தபோதனர்களாயும் மஹாத்மாக்களாயுமுள்ள வஸிஷ்டாதி மகரிஷிகள் வஸித்துக்கொண்டு சிவபூஜை செய்து கொண்டிருக்கின்றார்கள். (23)

(மூ)

[illegible]
[illegible] (24)

[illegible]
[illegible] (25)

[illegible]
[illegible] (26)

[illegible]
[illegible] (27)

[illegible]
[illegible] (28)

[illegible]
[illegible] (29)
[illegible] (29½)

(உ)

அந்த மஹான்களின் பெயரை எளிதில் சொல்லவும் ஸாத்யமில்லை. ஆயினும் ஸத்யாத்ரி வாஸிகளான அம்மஹார்ஷிகளில்

சிலரின் திருநாமத்தைச் சொல்கின்றேன்:— அவர்கள், "பரத்வாஜர்", "ஆங்கிரஸர்", "தூம்ப்ரர்", "மௌனகர்", "பார்க்கவர்", "அத்ரி", "வஸிஷ்டர்", "ஹாரீதர்", "மார்க்கண்டேயர்", "பராசரர்", "துர்வாஸர்", "கௌதமர்", "கர்கர்", "ஸநாநந்தர்", "சிரந்தனர்", "போதாயநர்", "மரீசி", "கபிலர்", "கண்வர்", "ரைப்யர்", "ஹாரீதகர்", "சங்குப்ரதாமங்கர்", "ஸங்க்ருதி", "மதுஷ்யந்தர்", "ஹவிஷ்யந்தர்", "தைவத்யுதி", "உபாப்தகர்", "அகஸ்த்யர்", "நாரதர்", முதலான முனிஶ்ரேஷ்டர்களே யாம். சிஷ்யப்ரசிஷ்யர்களோடு கூடினவர்களாயும் தத்வார்த்தத்தை உணர்ந்தவர்களாயும், வேத வேதாங்கங்களின் தத்வத்தை அறிந்தவர்களாயும், வேதோக்தமான மார்க்கங்களில் ப்ரவிர்த்திப்பவர்களாயும், ஸச்சிதானந்த ஸ்வரூபத்தை அடையவேணுமென்கிற இச்சையையுடையவர்களாயுமுள்ள இந்த மகரிஷிகளும், இன்னும் தத்வஞானிகளான அநேகம் மகரிஷிகளும், இந்த ஸத்யஞானகிரியில் ஸதா வஸித்துக்கொண்டிருக்கின்றார்கள், (29½)

(ச-ரு)

[illegible]
[illegible] (30½)

[illegible]
[illegible] (31½)

[illegible]
[illegible] (32½)

(உ)

அவர்களில் தேவரூபம் தரித்தவர் சிலர்; ம்ருகரூபம் பக்ஷி ரூபம் பூண்டவர் அநேகர்; முனி வேஷம் தரித்தவர் சிலர்; சித்தர் வேஷம் தரித்தவர் சிலர்; சிலர் வாயுவையும், சிலர் ஜலத்தையும், சிலர் இலை உதிர் சருகுகளையும் ஆகாரமாகக்கொண்டவர்கள். சாந்த்ராயண வ்ருதத்தைக் கைக்கொண்டவர் சிலர்; க்ருச்ச்ர வ்ருதத்தில் ஆசை கொண்டவர் சிலர்; சிவபூஜை செய்துகொண்டு எப்போ

மூதும் பக்தி மார்க்கத்தை அநுஷ்டித்து வருபவர் பலர். இவ்வாறு பலவிதங்களான ரூபங்களுடன் அநேகம் முனிவரர்கள் ஸத்யாத்ரி புண்ய ஸ்தலத்தில் வஸித்துக்கொண்டு வருகின்றார்கள். (32½)

(ஸ-ம்)

[illegible] ।

[illegible] ॥ (33½)

(உ)

அந்த க்ஷேத்ரத்தில் கிழக்கு முதலிய எட்டு திக்குகளிலும் இந்த்ராதி அஷ்டதிக்பாலகர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கங்கள், தர்சன மாத்திரத்தில் மனிதர்களுக்கு முக்தி அளிக்கத் தக்கவைகளாயிருக்கின்றன. (33½)

(ஸ-ம்)

[illegible] ।

[illegible] ॥ (34½)

(உ)

வ்ருதசிலர்களான சௌநகாதி மகரிஷிகளே! இந்த பர்வதத்தைச்சுற்றி நாலு திக்குகளிலும் ஒரு கூப்பிடுதூரம் வரையில் தர்மராஜாவின் உத்திரவின்பேரில் யமதூதர்கள் ப்ரவேசிக்க மாட்டார்கள். (34½)

(ஸ-ம்)

[illegible] ।

[illegible] ॥ (35½)

(உ)

இந்த க்ஷேத்ரத்தில் ப்ரதிதினம் வேதபாராயணம் செய்யும் ப்ராஹ்மணர்களின் ஸகல பாபங்களையும் ஸத்யேச்வரமூர்த்தி நாசம் செய்கின்றார். (35½)

(ஸ-ம்)

[illegible] ।

[illegible] ॥ (36½)

ஜ்ஞாத்வா ஸம்ஹ்ருத்ய வாநீய யோவா கோவா(அ)ப்யஸ்தீநி யதி ।
யாவந்தி க்ஷீயந்தே வாஸ்தி தாவந்தே ஶிவ மந்திரே ॥ (37½)

வஸேயு: ஸகலாந் போகாம்ஸ்த்வ ஸாக்ஷாத் ஸம்பூஜிதா: ஸுரை: ।
அந்தே ஸத்குலே ஜந்ம ஸம்ப்ராப்ய ப்ராஹ்மணாத்மஜா: ॥ (38½)

ஶிவ பக்தி பராஸ்ஸர்வே நித்யாநுஷ்டாந தத்பரா: ।
வேத ஶாஸ்த்ர புராணஜ்ஞா: புத்ர பௌத்ர ஸமந்விதா: ॥ (39½)
அந்தே ஶிவஸாயுஜ்யம் ப்ராப்நுயுர் த்விஜ புங்கவா: ॥ (40)

(உ)

ஹே மஹரிஷிகளே! கேளுங்கள்; எந்த இடத்தில் மரண மடைந்தவர்களானாலும் அவர்களுடைய பல் எலும்புகளை, அவர்களின் பிள்ளைகளேனும் சகோதரரேனும் இஷ்டர்களேனும் மற்றய எவரேனும் எடுத்து, குஹகங்கையிலாவது மற்ற புண்ய தீர்த்தத்திலாவது த்ரிடமாய்ப் புதைத்து (விதிப்படி) அடக்கஞ் செய்வார்களாயின், அவைகள் எவ்வளவு காலம்வரையிலிருக்கிறதோ அதுவரையில் உயிர் துறந்தவர்கள் சிவலோகத்தில் ஸகல போகத்தையும் அநுபவித்துக்கொண்டு வஸிப்பார்கள். தேவர்களாலும் பூஜிக்கப்படுவார்கள். இறுதியில் உத்தமமான குலத்தில் ப்ராஹ்மணர்களாய்ப் பிறந்து, சிவபக்தியில் சிறந்தவர்களாய், நித்யகர்மாநுஷ்டானங்களை ஶ்ரத்தையுடன் செய்கிறவர்களாய், வேத சாஸ்த்ர புராணங்களை அறிந்தவர்களாய், புத்ர பௌத்ராதிகளுடன் வாழ்ந்து, முடிவில் சிவஸாயுஜ்யத்தையும் அடைவார்கள். (40)

(த ரு)

குஹ்யதீர்த்தே ஸ்நாத்வா ஸந்த்யௌ வா ஶிவஸந்நிதௌ ।
தீர்த்தே ரோஹிணியாம் ஶ்ராத்தம் கரோதி பித்ரூந் நர: ॥ (41)

தஸ்யாநுபஶ்யா: பிதரோ நரகஸ்தா யதி ஸ்வயம் ।
பாபஶ்ராத்தேந யாத்வா ஸாத்வீ: ப்ராப்தாம் ஸுகா ॥ (42)

க்ஷணாதூர்த்வலோகாஸ்தா திவ்ய விமாநஸ்தா ஸுரை ஸம்பூஜிதா: ।
ஶிவஸ்ய பதம் ப்ராப்தா ஸந்தோஷேண வஸந்தி தே (43)

(உ)

அஶ்மந்தக வ்ருக்ஷத்தடியிலாவது சிவ ஸந்நிதானத்திலாவது தீர்த்தக்கரையிலாவது எவன் நியமத்துடன் ஶ்ராத்தம் செய்கின்றனோ அவனுடைய வம்சஸ்தர்களான பிதுர்க்கள் நரகத்தை அடைந்திருந்தாலும், கயாஶ்ராத்தத்தினாலேற்படும் த்ருப்தியை அடைந்து ஸந்தோஷித்து ஒரு க்ஷணத்திற்குள் நரகத்திலிருந்து வெளிப்பட்டு, திவ்ய விமானத்திலேறி நன்றாய்ப் பூஜிக்கப்பட்டு, சிவலோகத்தை யடைந்து அமிர்தபானம் செய்கிறவர்களாக ஆகிறார்கள்; நிச்சயம். (43)

(மூ-லி)

𑌪𑌿𑌣𑍍𑌡𑌪𑍍𑌰𑌦𑌾𑌶𑍍𑌚 𑌯𑍇 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌂 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑌵𑍇 ।
𑌸𑌤𑍍𑌯𑌕𑍂𑌪𑌤𑌟𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌗𑌯𑌾𑌪𑌿𑌣𑍍𑌡𑌪𑍍𑌰𑌦𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥ (44)

𑌉𑌪𑌰𑌾𑌗𑍇 𑌵𑍍𑌯𑌤𑍀𑌪𑌾𑌤𑍇 𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍌 𑌵𑌿𑌷𑍁𑌵𑍇𑌽𑌪𑌿 𑌵𑌾 ।
𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑍌 𑌦𑌰𑍍𑌶𑌯𑍋𑌗𑍇𑌷𑍁 𑌯𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌤𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥ (45)

𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍀𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌸𑌤𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌽𑌥𑌵𑌾 𑌨𑌰𑌃 ।
𑌪𑌾𑌤𑌾𑌲𑍇 𑌗𑌂𑌗𑌾𑌸𑌲𑌿𑌲𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌕𑍇 ॥ (46)
𑌪𑌿𑌤𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌤𑍃𑌪𑍍𑌤𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌰𑍍𑌗𑌯𑌾𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑍇 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ (46½)

(உ)

பிதுர்க்களை த்ருப்தி செய்யும்பொருட்டு பரிசுத்தமான ஸத்ய கூபக் கரையில் பிண்ட ப்ரதானம் செய்பவர்கள், கயாக்ஷேத்ரத்தில் பிண்ட ப்ரதானம் செய்தவர்களாகிறார்கள். க்ரஹண புண்யகாலத்திலும் வியதீபாதயோகத்திலும் மாஸப்பிறப்பு விஷு மன்வாதி புண்யகாலங்களிலும் அமாவாஸையிலும் ஸ்வாமிபுஷ்கரிணியிலாவது ஸத்யதீர்த்தத்திலாவது ப்ரம்மக்ஞானத்தை உண்டுபண்ணுகிறதாய் மலையின்மேலுள்ள பாதாளகங்கையிலாவது, எவன் தில தர்ப்பணம் செய்கிறானோ அவனுடைய பிதுருக்கள் கயாஶ்ராத்தத்தினாலேற்படும் திருப்தியை அடைகிறார்கள்; இது நிச்சயம். (46½)

(மூ)

𑌶𑌿𑌵𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌯 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌯 𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬𑌿𑌨𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑌸𑍍𑌯𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌂 𑌚 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌗𑍋𑌵𑌾𑌸𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥ (47½)

𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌕𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌨𑌸𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌦𑌾𑌯𑌕𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌯 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌯𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌨𑌰𑌃 ॥ (48½)

𑌶𑌤𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌕𑌾𑌶𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ।
𑌯𑌤𑍍𑌫𑌲𑌂 𑌤𑌦𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌦𑌾𑌮𑌿 𑌤𑍇 ॥ (49½)

(உ)

ஒருவன் தன் க்ஷேமத்தைக் கோரினவனாய், இந்த ஸத்யாசல க்ஷேத்ரத்தில் எல்லா தான்யங்களால் நிறைந்ததும் நல்ல செய்கால் நஞ்சையுமான பூமியையும், ஸகல ஸாமான்களும் நிறைந்து மனதுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கிற ஒரு நல்ல வீட்டையும், ரொம்ப பரிசுத்தனும் ஶ்ரோத்ரியனும் சிவபக்தனும் குடும்பியாயுமுள்ள ஒரு ஸத்ப்ராஹ்மணனுக்கு அன்புடன் தானம் செய்வானானால், அவன் காசி க்ஷேத்ரத்தில் ஸ்ரீ விஶ்வேஶ்வரர் ஸந்நிதானத்தில் நூறு ப்ராஹ்மண ப்ரதிஷ்டை செய்த பலனை நிச்சயமாய் அடைகின்றான். (49½)

(மூ)

𑌶𑌾𑌕𑌂 𑌤𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌪𑌕𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌂 𑌏𑌕𑌸𑍍𑌯𑍈𑌕𑌸𑍍𑌮𑍈 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌯𑍇 ।
𑌯𑍋 𑌦𑌦𑌾𑌤𑌿 𑌸𑌕𑍃𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 ॥ (50½)

𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑍁 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑍇𑌷𑍁 𑌚 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌭𑍋𑌜𑌨𑌾𑌦𑍍𑌯𑌤𑍍𑌤𑌤𑍍 𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ (51½)

(உ)

ஹே மஹரிஷிகளே! அந்த (ஸத்யக்ஷேத்ர) தீர்த்தத்தினால் பக்குவம் செய்யப்பட்ட அன்னம் சாகபாகாதிகளை ஒருவர் இங்கு ஒரு ப்ராஹ்மணனுக்கு ஒருதடவை தானஞ்செய்வாராயின், அவர், ஸர்வஸித்திகளையும் அளிக்கக்கூடிய இதர புண்ய க்ஷேத்ரங்களில்

ஸஹஸ்ர ப்ராஹ்மணபோஜனம் செய்து வைத்த பலனை அடைகிறார்; ஸந்தேகமேயில்லை. (51½)

(மூ-ம்)

க்ஷீரஸ்நபநஸ்ய தேவஸ்ய ஸந்நிதௌ ஶக்தித꞉ ஸ்வயம் ।
ஶக்த்யா தக்ஷிணயா ஸார்த்தம் கோதாநம் ச கரோதிய꞉ ॥ (52½)
ஸ கோடி குல ஸம்யுக்த꞉ ஶிவலோகே மஹீயதே ॥ (53)

(உ)

பாலபிஷேகத்தில் ப்ரியமுள்ள ஈஶ்வரனுடைய ஸந்நிதானத்தில் தன் சக்திக்குத்தக்க தக்ஷிணையோடுகூட கோதானத்தை பக்தியுடன் எவன் செய்கிறானோ, அந்த மனுஷ்யன், தன் வம்ஶஸ்தர்களாகிய கோடி தலைமுறை பிதுர்க்கள் நரகங்களில் கிடந்தபோதிலும் அவர்களைக் கரையேற்றி அவர்களுடன் தானும் சிவலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். (53)

(மூ-ம்)

யாவந்தி ரோமஜாதாநி வஸந்தி தேஹ ஸம்ஸ்திதாநி ।
தாவத்வர்ஷ ஸஹஸ்ராணி ஶிவலோகே வஸேத் த்ருவம் ॥ (54)
ந ஜாயதே புநர்பூமௌ தஸ்மிந்நேவ விமுச்யதே ॥ (54½)

தஸ்மிந் ஸத்யகிரௌ புண்யே தேவோத்யாந வநாதிகா꞉ ।
மாலாஶ்ச தீப தாநாநி யே குர்வந்தி நராதிகா꞉ ॥ (55½)
தேஷாம் பலம் கிமுச்யதே இதி வக்தும் ந ஶக்யதே ॥ (56)

(உ)

கோதானம் செய்த பசுவின் சரீரத்தில் எத்தனை ரோமங்களிருக்கின்றனவோ அவ்வளவு ஆயிரம் வருஷகாலம் தானம் செய்தவன் கைலாஸத்தில் சிவ ஸந்நிதானத்தில் வஸித்து பூமியில் பிறவாமல் அப்படியே முக்தியடைகிறான். அந்த ஸத்யகிரி புண்ய க்ஷேத்ரத்தில் ஈஶ்வரனுக்காக எவர்கள் நந்தவனம் உண்டுபண்ணுகின்றார்களோ, எவர்கள் மாலை கட்டுகின்றார்களோ, எவர்கள் தீபம் போடுகின்றார்களோ, அவர்களுக்குக் கிடைக்கும் பலம் இவ்வளவென்று சொல்ல முடியாது. (56)

(ஸ்லோ)

ப்ரதிமாஸம் ஸோமவாரே ஸத்யநாதஸ்ய ஶக்தித꞉ ।
க்ஷீரப்ரியஸ்ய தேவஸ்ய ய꞉ குர்யாத் அபிஷேசநம் ॥ (57)

ஸம்ஸ்க்ருத்ய சைவ நைவேத்யம் ஶாலிதண்டுலவாரிதம் ।
ஸவ்யஞ்ஜநம் ஸோபதம்ஶம் ஸக்ருதம் வ்யஞ்ஜநாதிகம் ॥ (58)

அந்நஸம்க்யாகவளாநி திவ்யவர்ஷாணி பூர்ணத꞉ ।
கைலாஸே ஶங்கராவாஸே நிவஸேத்ஸஹ ஶம்புநா ॥ (59)

(உ)

க்ஷீரப்ரியராகிய ஸத்யநாதேஶ்வரருக்குத் தன் சக்திக்குத் தக்கபடி ப்ரதிமாஸமும் ஸோமவாரத்தில் அபிஷேகமும், (கருடஞ்) சம்பா அரிசியினால் சமையல் செய்யப்பட்ட அன்னநைவேத்தியமும் பசுவின் நெய்யில் பாகம் செய்த பக்ஷணங்களும் சாகபாகங்களும் நல்ல ஊறுகாய்களும் எவன் நிவேதனம் செய்து வைக்கின்றானோ அவன், நைவேத்ய அன்னத்தில் எத்தனை பருக்கைகளிருக்கிறதுகளோ அவ்வளவு தேவ வருஷம் வரையில், பரமசிவனுக்கு வாஸஸ்தானமாகிய மகாகைலாஸத்தில் பரமசிவனோடு வாஸம் செய்கின்றான். (59)

(ஸ்லோ).

ஏகேந ஸோமவாரேண கோடிவாரஸமம் லபேத் ।
வாரேஷு ஸோமவாரஂச ஶிவஸ்யாதி ப்ரியாவஹ꞉ ॥ (60)

உமயா ஸஹிதோ தேவ꞉ ஸோம இதி கத்யதே ।
தஸ்மாத்தத்வாஸர பூஜா ச போகமோக்ஷ ப்ரதாயிநீ ॥ (61)

(உ)

ஒரு ஸோமவாரத்தில் (இந்த க்ஷேத்திரத்தில் பூஜைசெய்தால்) கோடிவாரம் (வேறிடத்தில்) பூஜைசெய்த பலன் கிடைக்கின்றது. வாரங்களுள் ஸோமவாரம் சிவபிரானுக்கு ரொம்பவும் ப்ரியமானது. பரமசிவன் உமாதேவியாரோடு கூடியிருப்பதால் "ஸோமன்"

எனப்படுகின்றார். ஆகையால் அந்த ஸோமவார பூஜையானது இஹலோகத்தில் போகங்களையும் பரலோகத்தில் மோக்ஷத்தையும் தரத்தகுந்தது. (61)

(மூலம்)

ஏதஸ்ய ஸ்நாநஸ்ய ஸாத்³ருஶ்யம் நாஸ்தி நைவ ப⁴விஷ்யதி ।
மாக⁴மாஸே து ஸம்ப்ராப்தே பக்ஷமாத்ரம் து ஸத்யபர்வதே ॥ (62)

ஸ்வாமிபுஷ்கரிணீதீர்தே² வாந்யதீர்தே² ப்ரயத்நத: ।
ஸூர்யோத³யே து ஸமயே ஸ்நாத்வா ஶ்ருத்வா கதா²ம் ஶுபா⁴ம் ॥ (63)

தா³நாநி த³த்வா விப்ரேப்⁴யோ யதா²ஶக்தி த்³விஜோத்தமா: ।
மாஸமேகம் த்ரிராத்ரம் வா ஹ்யேகராத்ரமதா²பி வா ॥ (64)

ஸர்வபாபவிநிர்முக்த: புத்ரபௌத்ராதி³ஸம்யுத: ।
ஸம்ஸாரே ஸுக²ம் ஸஹித ஸர்வைஶ்வர்ய ஸமந்வித: ॥ (65)
சிரம் ஜீவந் மஹாதே³வ யத்³ஹோமா * ஸநாதந: ॥ (65½)

(உ) ஹே சௌநகாதி மஹரிஷிகளே! இதற்கு ஸமமான க்ஷேத்திரம் இதற்கு முன்னுமில்லை, பின்னுமில்லை, (1) மாகமாஸத்தில் இந்த ஸத்ய பர்வதத்திலுள்ள ஸ்வாமி புஷ்கரிணியிலாவது அல்லது இதர புண்ய தீர்த்தங்களிலாவது ஸூர்யன் பாதி உதயமான காலத்தில் ஸ்நானம் செய்து சுபகதைகளைக் கேட்டு, ஒரு மாஸமாவது மூன்று அல்லது ஒரு நாளாவது அங்கிருந்து, ப்ராஹ்மணர்களுக்கு எதாசக்தி தானங்கள் கொடுப்பவன், ஸர்வ பாபங்களினின்றும் விடுபட்டவனாய் புத்ர பௌத்ராதி ஸர்வைஶ்வர்யங்

---

* ஹோம ஸ்வாப்⁴யாத³ — பாடாந்தரம்.

(1) மாகமாஸமாவது தைமாஸம் அமாவாஸை கழிந்த மறுநாள் ப்ரதமை முதல் மாசி மாஸம் அமாவாஸை வரை உள்ள காலம். இந்தக்காலத்தில் பிரதி காலே செய்யும் ஸ்நானத்திற்கு "மாகஸ்நானம்" எனப்பெயர்.

களும் நிறையப்பெற்று, ஸ்ரீ ஸ்கந்தபிரானுடைய அநுக்ரகத்திற்கும் பாத்திரனாய், முடிவில் உத்தமமான போகங்கள் அநுபவிப்பதற்கிடமான கைலாஸத்தை அடைகின்றான். (65½)

(ஶ்லோ)

[illegible] ।
[illegible] ॥ (66½)

[illegible] ।
[illegible] ॥ (67½)

[illegible] ।
[illegible] ॥ (68½)

[illegible] ।
[illegible] ॥ (69½)

[illegible] ।
[illegible] ॥ (70½)

(உ)

இந்த க்ஷேத்திரத்தில் கார்த்திகை மாஸம் கார்த்திகை நக்ஷத்திரத்தன்று, பஞ்சகவ்யங்களாலும் பஞ்சாம்ருதங்களாலும் ஶுத்தோதகங்களாலும் (நல்ல தீர்த்தங்களாலும்) பலோதகங்களாலும் (பழங்களின் சார்களாலும்) திவ்ய சந்தனாதிகளாலும் குமாரஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து, நல்ல வாஸனையுள்ள சந்தனமும் தாமரஸாதி புஷ்பஹாரங்களும் சாத்தி அர்ச்சனை செய்து, தூபதீபங்கள் எடுத்து, பருப்பு நெய் வ்யஞ்சனங்கள் நால்வகை பக்ஷணங்கள் சர்க்கரைப் பொங்கல் இவைகளோடு கூடிய சால்யன்னங்கள் நிவேதனம் செய்து நீராஜனைகள் காட்டி, எவன் பக்தியுடன் குஹஸ்வாமியைப் பூஜிக்கின்றனோ அவன், சீக்கிரமாய் ஆரோக்யம் தனதான்யாதி புத்ரபௌத்ராதிகளை அடைந்து, கங்காப்ரவாகம்போல் பெருகுகின்ற வித்தையினால் கீர்த்தி பெற்ற

வனாய், ஸர்வ பாபங்களினின்றும் விடுபட்டு, (காமக்ரோதாதி) சத்ருக்களையும் ஜயித்தவனாய், கடைசியில் குமாரபதத்தை அடைந்து ஸ்கந்த மூர்த்தியோடு அனந்தத்தை அநுபவிக்கின்றான். (70½)

(மூ)

[illegible] ।
[illegible] ॥ (71½)

[illegible] ।
[illegible] ॥ (72½)
[illegible] ॥ (73)

(உ)

ஸுப்ரஹ்மண்ய ஸந்நிதானத்தில் அமர்ந்து கொண்டு, பஞ்ச பாதகங்களையும் நாசம் செய்கிறதான ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹா மந்த்ரத்தையும், பூமியில் ஸர்வ ஸித்திகளையும் அளிக்கத்தக்க ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஷடாக்ஷர மஹாமந்த்ரத்தையும், ஆயிரத்தெட்டாவர்த்தி அல்லது நூற்றெட்டாவர்த்தியாவது பக்தியோடு ஜபம் செய்கிறவன், ஜனனமரணாதி பந்தங்களிலிருந்து விடுபட்டவனாகி (சிவஸாரூப்யத்தை) அகண்ட ஸச்சிதானந்த சிவாகாரத்தை நிச்சயமாய் அடைகின்றான். (73)

(மூ)

[illegible] ।
[illegible] ॥ (74)

[illegible] ।
[illegible] ॥ (75)
[illegible] ॥ (75½)

[illegible] ।
[illegible] ॥ (76½)

𑌤𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌤𑍁 𑌸𑌕𑍃𑌤𑍍 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌨𑍀𑌰𑍋𑌗𑍀 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌨𑌰𑌃 ।
𑌪𑍀𑌤𑍍𑌵𑍈𑌵 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌹𑌰𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑍋𑌕𑌹𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ (77½)

(உ)

அங்கே அத்யத்புதமாயும் இஷ்டஸித்திகளைப் பூர்த்தி செய்வதாயும் பரிசுத்தமானதாயுமுள்ள தீர்த்தமொன்று, ஸத்யாத்ரி நாதருடைய அபிஷேகத்திற்காக ஸ்கந்த மூர்த்தியின் க்ருபையால் உண்டாகி அம்ருதத்திற்கு ஒப்பான தீர்த்தமாக விளங்குகின்றது. தேவாம்ருதமாயிருக்கும் இந்த தீர்த்தத்திற்கு "ஸித்த தீர்த்தம்" என்றும் "ஞான தீர்த்தம்" என்றும் பெயருண்டு. அம்ருதத்துக்கு ஸமமாய் நல்லருசியும் வாஸனையும்பொருந்தி, குளிர்ந்ததாயும் பால் போன்றதாயுமுள்ள இந்த விசேஷ தீர்த்தமானது ஜகதீசனுடைய அபிஷேகத்திற்காக சிவலிங்கத்தின் இடது பக்கமாய் வாயு மூலையில் யானைதுதிக்கை ப்ரமாணம் எப்பொழுதும் பெருகிக்கொண்டேயிருக்கிறது. அந்த தீர்த்தத்தில் ஒருதடவை ஸ்நாநம் செய்பவன் ரோகமற்றவனாகின்றான். பானம் செய்தால் வியாதிகள் அகலும். அதை நினைத்த மாத்திரத்தில் ஸந்தோஷத்தை உண்டாக்கும். (77½)

(உ-எ)

𑌘𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌃 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌦𑌂 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌬𑌾𑌧𑌾𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌚 ॥ (78½)
𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌹𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑍇𑌃 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌂 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ॥ (79)

𑌭𑌯𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌪𑌿 𑌮𑌹𑌾𑌰𑍋𑌗𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌿𑌤𑌃 𑌸𑌂𑌕𑌟𑍇𑌭𑍍𑌯𑌃 ।
𑌪𑌾𑌯𑌾𑌦𑍇𑌷 𑌶𑌤𑍍𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌦𑍁𑌷𑍍𑌟𑍇𑌭𑍍𑌯𑍋 𑌰𑌾𑌜𑌾𑌗𑍍𑌨𑌿𑌜𑌲𑌤𑌸𑍍𑌕𑌰𑍈𑌃 ॥ (80)

𑌵𑌂𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌦𑍋𑌷𑍇 𑌰𑌂𑌯𑌤𑍍𑌵 𑌵𑌂𑌯𑌨𑌾𑌦𑍍𑌰𑍇𑌃 𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌿𑌕𑌾𑌃 ।
𑌤𑍇 𑌚 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 𑌨𑌰𑌾𑌃 𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌤𑍍 ॥ (81)

𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌸𑌕𑌲𑌾 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 ।
𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌦𑌃 ॥ (82)

அத: ப்ரதக்ஷிணம் கார்யம் ஸர்வகார்யார்த²ஸித்³த⁴யே ।
தத: ப்ரதக்ஷிணாத் ஸ்தா²நம் [illegible] மாப்நுயாத் ॥ (83)

(உ)

ஹே மஹர்ஷிகளே! கேளுங்கள்; மனுஷ்யர்களுக்கு ஸகல ஸித்திகளையும் தரத்தகுந்ததும் ஸர்வோபத்ரவங்களையும் நிவர்த்தி செய்கிறதும் அதிஉத்தமமும் ரஹஸ்யமுமான ஓர் தர்மத்தைச் சொல்கின்றேன். இந்த திருப்பரங்குன்றத்தில் கிரிப்ரதக்ஷிணம் (மலை ப்ரகாரம்) செய்வதை மஹா புண்யமென்று வித்வான்கள் கொண்டாடுகின்றார்கள். இவ்வுலகத்தில் மகாரோகங்களாலும் துக்கங்களாலும் பாபக்கூட்டங்களாலும் தாயாதிகளாலும் சத்ருக்களாலும் துஷ்ட ராஜாக்களாலும், தீயினாலும் ஜலத்தினாலும், திருடர்களாலும், மலடாயிருக்கநேரும் தோஷங்களாலும், கண் தெரியாத கஷ்டங்களாலும், விலங்கு முதலான உபத்ரவங்களாலும், பீடிக்கப்பட்ட மனிதர்கள் பக்தியோடு கிரிப்ரதக்ஷிணம் செய்தால் ஸகல துக்கங்களினின்றும் சீக்கிரத்தில் விடுபட்டு நிச்சயமாய் ஸுகத்தை அடைகின்றார்கள். முனிவர்களே! ஸர்வ ஸம்பத்துகளையும் பூர்ணமாய்ப் பெற்று நன்றாய் விருத்தியடைகின்றார்கள். ஆகையால் ஸர்வேஷ்ட ஸித்தியின் பொருட்டு கிரிப்ரதக்ஷிணம் செய்யத்தக்கது. மோக்ஷத்தில் இச்சையுள்ளவர்களும் கிரிப்ரதக்ஷிணம் செய்வதால் ஸத்யமாய் மோக்ஷமடைகிறார்கள். (83)

(ஶ்லோ)

ஶுக்ரவாரே விஶேஷேண ஸ்கந்த³ஷஷ்ட்²யாம் விஶேஷத: ।
கார்த்திக்யாம் க்ருத்திகாயோகே³ [illegible] ஸோமவாஸரே ॥ (84)

ததா² பர்வணி ஸங்க்ராந்தௌ ஸ்வஜந்மத்ரயேஷ்வபி ।
பௌஷ்யே ச புஷ்யநக்ஷத்ரே பா²ல்கு³ந்யாம் ப²ல்கு³நீதி³நே ॥ (85)
ப்ரதக்ஷிணம் ப்ரகுர்வந்தி [illegible] ஶாஶ்வத: ॥ (85½)

(உ)

விசேஷமாய் சுக்ரவாரத்திலும் அதிவிசேஷமாய் ஸ்கந்த ஷஷ்டியிலும், கார்த்திகை மாஸம் க்ருத்திகை நக்ஷத்திரத்திலும்,

திருப்பரங்குன்றத்திலுள்ள விசேஷ தீர்த்தங்களும், அங்கு அகஸ்த்யாதி முனிவர்கள் பலரூபங்கொண்டு தவம் புரிதலும், கிரிப்பிரதக்ஷிண மஹிமையும்.

[பக்கம் 112

[illegible]

ஸோமவாரத்திலும், பர்வகாலங்களிலும், ஸங்க்ரம காலங்களிலும் தனது ஜன்மானு ஜன்ம த்ருஜன்ம நக்ஷத்திரங்களிலும் தைமாஸம் புஷ்ய நக்ஷத்திரத்திலும் பங்குனி உத்திரத்திலும், கிரிப்ரதக்ஷிணம் செய்கிறவன் பாசத்தினின்று உடனே விடுபடுகின்ருன். (85½)

(ஶ்லோ)

𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌕𑌾𑌯𑌿𑌕𑌂 𑌪𑍂𑌜𑌨𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌅𑌂𑌗𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌕𑍇𑌷𑌾𑌂 𑌪𑌾𑌦𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌂 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 ॥ (86½)
𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑌕𑍃𑌤𑌂 𑌕𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑍇𑌵𑌾 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ॥ (87)

(உ)

வர்ணுச்ரமங்களுக்குத் தக்கபடி சில ஜனங்களுக்கு பாதப்ரதக்ஷிணமும், சிலருக்கு அங்கப்ரதக்ஷிணமும், ஸர்வத்ராளுக்கும் நமஸ்காரமும், ஸ்த்ரீகளுக்கு ஸேவையும், ஏற்பட்டிருக்கிறது. (87)

(ஶ்லோ)

𑌗𑌿𑌰𑍇𑌃 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌶𑍃𑌙𑍍𑌗𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 ।
𑌤𑌮𑍇𑌕𑌵𑌾𑌰𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑌂 𑌯𑌃 𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌤𑌿𑌭𑌕𑍍𑌤𑌿𑌤𑌃 ॥ (88)
𑌤𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 𑌕𑌰𑌤𑌲𑍇 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌦𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ (88½)

(உ)

கிரியின் மேற்குபாகத்திலுள்ள லிங்கஸ்வரூபமான கொடுமுடியை எவன் அதிபக்தியுடன் ஒரு முறையாவது நமஸ்கரிக்கின்ருனே அவனுக்கு மோக்ஷஸாம்ராஜ்யமானது நிச்சயமாய் கைமேல் ஸித்திக்கின்றது. (88½)

(ஶ்லோ)

𑌪𑌂𑌚𑌕𑍍𑌰𑍋𑌶𑌮𑌿𑌦𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑌂𑌚𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌶𑌤𑌾 𑌯𑍇𑌵 𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌦𑌾𑌯𑌿𑌨𑌃 ॥ (89½)

(உ)

பஞ்சமகாபாதகங்களையும் நாசஞ்செய்கின்றதான இந்த க்ஷேத்திரத்தின் விஸ்தீர்ணமானது அந்த ஸத்யக்ஞானகிரியைச் சுற்றி நான்குபக்கங்களிலும் ஐந்துக்ரோசம் (பத்து மைல்) விஸ்தீர்

ணம் உள்ளது. இதில் மரணமடைந்தவர்கள் ஸாயுஜ்ய பதவியை அடைகின்றார்கள். (89½)

(சி-ஸ்)

ஶிவக்ஷேத்ரேஷு மரணம் து³ர்லப⁴ம் ஸர்வதே³ஹிநாம் ।
தத்ராபி து³ர்லப⁴ம் ந்ருணாம் க்ஷேத்ரே ஸ்வாயம்பு⁴வே ததா² ॥ (90½)

(உ)

ஹே மகரிஷிகளே! மனிதர்களுக்குப் பொதுவாய் சிவ க்ஷேத்ரங்களில் மரணம் கிடைப்பதரிது. அதிலும் ஸ்வயம்பு க்ஷேத்ரத்தில் கிடைப்பது மிகவும் துர்லபமாம். (90½)

(ஸ-ஸ்)

மாநுஷ்யாத்³ ஹ்யார்ஷம் ஆர்ஷம் வா ஆர்ஷாத் ஸைத்³த⁴ம் விஶிஷ்யதே ।
ஸைத்³தா⁴த் தை³வம் பரம் ப்ராஹு: தை³வாத் ஸ்வாயம்பு⁴வம் பரம் ॥ (91½)

தத: பௌராணிகம் ஶ்ரேஷ்ட²ம் க்ஷேத்ரம் ஸர்வோத்தமோத்தமம் ।
பௌராணிகேஷு க்ஷேத்ரேஷு வாஸோ(அ)த்யதி⁴க து³ர்லப⁴: ॥ (92½)

(உ)

மனிதரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட சிவாலயத்தினும் ருஷிகளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட க்ஷேத்ரத்திற்கு மாஹாத்ம்யம் அதிகம். ஸித்தர்கள் ப்ரதிஷ்டை செய்த க்ஷேத்ரங்கள் அவைகளுக்கும் மேலானவை. தேவர்களின் ப்ரதிஷ்டை அவைகளினும் மேன்மை பொருந்தியவை. ஸ்வயம்பு க்ஷேத்ரம் எல்லாவற்றினும் சிறந்தது. அவைகளினும் புராணங்களிற் கூறப்பட்டவை (க்ஷேத்ர மாஹாத்ம்யத்தோடு கூடிஉள்ளன) ஸர்வோத்க்ருஷ்டமானவை. அப்படி புராணோக்தமாயுள்ள க்ஷேத்ரங்களில் வாஸம் கிடைப்பது ரொம்பவும் துர்லபம். (92½)

(ஸ-ஸ்)

விவிதா⁴நி ச விஸ்தா²நி ஸந்தி வாராணஸ்யாதி³நாம் க்ரமாத் ।
ததா²(அ)ப்யந்ய ஸ்ரஷ்டா ஸ்ம்ருதோ ஸந்நிதா⁴: ஸர்வதே³வாநாம்ய: ॥ (93½)
ஸந்தி ஸித்³தா⁴: கேசித் ஸாந்நித்⁴யம் ஸந்நிதா⁴நம் பரா: ॥ (94)

(உ)

அப்பேர்க்கொத்த புண்ய க்ஷேத்ரங்களில் வஸிக்க இச்சை உள்ளவர்களுக்கு இந்தக் கலியுகத்தில் அநேக இடையூறுகள் ஏற்படும். அங்ஙனமாயினும், முனி புங்கவர்களே! விஷயங்களில் இச்சை இல்லாதவர்களான (பற்றற்ற) சில மகான்கள், பூர்வ புண்யவசத்தினாலேயும் பரமசிவனுடைய அநுக்ரகத்தினாலேயும், மோக்ஷத்தை அடையக்கருதி இப்புண்ய க்ஷேத்ரங்களில், உலக விவகாரங்களில் ஆசையற்றவர்களாய் வஸிக்கின்றார்கள். (94)

(மூ)

தெஷு க்ஷெத்ரெஷு ஸர்வெஷு புராணொக்தெஷு
ஸத்தமா: ।
விஶிஷ்டம் வெத3நிஷ்டம் ச ஸத்யஜ்ஞாநகி3ரிஸ்த2லம் ॥ (95)

தத்ராபி வாஸொ மர்த்யாநாம் கலௌ தஸ்மாத் ஸுது3ர்லப4: ।
ய: கஶ்சில்லப4தெ நித்யம் ப3ஹுஜந்ம தப: ப2லை: ॥ (96)

(உ)

ஹே மஹர்ஷிகளே! க்ஷேத்ர மாகாத்ம்யங்களால் ப்ரஸித்தமான எல்லா க்ஷேத்ரங்களிலும், வேதங்களால் வெளியிடப்பட்ட இந்த ஸத்யக்ஞானகிரி (திருப்பரங்குன்றம்) க்ஷேத்ரமானது ரொம்பவும் உத்தமமானது. ஆகையால் அந்த க்ஷேத்ரத்தில் கலியுகத்தில் மனிதர்களுக்கு வாஸம் கிடைப்பது மிகவும் அரிது. அநேக கோடி ஜன்மங்களில் செய்த தவங்களின் பயனால் யாதாமொருவனுக்கு அந்த க்ஷேத்ரவாஸம் கிடைக்கிறது. (96)

(மூ)

ஶிவ க்ஷெத்ரெ நிவாஸெந ந கொऽபி நரகம் வ்ரஜெத் ।
கௌ3ரவஸ்ய து ஶம்பொ4ர்ஹெ தஸ்ய ஶம்பு4: ப்ரகீர்த்தித: ॥ (97)

ஸஹஸ்ரஸஹஸ்ர கொவாவஷி த்3வாராவர ரதொவஷிவா ।
ஸ்வர்ண ஶ்ரெயீ சித்யொவா வரதா3ர ரதொவஷிவா ॥ (98)
உச்யதெ நாத்ர ஸந்தே3ஹ ஶிவக்ஷெத்ர நிஷெவணாத் ॥ (98½)

(உ)

சிவ க்ஷேத்ரத்தில் வஸிக்கிற யாரும் நரகத்தை அடைய மாட்டார். உண்ணத்தகாத பதார்த்தங்களை உண்பவனும், கெட்ட நடத்தையுடையவனும், தங்கத்தைத் திருடுகிறவனும், கள்குடிப்பவனும், பிறர் மனைவியை இச்சிப்பவனும், பைரவ மூர்த்தியினுடைய சூலாயுதத்தின் நுனியினுற் குத்தி தண்டிக்கப்படுவதால் அந்தபாபங்களினின்று நிவர்த்தியாகின்முன், என்பதாய் சாஸ்த்ரங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்டபாபியானலும் சிவக்ஷேத்ரத்தில் வஸிக்கிறதினல் அந்தபாபங்களிலிருந்தும் கூட விடுபடுகின்முன். இந்த விஷயத்தில் ஸந்தேகமேயில்லை. (98½)

(ஶ்லோ)

இதம் பவித்ரம் நிகமார்த்தஸாரம் ஶ்ருண்வந்தி யே வா படந்தி
ஹ்ருஷ்டா: ।

ஸகலான் ஸமாஸாத்ய ஸம்ருத்திபோகான் ஸம்ஸாரபாஶாத்
ப்ரமுச்ய முக்தா: ॥ (99½)

இதி ஶ்ரீ ஶைவே மஹாபுராணே
ஸனத்குமார ஸம்ஹிதாயாம் ஸுப்ரஹ்மண்ய க்ஷேத்ர வர்ணனே
ஸத்யகிரி மாஹாத்ம்யே பஞ்சமோத்யாய:

(உ)

பரிசுத்தமாயும் வேதார்த்தஸாரமாயும் இருக்கிற இந்த க்ஷேத்ர மாகாத்ம்யத்தை பக்தியுடன் படிப்பவரும் கேட்பவரும் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய பரமாத்மாவின் க்ருபையால், இவ்வுலகில் ஸமஸ்த பாக்யங்களும் நிறையப்பெற்று, பின் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுகின்றுர்கள். (99½)

ஐந்தாவது அத்யாயம்

முற்றிற்று.

அத ஷஷ்டோऽத்யாய:.

(ச்லோகம்) ஸூத: ॥

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி தீர்த்தாநாம் வைபவம் ஶுபம் ।
ஸ்நாநகாலே விஶேஷேண ஸர்வேஷாம் ஶுத்திதாவஹம் ॥ (1)

ஆருவது அத்யாயம்.

(உரை) ஸூதமுனிவர் சொல்வது:—

இனி ஸ்நாநகாலத்தில் உச்சரித்தால் ஸகல துரிதங்களையும் நீக்கக்கூடிய மங்களகரமான தீர்த்தங்களின் வைபவத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். (1)

(ச்லோ)

ஸேதௌ சாபி ஸிதேபக்ஷே த்ருதீயாம் பஞ்சமீம் ததா ।
ப்ராதரேவ ஸமுத்தாய க்ருத பூர்வாஹ்ணிக க்ரிய: ॥ (2)

ஸத்யதீர்த்தே ததோ கத்வா ஸர்வபாபப்ரணாஶநே ।
நமஸ்க்ருத்ய விதாநேந ஸ்நாத்வா தீர்த்தாதிதேவதாம் ॥ (3)

ஸம்பூஜ்ய விதிவத்பக்த்யா கந்தபுஷ்பாக்ஷதாதிபி: ।
தத: ஸ்நாநம் ஸமாசர்ய மந்த்ரமேதம் ஶிரஸாவஹந் ॥ (4)

பூர்வாக்ஷத ஸமோபேதம் பாபா பம்பாக்ஷரம் ப்ரபவந் ।
ஸ்வாபாவம் ஸமுத்தாய ஸமுத்யம் ஹவ ஸம்யதாத் ॥ (5)

ஜந்மாந்தரே ஸஞ்சிதாநி ய: ஸ்நாதி ஸந்நிதௌ ஜந:।
ஜ்ஞாநாஜ்ஞாந க்ருதை: பாபைர்விமுச்ய ஜந்மக்ருதைரபி ॥ (6)

அர்க்யம் தத்த்வா தர்ப்பணாதீந் ஸர்வாந் ஸம்பாத்ய ஸாதரம் ।
விப்ரேப்யோ ஹவ்யம் தத்யாத் ஹவிஷ்யம் ச நஸம்ஶய: ॥ (7)

(உ)

சித்திரை மாஸம் சுக்லபக்ஷத்தில் பௌர்ணிமா திதியோடு கூடிய சித்ராநக்ஷத்திரத்தில் காலையிலெழுந்திருந்து ஸ்நாநாதி நித்ய கர்மாநுஷ்டானங்களைச் செய்துமுடித்துக்கொண்டு, ஸர்வ பாபங்களையும் நாசம் செய்கிறதான ஸத்ய தீர்த்தத்தை அடைந்து, மங்களத்தைக் கொடுக்கும் தீர்த்த தேவதையை சந்தனம் புஷ்பம் அக்ஷதைகளால் பக்தியுடன் விதிப்ரகாரம் பூஜித்து வணங்கி அதின் அநுக்ஞையைப் பெற்றுக்கொண்டு, சிரஸில் அருகம்புல் அக்ஷதையோடு கூடிய கோமயத்தை வைத்துக்கொண்டு, பஞ்சாக்ஷர மந்த்ரத்தையும் ஜபித்துக்கொண்டு, தான் செய்த பாபங்களையும் வாயால் உரக்கச்சொல்லிக்கொண்டு, ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடவேண்டி, தன் ஜன்மத்தில் ஒருமுறையாயினும் எவன் (அந்த தீர்த்தத்தில்) ஸ்நானம் செய்கின்றானோ அவன், முன் ஜன்மாக்களில் செய்ததுகளும் இந்த ஜன்மத்தில் செய்ததுமான சகல பாபங்களினின்றும் அந்தக்ஷணமே விடுபட்டவனாய், அஷ்டைஶ்வர்யங்களையும்பெற்று ஸுகமடைந்து, ஜனனமரணபந்தங்களிலிருந்து விடுபட்டவனாகின்றான். இதில் கொஞ்சமும் ஸம்சயமில்லை. (7)

(8-ம)

தஸ்மிந் தி3நே விஶேஷேண ஸத்யஶஸ்ய ஶிக2ரேஶிது: ।
ஸுப்3ரஹ்மண்யஸ்ய பூஜாயா ஶக்த்யா ப4க்திஸமந்வித: ॥ (8)

ருத்3ர ஸூக்த ஜபேநைவ பஞ்சப்3ரஹ்ம பாராயணாத் ।
க்ஷீரப்ரியஸ்ய தே3வஸ்ய ஸாம்ப3ஸ்ய பரமாத்மந: ॥ (9)

யோபி4ஷிச்ய நரோ ப4க்த்யா க்ஷீரதக்3தோ4தி3 ஸம்யுதம் ।
ஶாந்த்யர்த்த2ம் பாயஸம் சாபி யதி2ஸூபாந்தி வேத3நம் ॥ (10)
ஸ பிஶாசாஸ் பத3ம் ப்ராப்ய ஶிவேநஸஹ மோத3தே । (10½)

(உ)

விசேஷமாய் அந்த தினத்தில், க்ஷீரப்ரியநாதரும் அம்பிகாபதியான பரமாத்மாவும் மஹேஶ்வரரும் ஆனந்தரூபியுமான ஸத்யேஶ்வரருக்கும், ஸுப்ரஹ்மண்யமூர்த்திக்கும், துர்க்கா பரமேஶ்வரிக்

கும், பஞ்சகவ்யம் பஞ்சாமிர்தம் முதலிய அபிஷேக த்ரவ்யங்களை யதாசக்தி சேகரித்து, மிகுந்த பக்தியோடு ருத்ர ஸூக்த ஜபத்தினுல் அபிஷேகம் செய்து, நெய் பருப்பு முதலியவைகளுடன் சேர்ந்த சால்யன்னத்தையும் பாயஸத்தையும் நிவேதனம் செய்து பூஜிப்பவன் கைலாஸ பதவியை அடைந்து பரமசிவனேடு ஆனந்தமனுபவிப்பான். (10½)

(உ-ரு)

வைஶாகே க்ருஷ்ணபக்ஷே ச யதா ஸூர்யேந்து ஸங்கமே ।
தஸ்மிந்நேவ தினே மத்யாஹ்நே ஸத்யகூபே ச ஜலே ஶுபே ॥ (11½)

ஸ்நாத்வா காஸாரவஹ்நிஷ்யாம் யஃ கரோதி ச தர்ப்பணம் ।
த்ருப்திஸ் தஸ்ய பிதரோ யாந்தி கயாஶ்ராத்தேந யாத்ருஶீ ॥ (12½)
நரகாதபி நிர்முக்த்ய கச்சந்தி ஶிவமந்திரம் ॥ (13)

(உ)

வைகாசி மாஸம் க்ருஷ்ணபக்ஷத்தில் (தேய் பிறையில்) ஸூர்ய சந்த்ரர்கள் சேருகின்ற தினமாகிய அமாவாஸை யன்று மத்யாஹ்நத்தில், மங்களகரமான ஸத்யகூபத்திலும், ஸ்வாமிபுஷ்கரிணியாகிய சரவணப்பொய்கையிலும் ஸ்நாநம் செய்து திதைர்ப்பணம் செய்கிறவனுடைய பிதுர்க்கள், கயாசிராத்தத்தினுல் உண்டாகிற த்ருப்தியை அடைகின்றுர்கள். மேலும் அவர்கள் கொடிய நரகங்களை அடைந்திருந்தபோதிலும் அதினின்று வெளியேறி சிவலோகத்தை அடைகின்றுர்கள். (13)

(உ-சு)

ஶ்ருண்வந்து ருஷயஸ்ஸர்வே க்ஷேத்ரராஜஸ்ய வைபவம் ।
வேதாளாஸ்ஸாரகூஷ்மாண்டா ஶாகிநீ டாகிநீ க்ரஹாஃ ॥ (14)

ப்ரஹ்மராக்ஷஸ வேதாளா காகிநீ ஸ்கந்தஸங்கமாஃ ।
வீதிகாஶ்ச நராணாம் வை தேஹஸ்தா யே ஜநார்த்தநாஃ ॥ (15)
உச்சாட்யந்தே தத்க்ஷணாதேவ ஸத்யஶைலஸ்ய யோகதஃ ॥ (15½)

(உ)

"ஹே மகரிஷிகளே! க்ஷேத்ரங்களுள் மேலானதான திருப்பரங்குன்றத்தின் மகிமையை நீங்கள் எல்லோரும் கேளுங்கள். அபஸ்மாரம் குஷ்டம் முதலிய வ்யாதிகளாலும், சாகினீ டாகினீ முதலான பிசாசுக் கூட்டங்களாலும், ப்ரஹ்ம ராக்ஷஸ வேதாளம் மோகினி முதலான பூதக்கூட்டங்களாலும் உலகத்தில் பீடிக்கப்பட்ட ஜனங்கள், தெய்வாதீனத்தினால் ஒருமுறை இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வார்களேயானால் ஸமஸ்த துரிதங்களினின்றும் அந்த க்ஷணத்திலேயே விடுபடுவார்கள் என்று நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்". (15½)

(ஸ-ஞ)

[illegible]

[illegible] (16½)

[illegible]

[illegible] (17½)

[illegible] (18)

(உ)

முன்னொரு காலத்தில், லக்ஷ்மீஸம்பன்னனையும் ஸத்யஸந்தனையும் இந்த்ரியங்களை ஜயித்தவனையும், சாஸ்த்ரோக்தமான எல்லா தர்மங்களையும், அநுஷ்டிப்பவனையும், ஸத்யமே பேசுகிறவனையும் தான் ஆரம்பிக்கும் புண்ய கர்மாக்களை ஸரிவர நடத்தி முடிக்கும் தீரனையும், லௌகிக வ்யவகாரங்களிலும் விளையாட்டுப் பேச்சுகளிலுங்கூட பொய் சொல்லாதவனையும், மேலான அறிவுடையவனையும் உள்ள அயோத்யாதிபதியான ஹரிச்சந்த்ரன் எனப் பெயர் பெற்ற மகாராஜன், ஸத்யமே மேலான தர்மமெனக் கைக்கொண்டு இந்த பூமியைப் பரிபாலித்து வந்தார். (18)

(ஸ-ஞ)

[illegible]

[illegible] (19)

(உ)

ஒரு ஸமயத்தில் அந்த மஹாராஜன் தாம் கொண்ட ஸத்ய நிலைமையை பலப்படுத்திக்கொள்ளக் கருதித் தமது குலகுருவாகிய வஸிஷ்டமாமுனிவரை நமஸ்கரித்து வணக்கத்தோடு ப்ரார்த்தித்தார். (19)

(ஸ-ம்) ஹரிஶ்சந்த்ர உவாச ॥

ஸ்ரீமந் வஸிஷ்ட ஸர்வஜ்ஞ ஸர்வ வேதாந்த பாரக ।
ஸத்யவ்ரத ஶ்ரேஷ்ட ப்ரஹ்மந் ஹரிஶ்சந்த்ர ஸத்ய பராயண ॥ (20)

ஸர்வேஷாம் ஸ்தவதாம் ஸர்வேஷு ஸ்ருதிஷு ப்ரமாணம் ।
ஸர்வேஷாமேவ மந்த்ராணாம் தபஸாம் கர்மணாமபி ॥ (21)

ஸத்யமேவ பரம் ஜ்ஞேயம் இதி வேதாந்த ஸம்ஸ்தம் ।
தந்மே ப்ராப்யதாம் ப்ரஹ்மந் யதா பூர்வம் ப்ரஹ்மர்ஷே வத ॥ (22)

(உ) ஹரிச்சந்த்ரமஹாராஜன் கேட்கின்றார் :—

"ஷட்குணைஶ்வர்ய ஸம்பன்னரே! வேதவேதாந்தங்களைக் கரை கண்டவரே! ஸத்யத்தைக் கைக்கொண்ட ப்ராஹ்மணஶ்ரேஷ்டரே! ப்ரஹ்ம புத்ரா! எனக்கு எஜமானனும் குருவுமாகிய வஸிஷ்ட மஹரிஷே! எல்லா மந்த்ரங்களுக்கும் எல்லா தபஸ்களுக்கும் எல்லாக் கர்மாக்களுக்கும் ஸத்யமே மேலானதென்று அறியத் தகுந்ததாக வேதம் கல்பிக்கிறதென்று முன் ஒருஸமயம் தங்களால் க்ருபை கூர்ந்து சொல்லப்பட்டிருக்கிறது. ஹே ப்ரஹ்மரிஷே! அந்த ஸத்யமானது எனக்கு எப்படி க்ருடப்படும் என்பதைக் கிருபை செய்து சொல்லியருள வேண்டும்". (22)

(ஸ-ம்)

இதி தேந ப்ரார்த்திதஸ்து வஸிஷ்டஃ பரமார்த்த வித் ।
தமுவாச மஹாராஜம் ஸத்யவ்ரத பராயணம் ॥ (23)

(உ)

இவ்விதமாய் அரசனால் ப்ரார்த்திக்கப்பட்டவரும் பரமார்த்தத்தை அறிந்தவருமாகிய வஸிஷ்ட மஹரிஷியானவர், ஸத்யத்

தையே மேலான வ்ரதமாகக்கொண்ட அந்த ஹரிச்சந்த்ர மஹாராஜாவைப் பார்த்துச் சொல்லுகின்றார். (23)

(ஶ்லோ) வஸிஷ்ட: ॥

ஶிவக்ஷேத்ரேஷு ஸர்வேஷு ஸத்யஜ்ஞாநகிரிர்மஹாந் ।
ஸர்வோபநிஷதாம்ஸாரம் வர்ததே த்வாதஶாந்தகே ॥ (24)
ப்ரஹ்மண ஸ்த்ர மத்வாத்வம் ஸுப்ரஹ்மண்ய ஸ்தலே ஶிவே ।
ஸம்பூஜ்ய தேவதேவம் ஶிவம் ஸத்யாத்மகம் ஶுபம் ॥ (25)
ஸத்யம் ஸம்யோகவ ஶ்ரீமாந் ஸத்யமேவ வதாம்யஹம் ॥ (25½)

(உ)

"ஹே ஹரிச்சந்த்ர மஹாராஜனே! விராட்புருஷனின் ஸ்தானமாகிய "த்வாதசாந்த"மென்கிற "ஹாலாஸ்யக்ஷேத்ரத்தில்" அந்தர்கதமாய் (அடங்கியதாய்) சிவக்ஷேத்ரங்களுள் உத்தமமான "ஸத்யக்ஞானகிரி" (திருப்பரங்குன்றம்) என்னும் க்ஷேத்ரமானது எல்லா உபநிஷத்துக்களின் ஸாரமாகயிருக்கிறது. மங்களகரமான அந்த ஸுப்ரஹ்மண்ய ஸ்தலத்திற்கு நீர் போய், தேவதேவனும் ஸத்ய ஸ்வரூபியும் மோக்ஷஸ்வரூபியுமான பரமசிவனைப் பூஜை செய்வீரானால், ஸத்யம் தவறுதவரும் ஐஶ்வர்யவானும் ஆவீர் என நான் நிச்சயமாய்ச் சொல்லுகின்றேன்" என்று அநுக்ரகித்தார். (25½)

(ஶ்லோ)

இதி ஶ்ருத்வா ஹரிஶ்சந்த்ரோ வஸிஷ்டாத் ஸ்வபுரோஹிதாத் ।
நமஸ்க்ருத்ய பரம் பக்த்யா ஸ்வமந்த்ரிஷு ததோ ந்ருப: ॥ (26½)

யதாயாத்ரை ஸங்கோசேத தீர்த யாத்ரா பராயண: ।
ப்ராஹ்மணைஸ்ஸஹ வித்வத்பி: பந்துபி: பரிவாரித: ॥ (27½)

(உ)

தமது குலகுருவாகிய வஸிஷ்ட மஹரிஷியால் ஹரிச்சந்த்ர மஹாராஜாவானவர் இவ்விதம் சொல்லக்கேட்டதும், அவரை பக்தியோடு நமஸ்கரித்துப் பின்னர் தீர்த்த யாத்திரையில் ஆசையுற்று,

தனதான்யங்களை எடுத்துக்கொண்டு, பந்துஜனங்கள் தம்மைச் சூழ்ந்துவர, வித்வத் ஜனங்களான ப்ராஹ்மணர்களுடன் கூட சீக்கிரமாய் தன் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டார். (27½)

(மூ-ம்)

அயோத்யாயாஸ் ஸமாரப்ய யாவத் ஸத்யாசலாவதி ।
தீர்த்த ஸ்நாநாதிகம் குர்வந் தத்ர தத்ர விதாநத: ॥ (28½)

தாநாநி ச விஶிஷ்டாநி புராணோக்தாநி நித்யஶ: ।
குர்வந் விஶிஷ்ட பாத்ரேஷு ஸத்யவ்ரத த்ருடாஶய: ॥ (29½)

(உ)

அயோத்யாபுரி முதல் ஸத்யாசலம் வரையில் உள்ள க்ஷேத்ர தீர்த்தாதிகளில் விதிப்படி தரிசன ஸ்நாநாதிகள் செய்துகொண்டும், தனக்கு ஸத்யவ்ரதம் த்ருடமாகும் பொருட்டு புராணங்களில் சொல்லப்பட்ட மேலான மகாதானங்களை உத்தமமான பாத்ரங்களில் தினந்தோறும் தானம் செய்துகொண்டும் போனர். (29½)

(மூ-ம்)

மணிமுக்தா நதீ தீரே வ்ருத்தாத்ரிம் ப்ராப்ய ஸத்வரம் ।
ரோமஶம் தத்ர தம் த்ருஷ்ட்வா தபஸ்யந்தம் மஹாமுநிம் ॥ (30½)
நத்வா தஸ்ய யதாந்யாயம் ஸ்வாத்ம வ்ருத்தம் ந்யவேதயத் ॥ (31)

(உ)

மணிமுக்தாநதி தீரத்திலிருக்கிற வ்ருத்தாசல க்ஷேத்ரத்தை சீக்கிரமாய் அடைந்து, அங்கே தபஸ் செய்துகொண்டிருக்கும் "ரோமசமஹரிஷி"யைக்கண்டு விதிப்படி நமஸ்கரித்துத் தம்முடைய அபிப்ராயத்தை அவரிடம் தெரிவித்துக்கொண்டார். (31)

(மூ-ம்)

ஸமர்ஷிம் ப்ரஶஸ்யாத கருணாபூர்ண விக்ரஹ: ।
உவாச வசநம் தத்ர வ்ருத்தாத்ரீஶஸ்ய ஸந்நிதௌ ॥ (32)
ஶ்ரீமந்மஹாஶ்ரித்ய யுக்தஜ்ஞ கமண்டலு: ॥ (32½)

(உ)

அப்பொழுது வ்ருத்தாசலேஶ்வரர் ஸந்நிதானத்தில் வன்னி மரத்தடியில் தண்டகமண்டலுதாரியாய் அமர்ந்திருக்கும் ரோமச மகாமுனிவர் கருணையால் நிறைந்த மேனியை உடையவராய் ஹரிச்சந்த்ர மஹாராஜனைக் கொண்டாடி, அவரிடம் பின் வருமாறு வார்த்தை சொன்னார். (32½)

(ஶ்லோ) 𑌰𑍋𑌮𑌶𑌃 ॥

𑌹𑌰𑌿𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 𑌸𑍂𑌰𑍍𑌯𑌵𑌂𑌶 𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵 ।
𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌧𑌨𑍍𑌯𑌤𑌮𑍋 𑌲𑍋𑌕𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌭𑍂𑌭𑍁𑌜𑌾𑌮𑍍 ॥ (33½)

𑌸𑌤𑍍𑌯𑌾𑌧𑌾𑌰𑌂 𑌜𑌗𑌦𑌿𑌦𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑍋 𑌨𑍃𑌪 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌮𑌨𑍁𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑍈𑌃 ॥ (34½)

𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌤𑌪𑌃 ।
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌧𑌨𑌮𑍍 ॥ (35½)

𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 ।
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌕𑍍𑌰𑌤𑍁𑌃 ॥

𑌸𑌤𑍍𑌯𑌾𑌧𑌾𑌰𑌾 𑌹𑌿 𑌲𑍋𑌕𑌾𑌶𑍍𑌚 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌹𑌿 ।
𑌅𑌨𑍇𑌨 𑌤𑍇𑌨 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌲𑍋𑌕𑌾 𑌜𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑍇 ॥ (37½)

𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌚 𑌕𑍍𑌰𑌤𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌕𑍍𑌰𑌤𑍁𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
𑌸𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤 𑌮𑌹𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌕𑌲𑌾𑌂 𑌨𑌾𑌰𑍍𑌹𑌨𑍍𑌤𑌿 𑌷𑍋𑌡𑌶𑍀𑌮𑍍 ॥ (38½)

(உ) ரோமசமகரிஷி சொல்கின்றார் :—

"ஸூர்யவம்சத்தில் பிறந்த ஹரிச்சந்த்ர மகாராஜனே! உலகத்திலுள்ள எல்லா அரசர்களைக் காட்டிலும் நீர் மிகவும் பாக்யசாலி அல்லவா! இந்த உலகத்திற்கு ஸத்யமே ஆதாரமென வேதங்கள் முறையிடுகின்றன. வேதங்களில் சொல்லப்பட்ட புண்ய கர்மாக்களே உத்தம புருஷர்களால் செய்யத் தகுந்தவை. ஆகையால்

ஸத்யத்தைக் காட்டிலும் மேலான தர்மமுமில்லை; ஸத்யத்தைக் காட்டிலும் மேலான தபஸுமில்லை; ஸத்யத்தைக் காட்டிலும் மேலான தனமுமில்லை; ஸத்யத்தைக்காட்டிலும் மேலான ஞானமுமில்லை; ஸத்யத்தைக் காட்டிலும் மேலான இஷ்டருமில்லை; ஸத்யத்தைக்காட்டிலும் மேலான வேதமுமில்லை; ஸத்யத்தைக் காட்டிலும் மேலான தீர்த்தமுமில்லை; ஸத்யத்தைக்காட்டிலும் மேலான யாகமுமில்லை. உலகங்கள் ஸத்யத்தையே ஆதாரமாயுடையவைகளாக இருப்பதால் ஸத்யத்தைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை. இந்த ஸத்யத்தினாலேயே எல்லா உலகங்களும் உம்மால் ஜயிக்கப்பட்டது. எல்லா வேதங்களும் எல்லா யாகங்களும் எல்லா யாகங்களுடைய பலன்களும், ஸத்யவ்ரதபலனுடைய பதினாறிலொரு பங்குக்கு ஈடாக மாட்டாது". (38½)

(𑌶𑍍𑌲𑍋)

𑌸𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌭𑍂𑌪𑌤𑍇 ।
𑌪𑌰𑍋𑌪𑌕𑌾𑌰 𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌵𑌾 𑌦𑍍𑌵𑌯𑌂 𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑌪𑌾𑌸𑌮𑍍 ॥ (39½)

𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌰𑌪𑌿 𑌧𑌨𑍈𑌰𑍍𑌵𑌾𑌪𑌿 𑌪𑌰𑍋𑌪𑌕𑍃𑌤𑌿𑌮𑌾𑌵𑌹𑍇𑌤𑍍 ।
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌪𑌰𑍋𑌪𑌕𑌾𑌰𑌶𑍍𑌚 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌲𑍋𑌕𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑍌 ॥ (40½)

𑌅𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌮𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌟𑍀𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑌰𑍋𑌪𑌕𑍃𑌤𑌿𑌮𑌾𑌵𑌹 ॥ (41½)
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑍇𑌽𑌪𑌿 𑌨 𑌸𑌤𑍍𑌯𑌾𑌤𑍍 𑌭𑍍𑌰𑌂𑌶𑌿𑌤𑍋 𑌭𑌵 ॥ (42)

𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌯𑌮𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌾𑌮𑌪𑌿 ।
𑌶𑌿𑌵𑌸𑌂𑌪𑍂𑌜𑌾 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ (43)

(உ)

"ஆனாலும், ராஜஶ்ரேஷ்டனே! ஸத்ய வ்ரதத்திற்கு ஸமானமானது ஒன்றிருக்கின்றது. பரோபகாரம் செய்வதும் ஸத்யம் பேசுவதும் ஸமமானதாகும். ஆகையால் தன்னுடைய தனங்களை சிலவழித்தாவது, உயிரைக் கொடுத்தாவது, பரோபகாரம் செய்ய வேண்டியது. இதற்குமுன் சாஸ்த்ரங்களில் ப்ரஸித்தமாயிருந்த

ஸத்யமும் பரோபகாரமும் இப்போது உம்மால் உலகத்தில் ப்ரகாசப்படுத்தப்பட்டு ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் எப்போதும் ஸத்யம் பேசுகிறவராயும் பரோபகாரம் செய்கிறவருமாக நீர் இருக்கக் கடவீர். ப்ராணன் போகுங்காலத்திலுங்கூட ஸத்யம் தவராதிருப்பீராக. எல்லா வ்ரதங்களுக்கும் எல்லா தர்மங்களுக்கும் எல்லா தபஸ்களுக்கும் த்ருடமான பலத்தை உத்தேசித்து சிவ பூஜை செய்யவேண்டியது அவசியம். சிவ பூஜை செய்வதினால் எல்லாவற்றிற்கும் த்ருடமான பலன் உண்டாகிறது. (43)

(௧௭)

ശിവ ക്ഷേത്രേഷു പുണ്യേഷു പവിത്രേഷു വനേഷു ച ।
നദീതീരേഷു പുണ്യേഷു കാശ്യാദിഷു മഹത്സു ച ॥ (44)

വിഖ്യാതേ ക്ഷേത്രമുത്തമം രഹസ്യം സർവ്വദേഹിനാം ।
സത്യാചലാഖ്യം സർവ്വേഷു പുരാണേഷു പ്രകീർത്തിതം ॥ (45)

വേദാന്ത വാക്യൈർ വിവിധൈഃ പ്രതിപാദിതമവ്യയം ।
ഹാലാസ്യാന്തർഗ്ഗതം ഭൂമൗ പുണ്യാങ്കുര വിവർദ്ധിതം ॥ (46)

കൃതമാലാ പുണ്യനദീ ദക്ഷിണേ തീര ഉത്തമേ ।
പാദയോജനമാത്രേ വ സ്ഥിതം പരമ ഭാസ്വരം ॥ (47)

(௨)

"புண்ய க்ஷேத்ரங்களான காசி முதலான பரிசுத்தமான சிவ க்ஷேத்ரங்களுள் மேலானதும், புண்யமான வனம் மலை நதீதீரங்களோடு கூடினதும் வெகு ஜனங்களுக்குத் தெரியாமல் ரஹஸ்யமானதும், எல்லாப் புராணங்களிலும் ப்ரஸித்தி பெற்றதுமான "ஸத்யாசலம்" எனப் பெயர் பெற்ற "திருப்பரங்குன்றம்" என்னும் ஓர் மஹா க்ஷேத்ரமிருக்கின்றது. அந்த க்ஷேத்ரமானது அநேகமான வேதாந்த வாக்யங்களால் நிரூபிக்கப்பட்டது. நாசமில்லாதது (என்றைக்குமுள்ளது). ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திலடங்கியது. இந்த பூலோகத்தில் புண்யங்களுக்கு உத்பத்தி ஸ்தானமாயிருக்கிறது. "க்ருதமாலை" என்கிற புண்ய நதிக்குத் தென் பாகத்

தில் (1) கால் யோஜனை தூரத்தில் உத்தமமான இடத்தில் ரொம்ப ப்ரகாசமாயிருக்கிறது அந்த க்ஷேத்ரம்". (47)

(மூ-ம்)

கிரேஸ்து உத்தரபாகே ஸத்யதீர்த்தம் மஹத்தரம் ।
ஸாநுதேசே ஜலம் திவ்யம் நிஸ்ஸ்ருதம் ஶிரஶ்ருங்கதः ॥ (48)

தத்ர யே ஸ்நாந்தி மநுஜாः பதிதாச்சாபி பாபிநः ।
முச்யந்தே ராஜேந்த்ர ஜந்மாந்தரக்ருதாம்ஹஸः ॥ (49)

(உ)

"அவ்விடத்திலிருக்கும் கிரியின் வடக்குப் பக்கத்தில் அந்த மலையினுச்சியிலிருந்து வெளிப்பட்டு வந்திருக்கிற ரொம்ப பரிசுத்தமான ஜலமும் ரொம்ப உத்தமமுமான "ஸத்யதீர்த்த" மென்று ஓர் புண்ய தீர்த்தமிருக்கின்றது. ஜாதி கெட்டவர்களானாலும் மகா பாபிகளானாலும் எந்த மனுஷ்யர்கள் அந்த தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்கின்றார்களோ அவர்கள், ஹே மகாராஜனே! ஜன்மாந்தரங்களில் செய்த பாபங்களிலிருந்தும் முக்தர் ஆகிறார்கள்". (49)

(மூ-ம்)

அந்யாநி சைவ தீர்த்தாநி வித்யந்தே புண்யதாநி ச ।
தஸ்ய ஸ்தாநஸ்ய வைபவம் லோகே கஸ்யஸ்தாநஸ்ய வித்யதே ॥ (50

(உ)

"அந்த க்ஷேத்ரத்தில் இன்னும் அநேக புண்ய தீர்த்தங்களிருக்கின்றன. அந்த ஸ்தலத்திற்குண்டான மகிமை உலகத்தில் எந்த ஸ்லத்திற்கிருக்கின்றது. (ஒரு இடத்திலுமில்லை)". (50)

(மூ-ம்)

தத்ர கத்வா ஸ்வயம் ஶ்ரேஷ்டம் ஸர்வபாபஹரண்ய ஶ்ரேஷ்டம் ஶுபம் ।
காஸாரேஷு ஶிவபங்கஜாஞ்ச ஸ்நாத்வா தீர்த்தேஷு ஸர்வதः (51)
தவ ஸத்யவ்ரதம் ஸம்யாதः ப்ரஸாதாத் தாரகம் ॥ (51½)

(1) இரண்டரை மைல்.

அஹஞ்சைவாகமிஷ்யாமி மாகே மாஸி ந்ருபோத்தம ।
மாகஸ்நாநாய தத்ரத்ய தீர்த்தேஷு நியமாந்வித: ॥ (52½)
இத்யுக்த்வா ப்ரேஷயாமாஸ ந்ருபம் தம் முநிபுங்கவ: ॥ (53)

(உ)

"நல்ல வ்ரதமுடையவரே! அந்தப் புண்ய க்ஷேத்ரத்திற்கு நீர் சீக்கிரம் போய், அந்த ஸுப்ரஹ்மண்ய ஸ்தலத்திலிருக்கிற புண்ய தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்து, சிவபூஜை செய்யும். உம்முடைய ஸத்ய வ்ரதமானது சந்த்ர ஸூர்யர்கள் நக்ஷத்ரங்கள் உள்ளவரைக்கும் த்ருடமாக இருக்கும். ஹே ராஜேந்த்ரா! அங்குள்ள தீர்த்தங்களில் நியமத்துடன் மாக ஸ்நாநம் செய்வதற்காக நானும் மாக மாஸத்தில் அங்கே வரப்போகின்றேன்", என இவ்விதம் ரோமச மஹரிஷியானவர் அநுக்ரகித்து ஹரிச்சந்த்ர மகாராஜாவை யனுப்பினர். (53)

(மூ)

ஸ ததோ தேந ஹ்யநுஜ்ஞாதோ முநிநா ரோமஶேந ச
மணிமுக்தாநதீ தீர்த்தே ஸ்நாத்வா சைவ யதாவிதி ॥ (54)

வ்ருத்தாத்ரிநாதம் ஸம்பூஜ்ய தஸ்ய தேவீம் ச பார்வதீம் ।
தத்த்வாபரணம் திவ்யம் ஸ்வநாமாங்கிதமாதராத் ॥ (55)

க்ஷேத்ரே ததஶ்ச சித்ஸபாயாம் க்ருத்வா தாண்டவதர்ஶநம் ।
ஸ்வதேஶமகமத்ராஜா ஸத்யார்த்ரம் ப்ராப வாஞ்சிதம் ॥ (56)

(உ)

அந்த மகாராஜன் ரோமசமஹரிஷியால் இவ்வாறு ஏவப்பட்டவராகிப் (புறப்பட்டு) மணிமுக்தாநதி தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நாநம்செய்து வ்ருத்தாசலேச்வர மூர்த்தியையும் அம்பிகையாகிய பார்வதி தேவியையும் அன்புடன் பூஜை செய்து, தன் பெயராலடையாளம் செய்யப்பட்ட திவ்யமான ஆபரணத்தையும் ஸமர்ப்பித்துப் பின், சிதம்பரத்திற்கு வந்து திருவாதிரை உற்சவத்தன்று சிற்ஸபையில் ஆனந்தத்தாண்டவனை தரிசித்து, புண்யவானாகிய ஹரிச்சந்த்ர

மகாராஜன் தம் பரிஜனங்களுடன் திருப்பரங்குன்றம் வந்து சேர்ந்தார். (56)

(ஶ்லோ)

𑌏𑌵𑌂 𑌕𑍃𑌤𑌾𑌯𑌾𑌂 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌧𑍋 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌰𑍋𑌮𑌶𑍇𑌨𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌸𑌤𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌽𑌵𑌗𑌾𑌹𑍍𑌯 𑌚 ॥ (57)

𑌦𑌾𑌨𑌾𑌨𑌿 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 𑌬𑌹𑍂𑌨𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌸𑌂𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌦𑌾𑌨𑌧𑌰𑍍𑌮𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 ॥ (58)

𑌗𑍌𑌤𑌮𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑍍 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑍀𑌶𑌸𑍍𑌯 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ।
𑌜𑌟𑌾𑌵𑌲𑍍𑌕𑌲𑌿𑌨𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑌿𑌮𑍍 ॥ (59)
𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌮𑌕𑌰𑍋𑌦𑍍𑌧𑍀𑌮𑌾𑌨𑍍 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌪𑌾𑌰𑌗𑌮𑍍 ॥ (59½)

(உ)

ஐம்புலன்களையும் அடக்கியவரும் ஸத்யம் தவறாதவருமான அந்த பூபதியானவர், ஸர்வ ஸித்திகளையும் அடைந்தவராகத் தன்னைக் கருதினார். அவர் ரோமசமகரிஷியால் சொல்லப்பட்ட விதிப்ரகாரம் ஸத்ய தீர்த்தத்திலும் மற்றய தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து, வேதாத்யயன சீலர்களான ப்ராஹ்மணர்களுக்கு அநேக தானங்களைக்கொடுத்து தர்மங்கள் செய்து, பிறகு ஸத்யாத்ரீசருடைய ஸந்நிதானத்தில், ஜடை மரவுரி தரித்து சாந்தமூர்த்தியாயும் ஸந்தோஷமான முகத்தை உடையவராயுமுள்ள கருணாநிதியான கௌதம மஹரிஷியை தரிசனம் செய்து, வேதவேதாங்கங்களைக் கரைகண்டவரான அந்த மஹரிஷியை, புத்திமானாகிய அந்த மஹாராஜன் நமஸ்காரம் செய்தார். (59½)

(ஶ்லோ)

𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌣𑌮𑌨𑍍𑌤𑌂 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 ।
𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌧𑍋 𑌹𑌵𑍇𑌤𑍍𑌯𑌾𑌹 𑌹𑍍𑌯𑌾𑌶𑌿𑌷𑌂 𑌚 𑌯𑌥𑍋𑌦𑌿𑌤𑌮𑍍 ॥ (60½)
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌗𑍌𑌤𑌮𑌸𑍍𑌤𑍁 𑌸𑌾𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥ (61)

(உ)

தபோநிதியாகிய அம்முனிவரும் வணங்கி நிற்கும் அவ்வரசனைப் புகழ்ந்து "ஸத்யஸந்தனாகுக" என உசிதமாய் ஆசீர்வதித்துக் கருணை கூர்ந்து கூறுவாராயினர். (61)

(மூலம்) 𑌗𑍌𑌤𑌮𑌃 ॥

𑌹𑌰𑌿𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑍋𑌽𑌸𑌿 𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 ।
𑌤𑌵 𑌭𑌾𑌗𑍍𑌯𑍋𑌦𑌯𑌾𑌦𑌤𑍍𑌰 𑌹𑍍𑌯𑌾𑌗𑌤𑍋𑌽𑌸𑌿 𑌨𑌰𑌰𑍍𑌷𑌭 ॥ (62)

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜 𑌤𑌵𑌾𑌗𑌮𑌨𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ।
𑌅𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌤𑍍𑌯𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌸𑌾𑌮𑍍𑌬𑌸𑍍𑌯 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑍇𑌃 ॥ (63)

𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌪𑍂𑌜𑌾𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌯𑌥𑌾𑌬𑌲𑌮𑍍 ।
𑌤𑍇𑌨 𑌤𑍇 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑌤𑍁𑌲𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ (64)
𑌸𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌯 𑌚𑌾𑌪𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚 𑌮𑌾𑌨𑌦 ॥ (64½)

(உ) கௌதம மஹரிஷி சொல்கின்றார் —

"உத்தம வ்ரதம் பூண்ட ஹரிச்சந்த்ர பூபதியே! நீரே பாக்யசாலி. ஹே ராஜஶ்ரேஷ்டா! உமது பாக்யவசத்தினால் இந்த க்ஷேத்ரம் வந்து சேர்ந்தீர். ஹே மஹாராஜனே! உமது வரவின் காரணம் முழுமையும் தெரிந்துகொண்டேன். ஆகையால் கருணைக்கடலும் அம்பிகாபதியுமாகிய ஸத்யாசலேஶ்வர மூர்த்திக்கும் ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்கும் உமது சக்திக்கேற்ப விதிப்ரகாரம் பூஜை செய்வீராக; அதினால் உமக்கு அளவற்ற கீர்த்தி உண்டாகும்; ஸந்தேகமேயில்லை. உமது ஸத்ய வ்ரதமும் திடப்படும், ஸகல ஸித்திகளையும் அடைவீர்", என ஆசீர்வதித்தனர். (64½)

(மூலம்)

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌗𑍌𑌤𑌮𑍇𑌨𑌾𑌥 𑌹𑌰𑌿𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌮𑌤𑌿𑌃 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑌾𑌹𑍂𑌯 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑌂 𑌜𑌵𑌾𑌤𑍍 ॥ (65½)

𑌆𑌲𑌯𑌂 𑌕𑌾𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌮𑌣𑍍𑌡𑌪𑌾𑌦𑍀𑌨𑌿 𑌗𑍋𑌪𑍁𑌰𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌵𑌰𑌣𑌾𑌨𑌿 𑌚 ॥ (66½)
𑌤𑍋𑌰𑌣𑌾𑌨𑌿 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌸𑍋𑌪𑌾𑌨𑌪𑌥𑌵𑍀𑌥𑌿𑌭𑌿𑌃 ॥ (67)

(உ)

கௌதம மஹரிஷியால் இவ்வாறு உபதேசிக்கப்பட்ட மஹா புத்திசாலியான ஹரிச்சந்த்ர மஹாராஜன், பிறகு சில்பஶ்ரேஷ்டனான விஶ்வகர்மாவை வரவழைத்து, ஸர்வ லக்ஷணங்களும் பொருந்தியதாய் முக்யமான ஐந்து மண்டபங்களுடன் கூடியதாயும் ஏறி இறங்குவதற்கு வரிசையாகக் கட்டப்பட்ட படிக்கட்டு வரிசைகளோடு கூடியதாயும் ப்ராகாரங்கள் திருமதில்கள் அழகான கோபுரங்கள் இவைகளோடு கூடியதாயுமுள்ள ஓர் ஆலயத்தைக் கட்டுவித்தார். (67)

(ஶ்லோ)

[illegible]
[illegible] (68)

[illegible]
[illegible] (69)

[illegible]
[illegible] (70)

[illegible]
[illegible] (71)

[illegible]
[illegible] (72)

[illegible]
[illegible] (73)

[illegible]
[illegible] (74)

[illegible]
[illegible] (75)

𑌪𑌦𑌕𑌂 𑌚 𑌸𑍍𑌵𑌨𑌾𑌮𑌾𑌙𑍍𑌕𑌂 𑌹𑌾𑌰𑌂 𑌚𑍈𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌯 𑌚 ।
𑌅𑌨𑌘𑌂 𑌰𑌤𑍍𑌨𑌖𑌚𑌿𑌤𑌂 𑌕𑌿𑌰𑍀𑌟𑌂 𑌶𑌂𑌭𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥ (76)

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑍍𑌯𑌾𑌯 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌭𑍂𑌷𑌣𑌾𑌨𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌦𑌦𑍌 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌾𑌣𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌹𑌰𑌿𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ (77)

(உ)

பின்னர் அந்த ஹரிச்சந்த்ர மஹாராஜன், அம்பிகையோடு கூடிய பரமாத்வஸ்வரூபியான ஸத்யாசலேஶ்வர மூர்த்திக்கு அபிஷேகம் செய்யவேண்டியதற்காக, நிர்மலமானதும் வெளுப்பானதும் ஸகல பாபத்தையும் போக்கடிக்கிறதுமான ஸத்ய தீர்த்தத்திலிருந்து பரிசுத்தமான வஸ்திரத்தினால் வடிகட்டப்பட்ட தீர்த்தத்தை ஆசாரத்துடன் ப்ராஹ்மணர்களால் எடுத்துக் கொண்டு வந்து, நல்லவாசனையுள்ள திவ்ய கலவைச்சந்தனம் செய்து, சந்தனம் குங்குமம் வஸ்த்ரம் நூல் இவைகளால் அலங்கரிக்கப்பட்ட நூற்றெட்டு பூர்ண கும்பங்களை அபிஷேக விதிப்படி ஸ்தாபனம் செய்து, ப்ராஹ்மணோத்தமர்களான வித்வான்களால் ஸ்ரீருத்ரமந்த்ரத்தை ஜபிக்கச் செய்து, அந்த தீர்த்தங்களாலும் பஞ்சாம்ருதங்களாலும் பஞ்சகவ்யங்களாலும் பரமசிவனுக்கு அபிஷேகம் செய்து, தன் சக்திக்குத்தக்கபடி வஸ்த்ரம் சந்தனம் அக்ஷதை புஷ்பம் திவ்யமான ஆபரணங்கள் சாத்தி, தூப தீபாதி உபசாரங்களால் பக்தியோடு நன்றாகப் பூஜைசெய்து, நெய் பருப்போடு சேர்ந்த திவ்யான்னம் பரமான்னத்தோடு அதிரஸம் முதலான பக்ஷணங்கள், அநேகவிதமான பழங்கள் இவைகளை நிவேதனம் செய்து, ந்ருத்த கீதவாத்யங்களோடு கல்பூரஹாரத்தி எடுத்து அநேக விதங்களான ப்ரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்ராதிகளால் ஸத்யாசலேஶ்வர மூர்த்தியை ஸந்தோஷிக்கச் செய்து, தனது ஸத்ய வ்ரதம் த்ருடமாகவேண்டியதாய்க்கருதி தேவேசனாகிய பரமசிவனைப் பிரார்த்தனை செய்து, பிறகு தன்னுடைய பெயரால் அடையாளம் செய்யப்பட்டதான உத்தமமான பதக்கமென்கிற திவ்யாபரணத்தை ஸமர்ப்பித்தார். விலை மதிக்கத்தகாத ரத்னங்களாலிழைக்கப்பட்ட ஹாரத்தை ஆனந்தத்தாண்டவ மூர்த்திக்கு ஸமர்ப்பித்தார். உத்தமலக்ஷணங்கள் பொருந்தியதும் மதிப்பிற்

கடங்காததுமான ரத்னங்கள் இழைத்த கிரீடத்தையும், இன்னும் விசேஷமான அநேக திவ்ய ஆபரணங்களையும், திவ்ய வஸ்த்ரங்களையும், மஹாத்மாவான ஹரிச்சந்த்ர மஹாராஜன் ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்கு ஸமர்ப்பித்தார். (77)

(ஸ-ம்)

ஶைவாகம விதாநஜ்ஞை: தீக்ஷிதைர் வேதவித்தமை: ।
ஆதிஶைவ த்விஜை: ஶாஸ்த்ர புராணஜ்ஞைர் மஹாத்மபி: ॥ (78)
ரதோத்ஸவம் சகாராயம் க்ருத்வா ஸுந்தரம் மஹத் ॥ (78½)

(உ)

பின்னர் ஹரிச்சந்த்ரபூபதியானவர் அழகான ஒரு பெரிய ரதத்தை நிர்மாணம் செய்வித்து, சைவாகம விதானங்களை அறிந்தவர்களும் வேதத்தைப்பயின்றவர்களும் சாஸ்த்ர புராணங்களை நன்கு உணர்ந்தவர்களும் சிவதீக்ஷை பெற்ற மகான்மாக்களுமாகிய ஆதிசைவத்விஜர்களின் உதவியால் ரதோத்ஸவம் நடாத்தி வைத்தார். (78½)

(ஸ-ம்)

மகரஸ்தே திவாநாதே ஶுக்லபக்ஷே ஶுபாந்விதே ।
உத்தரப்ரோஷ்டபத்யாம் ச யுக்தமாநே ரவௌ ஶாஸ்த்ரத: ॥ (79½)
தத்ரைவ மங்களம் க்ருத்வா வாத்ய பஞ்ச புரஸ்ஸரம் ।
ஹைமுராஸ்த்ர தாடநம் க்ருத்வா த்வாரே பலிமேவ ச ॥ (80½)
ஸாயம் ப்ராத: ப்ரத்யஹம் ச ஹோமமேவ புரஸ்ஸரம் ।
ஸ்வஸ்திபி: புண்யகோஷைஶ்ச ந்ருத்யகீத ஸமந்விதை: ॥ (81½)
க்ராமம் ப்ரதக்ஷிணீக்ருத்ய ஸர்வமங்கள ஸம்யுதம் ।
ப்ராஹ்மணாநாம் வேதகோஷா அநாதாநாம் ச போஜநம் ॥ (82½)
காரயித்வா மஹாராஜ ஶ்ரத்தாபக்தி ஸமந்வித: ।
பாநபக்ஷாதிபிர் பூர்ணை (1) ரதயாத்ராமகாரயத் ॥ (83½)

---

(1) ரதோத்ஸவ — பாபநாஶநம்.

𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑍈𑌶𑍍𑌚 𑌵𑌾𑌦𑍍𑌯𑌘𑍋𑌷𑍈𑌃 𑌶𑌙𑍍𑌖𑌕𑌾𑌹𑌳𑌭𑍇𑌰𑌿𑌕𑍈𑌃 ।
𑌭𑍇𑌰𑍀𑌮𑍃𑌦𑌙𑍍𑌗𑌪𑌣𑌵𑌗𑍋𑌮𑍁𑌖𑌾𑌦𑌿𑌵𑌿𑌭𑍇𑌦𑌿𑌤𑌃 ॥ (84½)

[illegible] ।
[illegible] ॥ (85½)
[illegible] ॥ (86)

(உ)

தைமாஸத்தில் மங்களகரமான சுக்லபக்ஷத்தில் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தன்று ரக்ஷாபந்தனம் வாஸ்து பூஜை அங்குரப்ரஷேபா (பாலிகை தளித்தல்) முதலிய பூர்வாங்கங்களை முன் செய்து முடித்துக்கொண்டு, பின்னர் சாஸ்த்ர ப்ரகாரம் த்வஜாரோஹணம் செய்வித்து (கொடி ஏற்றி), பிரதிதினமும் காலை மாலை இரண்டு ஸந்த்யா காலங்களிலும் பேரீவாத்யம் முழங்க ஹோமம் முடித்து அஷ்டதிக் பாலர்களுக்குபலிபோட்டு, வாத்யம் நாட்டியம் ஸங்கீதம் ஸ்வஸ்திவாசனம் முதலான வைபவங்களுடன் பகவானை எழுந்தருளச் செய்து மிகுந்த பக்தி பூர்வமாய் கிராம ப்ரதக்ஷிணம் செய்வித்து, ப்ராஹ்மணர்களுக்கும் மற்றோர்களுக்கும் ஏழை பரதேசிகளுக்கும் பக்தி சிரத்தையுடன் அன்னமளித்து, ஹரிச்சந்த்ர மஹாராஜன் உத்ஸவத்தை வெகு விமர்சையாய் நடத்திவந்தார்; பின்னர் ஒன்பதாம் நாளாகிய புனர்பூச நக்ஷத்ர புண்யதினத்தன்று, வீணைபுல்லாங்குழல் மத்தளம் பேரிகை கொம்பு தப்பட்டை முதலிய பலவித வாத்ய கோஷங்களோடும், நானாவித அலங்காரங்கள் அமைந்த ரதத்தில் பகவானை எழுந்தருளச் செய்து தேரை இழுத்து வெகுசிறப்பாய் ரதோத்ஸவத்தை நடத்திவைத்தார். பின்னர், எல்லோர்க்கும் உணவளித்து, அநேகம் கன்னிகாதானம் பூதானம் கோதான முதலிய மஹாதானங்களைச் செய்து, புஷ்ய நக்ஷத்திரத்தன்று விதிப்ரகாரம் தீர்த்தோத்ஸவத்தையும் நடத்திவைத்தார். (86)

(உ-௬)

𑌏𑌵𑌂 𑌮𑌹𑍋𑌤𑍍𑌸𑌵𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌹𑌰𑌿𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌨𑍃𑌪𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
[illegible] ॥ (87)



திருப்பரங்குன்றத்தில் ஹரிச்சந்த்ர மஹாராஜன் கோவில் மண்டபாதிகளைக் கட்டுவித்து ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு ரதோத்ஸவம் நடத்திவைத்தல். [பக்கம் 134.

[illegible]

पुण्यकीर्तिं परं सत्यव्रतज्ञानं परं शुभम् ।
भक्तिं शिवपदाब्जानां स्थिरां कैवल्यपथदायिकाम् ॥ (88)

(உ)

புத்திமானான ஹரிச்சந்த்ர மஹாராஜன் இவ்வாறு மஹோத்ஸவம் செய்வித்து ஸத்யேஶ்வரரின் ப்ரஸாதத்தால் தன் அபீஷ்டம் பூராவும் நிறைவேறப்பெற்று, பெரும் புண்யத்தையும் நிகரற்ற கீர்த்தியை (புகழை) யும் ஸத்யவ்ரதத்தின் பலத்தை (உறுதியையு) ம், கைவல்யமார்க்கத்திற்கு அநுகுணமானதும் சலனமில்லாத (அசைவற்ற) துமான பரமசிவ பாதாரவிந்த பக்தியையும் அடைந்தார். (88)

(மூ)

तस्मान्निर्गतः पुण्यो [illegible] उदारधीः ।
ब्राह्मणैस्सह विद्वद्भिः तीर्थयात्रापरायणः ॥ (89)
श्रीसेतोर्मलयं गत्वा [illegible] ।
[illegible] सांबं नत्वा सत्यगिरीश्वरम् ॥ (90)
[illegible] ।
[illegible] तारकम् ॥ (91)
सत्यसंधो हरिश्चन्द्रः [illegible] ॥ (91½)

(உ)

மஹாதாதாவும் மஹாதீர புருஷனுமான அந்த ராஜ ஶ்ரேஷ்டன், தன் மனோரதம் (கோரிக்கை) பூர்த்தி செய்யப்பட்டவனாய் தீர்த்தயாத்திரையில் ஆவல் கொண்டு அந்த திருப்பரங்குன்றத்தை விட்டுப்புறப்பட்டார். வித்வான்களான ப்ராஹ்மணர்களோடு புறப்பட்ட அந்த மஹாராஜன் ராமேஶ்வரம் முதல் மலைய பர்வதம் வரையுமுள்ள க்ஷேத்ரங்களுக்குச் சென்று ஆங்காங்கு தீர்த்தாடனம் ஸ்வாமி தர்சனம் முதலியவைகளைச் செய்து முடித்துக் கொண்டு, மறுபடியும் திருப்பரங்குன்றத்தை அடைந்து முருகப்

பிராணியும் அம்பிகையுடன் ஸத்யேஶ்வரரையும் தரிசித்து நமஸ்கரித்து விட்டுப் பின் தமது சொந்த நகரமாகிய பரிசுத்தமான அயோத்யாபுரியை அடைந்து, சூர்ய சந்த்ரர்கள் உள்ளவரையில் தமது கீர்த்தியை பூமி முழுதும் (எல்லா உலகங்களிலும்) பரவச் செய்து நிலை நிறுத்தி, ஸத்ய ஸந்தரான ஹரிச்சந்த்ர மஹாராஜன், நெடுங்காலம் ராஜ்ய பரிபாலநம் செய்து வந்தார். (91½)

(ஶ்லோ)

[illegible] क्षेत्रस्य महिमा केन वर्ण्यते ।
मयापि वक्ष्ये [illegible] संक्षेपेण मुनीश्वराः ॥ (92½)
तत्रैव हि प्रशंसन्ति माघस्नानं महर्षयः ॥ (93)

गुहपुष्करिणीतीर्थे गङ्गातीर्थेऽथवा द्विजाः ।
[illegible] ॥ (94)

(1) [illegible] यः स्नाति तस्य पुण्यं महात्मनः ।
वक्तुं शक्तः स्वयं साक्षात् षण्मुखो नान्य एव हि ॥ (95)

(உ)

ஹே மஹரிஷிகளே! இப்பேர்ப்பட்ட இந்த க்ஷேத்ரத்தினுடைய மகிமையை யாராலுரைக்க முடியும். ஒருவராலேயும் முடியாது. ஆயினும் நான் உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். மஹரிஷிகளெல்லாம் இந்த க்ஷேத்ரத்தில் மாகஸ்நாநம் செய்கிறது மிக புண்யப்ரதமென்று கொண்டாடுகிறார்கள். மாக மாஸத்தில் இங்கேயுள்ள குஹபுஷ்கரிணியாகிய சரவணப்பொய்கையிலாவது கங்கா குண்டத்திலாவது, மூன்று நாள் அல்லது ஒரு தடவையாவது, ஸூர்ய உதயத்தில் எவன் ஒருவன் ஸ்நாநம் செய்கிறானோ, அந்த மகாத்மாவினுடைய புண்யத்தைச் சொல்ல ஸாக்ஷாத் ஷண்முகநாதன் தான் ஸமர்த்தரே யன்றி மற்றொருவருமிலர். (95)

---

(1) [illegible] — पाठान्तरम्.

(ஶ்லோ)

ஶைலஸ்ய பூர்வதிக்பாகே பாணபாத ப்ரமாணகே ।
க்ஷீரகுண்டம் மஹாதீர்த்தம் ப்ரஸித்தம் புவநத்ரயே ॥ (96)
தத்ர ஸ்நாநம் மநுஷ்யாணாம் ஸர்வபாப விநாஶநம் । (96½)

(உ)

மலையின் கீழ்பாகத்தில் ஒரு வில்லடி தூரத்தில், மூன்று உலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற “க்ஷீரகுண்டம்” என்னும் ஒரு மகா தீர்த்த மிருக்கிறது. அதில் ஸ்நாநம் செய்யும் மனுஷ்யர்களுடைய ஸகல பாபங்களும் நாசமடைந்து விடும். (96½)

(ஶ்லோ)

ஶைலஸ்ய தக்ஷிணே (1) பார்ஶ்வே குண்டாகாரேண வர்ததே ।
கார்த்திகேயாஜ்ஞயா யாதா ஸாக்ஷாத் கங்கா ஸுராபகா ॥ (97½)
குஶைஶ்சிஹ்நித் பக்தஸ்யார்த்தாய குஶ தர்ப்பாதி விசிஹ்நிதை: ॥ (98)

தத்ர பாதாள கங்காயாம் கார்த்திக்யே ஸோமவாஸரே ।
கூப்யாய ஸ்வேதி மந்த்ரேண ஸ்நாத்வா ஸங்கல்ப்ய பூர்வகம் ॥ (99)

வஸ்த்ராந்ந ஸ்வர்ண தாநாநி தத்வா ஶக்த்யநுஸாரத: ।
ய: கர்ம மஹம் ஸாக்ஷாத் ஶிவஶக்த்யாத்மகோ நர: ॥ (100)
ஸம்ப்ராப்நோத்யவிஶாஹ்நாமாநந்தே கைவல்யமோக்ஷயாத் (100½)

(உ)

மலையின் தென்பாகத்தில் தேவநதியான ஆகாச கங்கையானது, கார்த்திகேயனுடைய ஆக்ஞையினால், ஒரு பக்த ஶ்ரேஷ்டனது வேண்டுகோளின்படி, குசம் தர்ப்பை முதலான அடையாளங்களுடன் ஸாக்ஷாத்தாகத்தோன்றி ஒரு குண்டாகாரமாயிருக்கின்றது. அந்த பாதாள கங்கையில் கார்த்திகை மாஸம் ஸோமவாரத்தன்று ஸங்கல்பம் செய்துகொண்டு “கூப்யாயஸ்வ” என்னும

(1) பாகே — பாடாந்தரம்.

வேதமந்த்ரத்தை உச்சரித்துக் கொண்டு ஸ்நாநம் செய்து, தன் சக்திக்கியன்றபடி வஸ்த்ரம் ஸ்வர்ணம் அன்னம் முதலிய தானங்களைச் செய்து ஸாக்ஷாத் சிவ சக்திஸ்வரூபியாயும் (ஹ்ருதய) குஹையில் வஸிக்கிறவராயும், விளங்கும் குமாரஸ்வாமியை எவன் தரிசனம் செய்கின்றானோ அவன், இவ்வுலகில் ஸகல போகங்களையும் அனுபவித்து முடிவில் மோக்ஷஸாம்ராஜ்யத்தையும் அடைகின்றான். (100½)

(ஶ்லோ)

कार्त्तिक्यां सोमवारे तु यदि देवि सकृन्नरः ।
पातालगङ्गासलिले यः स्नात्वा गुहं च पश्यति ॥ (101½)

कृत्तिकादीपदानं च तस्य पुण्यं वदाम्यहम् ।
अगम्यागमनात् पापात् अभक्ष्यभक्षणात् ॥ (102½)
अन्यस्मादपि पापाच्च मुच्यते नात्र संशयः ॥ (103)

(உ)

க்ருத்திகா ஸோமவாரத்தன்று எவன் ஒரு தடவையாவது பாதாள கங்கா தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்துவிட்டு குஹஸ்வாமியை தரிசனம் செய்து தீபதானமும் செய்கின்றானோ, அவன் ஜாதிகெட்டவனாக இருந்தாலும் அவனுக்கேற்படும் புண்ய விசேஷத்தைக் கூறுகின்றேன்; சேர்க்கை செய்ய யோக்யமில்லாத ஸ்த்ரீகளிடம் போகம் செய்ததாலுண்டாகும் பாபத்தினின்றும் புஜிக்கக் கூடாத வஸ்துவை புஜித்ததாலுண்டாகும் பாபத்தினின்றும் இன்னும் அநேகமான அகார்யங்களினாலுண்டாகும் பாபங்களினின்றும் விடுபடுகின்றான். இது விஷயத்தில் ஸம்சயமே இல்லை. (103)

(ஶ்லோ)

कार्त्तिक्यां सोमवारे या नारी भक्तिविशेषतः ।
स्नाति पातालगङ्गायां कार्त्तिके गुहं च पश्यति ॥ (104)

तस्याः साम्राज्यमैश्वर्यं पुत्रपौत्रादिसंपदः ।
सर्वसौभाग्यसहितं पातिव्रत्यं ध्रुवं भवेत् ॥ (105)

(உ)

மேலும் க்ருத்திகா ஸோமவாரத்தில் எந்த ஸ்த்ரீயானவள் விசேஷ பக்தியோடும் பாதாள கங்கையில் ஸ்நாநம் செய்து குஹஸ்வாமியை தரிசனம் செய்கின்றளோ அவள், புத்ர பௌத்ராதிகளோடு கூடிய தீர்க்கமாங்கல்யத்தையும் ஸர்வ பாக்யங்களோடு கூடிய த்ருடமான பதிவ்ரதா தர்மத்தையும் அடைகிறாள். (105)

(மூ-ம்)

கார்த்திக்யாம் க்ருத்திகாயோகே ஸ்வாமிவக்ஷஸி ணீ ஜயே ।
ஸ்நாத்வா ஷட்க்ருத்திகா தீர்த்தே ஸ்வாமிநாதஸ்ய தர்சநாத் ॥ (106)

யஃ கரோதி ஸக்ருத் பக்த்யா நாரீ வா புருஷோऽபி வா ।
இஷ்டார்த்த ஸித்திம் ஸகலாம் லபதே நாத்ர ஸம்சயஃ ॥ (107)

(உ)

கார்த்திகை மாஸத்தில் க்ருத்திகா நக்ஷத்திரத்தன்று ஒரு ஸ்த்ரீயேனும் புருஷனேனும் பக்தியுடன் ஸ்வாமி புஷ்கரிணி தீர்த்தத்தில் ஒருதரமாவது ஸ்நாநம்செய்து ஷடாக்ஷரமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு ஸ்வாமிநாதரை தரிசனம் செய்வாராகில் அவர்கள் இஷ்டஸித்திகளை எல்லாம் அடைவார்கள். இதில் ஸம்சயமே இல்லை.(107)

(மூ-ம்)

ப்ரதிமாஸம் க்ருத்திகாயாம் உபவாஸ பராயணஃ ।
(1) வ்ரதம் கரோதி யோ பக்த்யா ஸர்வாபீஷ்டம் அவாப்நுயாத் ॥(108)

(உ)

ப்ரதிமாஸம் கார்த்திகையன்று உபவாஸபரனயிருந்துகொண்டு பக்தியுடன் வ்ரதத்தை அநுஷ்டிப்பவர் ஸர்வாபீஷ்டங்களையும் அடைகின்றார். (108)

(மூ-ம்)

கார்த்திகாஸித பக்ஷே து யதா ஸம்ப்ரோக்ஷணம் ஸம்பவேத் ।
தஸ்மிந் காலேऽபிஷேக ஸ்நாநம் க்ஷீரகுண்டே விசிஷ்யதே ॥ (109)

---

(1) வ்ரதம் கரோதி விதிவத் ஷாண்மாஸ பர்யந்தம் ॥

க்ஷீரப்ரியஸ்ய தேவஸ்ய ஸத்யாத்ரே: ஶிவாக்ருதே: ।
ப்ரதிதர்ஶம் ப்ரதிதர்ஶம் ஸமாகத்ய காமதேநு: ஶிவாஜ்ஞயா ॥ (110)

தாராபிஷேகம் குருதே ஸ்வக்ஷீரேண ஸுதாமயை: ।
தந்நிர்மால்யம் பர்வதஸ்ய ப்ராச்யே குண்டாகாரேண திஷ்டதி ॥ (111)
தத்குண்டே ஸ்நாநமாத்ரேண கங்காஸ்நாநாதிகம் பவேத் ॥ (111½)

(உ)

மாசிமாஸத்தில் ஸூர்யன் கும்பராசியில் வருங்காலத்தில் ஸூர்ய சந்த்ரர்கள் ஒன்றுசேரும் காலமாகிய அமாவாஸை யன்று, க்ஷீரகுண்டத்தில் மாத்யாஹ்நிகஸ்நாநம் செய்வது ரொம்ப விசேஷமானது. ப்ரதி அமாவாஸைதோறும் காமதேனுவானவள் சிவாக்ஞையினாலே ஸத்யாசலத்திற்கு வந்து அமிர்தமயமான தன் பாலால், பாலபிஷேகத்தில் ப்ரியமுள்ளவரான ஸத்யாத்ரி சிகரவடிவாயுள்ள ஸத்யேஶ்வர மூர்த்திக்கு, தாராபிஷேகம் செய்கின்றாள். அப்பொழுது அந்த நிர்மால்யமானது மலைக்குக் கிழக்கில் ஒரு குண்டாகாரமாக (குளமாக)த் தங்குகிறது. ஆகையால் அந்த க்ஷீரகுண்டத்தில் ஸ்நானமானது கங்காஸ்நானத்தைக் காட்டிலும் விசேஷமானது. (111½)

(8-ம்)

க்ஷீரகுண்டதடே ஸ்தித்வா யத்கிஞ்சித் தாநமாசரேத் ।
தந்மேரு ஸமதாம் யாதி பராசலேஶ ப்ரபாவத: ॥ (112½)

கோதாநம் பூதாநஞ்ச வஸ்த்ரம் கம்பளமேவ ச ।
யோ தேயாதி ஸத்பாத்ரே ஸ ஸம்ராட் பவதி த்ருவம் ॥ (113½)

(உ)

அந்த க்ஷீரகுண்டக்கரையிலிருந்து ஒரு அணுமாத்திரம் தானம் செய்தாலும் அந்த பராசல க்ஷேத்ரத்தினுடைய மகிமையினால் அது மகாமேருவுக்கு ஸமானமாகிறது. அந்த தீர்த்தக்கரையில் கோதானம் பூதானம் வஸ்த்ரதானம் கம்பளதானம், இத்யாதிதானங்களை எவன் ஸத்பாத்திரத்தில் செய்கின்றானோ அவன் சக்ரவர்த்தியாக ஆகின்றான். அது நிச்சயம். (113½)

(𑌶𑍍𑌲𑍋)

𑌧𑍂𑌪𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌦𑍀𑌪𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌭𑌾𑌜𑌨𑌮𑍍 ।
𑌅𑌭𑌿𑌷𑍇𑌕 𑌜𑌲𑌾𑌧𑌾𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌲𑌶𑌮𑍇𑌵 𑌚 ॥ (114½)

𑌸𑍍𑌨𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑌰𑍇𑌶𑌸𑍍𑌯 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌛𑌤𑍍𑌰 𑌚𑌾𑌮𑌰 𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰 𑌦𑌰𑍍𑌪𑌣 𑌵𑍍𑌯𑌜𑌨𑌾𑌨𑌿 𑌚 ॥ (115½)

𑌉𑌪𑌕𑌰𑌣𑌾𑌨𑌿 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌾𑌨𑌿 𑌚 ।
𑌘𑌣𑍍𑌟𑌾𑌨𑍍 𑌜𑌵𑌨𑌿𑌕𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵 𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍 𑌸𑌮𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌾𑌨𑍍 ॥ (116½)

𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍 𑌶𑍋𑌣𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍 𑌹𑌰𑌿𑌦𑍍𑌰𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍇𑌵 𑌚 ।
𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌸𑌵𑌰𑍍𑌣 𑌵𑌰𑍍𑌣𑌂 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 𑌸𑌮𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌮𑍍 ॥ (117½)

𑌯𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑌿 𑌚 𑌵𑌸𑍍𑌤𑍂𑌨𑌿 𑌶𑌿𑌵𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌕𑌰𑌾𑌣𑌿 𑌚 ।
𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌯 𑌦𑍇𑌵𑌾𑌯 𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑍀𑌶𑌾𑌯 𑌶𑌂𑌭𑌵𑍇 ॥ (118½)

𑌯𑍋 𑌦𑌦𑌾𑌤𑌿 𑌨𑌰𑍋 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌧𑌨𑍇𑌨 𑌚 ।
𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌚 𑌭𑍋𑌗𑍈𑌶𑍍𑌚 𑌸𑌪𑍁𑌤𑍍𑌰 𑌪𑌶𑍁 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 ॥ (119½)

𑌸𑍋𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌶𑌤𑍍𑌰𑍂𑌨𑍍 𑌜𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑍇 𑌶𑌿𑌵 𑌸𑌾𑌰𑍂𑌪𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌮𑍍 ॥ (120½)
𑌦𑌿𑌵𑍍𑌯𑌭𑍋𑌗 𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑍋𑌦𑌤𑍇 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ (121)

(உ)

ஸத்யாசலேஶ்வர மூர்த்திக்கும் ஸுப்ரஹ்மண்ய பரமாத்மாவுக்கும் உபயோகப்படுத்தும்படியாக தூபக்கால், தீபக்கால், நைவேத்யங்கள் எடுக்கப்பாத்ரம், அபிஷேகம் செய்யக் கலசம், உபசாரத்திற்காகக்குடை வெண்சாமரம், காளாஞ்சி கண்ணாடி விசிறி முதலான ஸாமான்கள், அநேகவிதங்களான வெண்பட்டுகள், திவ்யமான ஆபரணங்கள், நல்ல நாதத்தோடுகூடிய கண்டாமணி, அநேகவர்ணங்களால் அழகு பொருந்திய திரைச்சீலைகள் இதுகளையும், வெண்மை நிறம் காவிநிறமுதலிய பலவித வர்ணங்களால் ஜ்வலித்துக்கொண்டிருக்

கும் பீதாம்பரத்தையும், சிவ ஸுப்ரஹ்மண்ய ப்ரீதிகரமான எல்லா வஸ்துக்களையும், ஸுககாரணராகிய ஸத்யாசலேஶ்வரரையும் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியையும் உத்தேசித்து (தான்) நியாயமாய் ஸம்பாதித்த த்ரவ்யத்தினாலே சக்திக்குத் தக்கபடி சேகரித்து பக்தியோடு கொடுக்கும் ஒருவன், இப்பூலோகத்தில் புத்ரபாக்யம் பெற்று பசு முதலிய ஸகல ஸம்பத்துக்களையும் அடைந்து, ஸகல சத்ருக்களையும் (1) (அந்த: சத்ருக்கள்—பஹிர் சத்ருக்கள் இவர்களையும்) ஜயித்து, ஸர்வைஶ்வர்யங்களையும் திவ்ய போகங்களையும் அடைந்தனுபவித்து. தேகாந்தத்தில் ப்ரஹ்மாதி தேவர்களுக்கும் கிடைப்பதற்கரியதாகிய சிவஸாரூப்பத்தை அடைகின்றான். இதில் ஸம்சயமேயில்லை. (121)

(ऊ-ஞ)

ஊஜ்ராஷயொ ஒொகவாஹா ஊஷியொ ஹ்ஹவாஷிநஃ ।
ஷாஸிஸ்ரூஜ்ரா ஜயொயெவ யெவ ஈாஜஷிபொzஊஹாஃ ॥ (122)

ஷ்யம்ஹஞ்ஸு நகாஷ்ராஸ்ர ஸஞபரா உஜ்ஜஸெள தயா ।
ஸம்வஞ்ஜ்ர ஸ்க்ஷ ஜீரோநம் ஃஸத்ஜ்ஞாந ஸுவாஜகழ் ॥ (123)
ஊுக்திம் வ்ராவாஊுதிஶெஹ்ா ஸ்ஸத்ராஜ்ள தவஸாவஹாத (123½)

(உ)
ஹே மகரிஷிகளே! இந்த்ரன் முதலான திக்பாலர்களும், ப்ரஹ்ம நிஷ்டர்களான மஹரிஷிகளும், புண்யவான்களாகிய ஹரிச்சந்த்ரன் முதலான ராஜரிஷிகளும், ப்ரஹ்மதேவரும், ஸநகாதிகளும், ஸூர்ய சந்த்ரர்களும, திருப்பரங்குன்றத்தில் ஸச்சிதாநந்தனிலைக்ஷணாகிய ஸத்யாசலேஶ்வர மூர்த்தியையும் ஸ்கந்த ஸ்வாமியையும் பூஜைசெய்து தங்கள் தபோபலத்தினால் முக்தியடைந்தார்கள். (123½)

(ऊ-ஞ)

வம்வெக்ராஸ ஜிஷம் கெஷத்ரம் ஊஹாவாதக நாஶநழ் ।
ஹ்ஹ வ்ரஜயகாஹெzவி ஷாநஊதந நாஶிதழ் ॥ (124½)

---

(1) காமக்ரோதாதி சத்ருக்கள் இவைகளை ஜயிப்பதாவது இந்திரிய நிக்ரகம் செய்தல்.

ஶரீராந்தே து ஸர்வேஷாம் ப்ராணிநாம் ஸத்யநாயகஃ ।
ஸாக்ஷாச்ச்ரீ தக்ஷிணே கர்ணே தாரகம் பஞ்சவர்ணகம் ॥ (125½)
வ்யாக்யாதி ஸர்வவேதாந்த நிர்ணீதம் ஶிவாத்மகம் ॥ (126)

(உ)

இந்த க்ஷேத்ரமானது சுற்றி நான்கு பக்கங்களிலும் ஐந்து குரோசம் (கூப்பிடுதூரம்) விஸ்தீர்ணத்திற்கு மஹா பாதகங்களையும் நாசம் செய்கிறதாக இருக்கிறது. இது ப்ரஹ்மப்ரளய காலத்திலும் நாசமடைகிறதில்லை. இந்த க்ஷேத்ரத்திலுள்ள எல்லாப்ராணிகளுக்கும் மரணகாலத்தில் ஸத்யாசலேஶ்வரமூர்த்தியானவர், ஸர்வவேதாந்தங்களில் நிச்சயம் செய்யப்பட்டதும் சிவசக்தி ஸ்வரூபமாயுள்ளதும் ஐந்தெழுத்தையுடையதுமாகிய தாரகமந்த்ரத்தை, வலது காதில் தாமே உபதேசம் செய்கின்றார். (126)

(மூ-ம்)

அதாந்யதேகம் ரஹஸ்யந்தே வக்ஷ்யாமி விதிநந்தந ॥ (126½)

(உ)

"ஹே ப்ரஹ்மகுமார! ஸநத்குமார மஹாரிஷே! இன்னும் உமக்கு ஒரு ரஹஸ்யம் சொல்கின்றேன், கேளும்" என்று நந்திகேஶ்வரர் சொல்லுகிறார்.

(மூ-ம்) நந்திகேஶஃ ॥

புராகஸ்த்யவசஃ ஶ்ருத்வா ராமோ ராஜீவலோசநஃ ।
ஸீதாம் ஜநகஜாம் ப்ராப ஸத்யாத்ரீஶ ப்ரஸாததஃ ॥ (127½)

(உ) நந்திகேசர்:—

முன்காலத்தில் தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீ ராமபிரான் அகஸ்த்ய மகரிஷியின் வார்த்தையைக் கேட்டு ஸத்யாசலேஶ்வர மூர்த்தியினுடைய அநுக்ரஹத்தினாலே (சத்ருவினாலபகரிக்கப்பட்ட) ஜநகராஜகுமாரியாகிய தன் பத்னி ஸீதாதேவியை யடைந்தார். (127½)

(மூ-ம்) 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌃 ॥

𑌕𑍇𑌨𑍋𑌪𑌾𑌯𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍍𑌷𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌮𑍍 ॥ (128)
𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌚𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ॥ (128½)

(உ) ஸ்ரீ ராமர் கேட்கிறார்:—

ஹே ப்ரஹ்மரிஷே! எந்த உபாயத்தினால் (ராவணனாலேகபரிக்கப் பட்ட) ஸீதையை நான் திரும்பி அடைவேன் என்று (அகஸ்த்ய மகாமுனிவரை ஸ்ரீராமன்) கேட்க, மகா பராக்ரம சாலியாகிய அந்த ராமபிரானுடைய வார்த்தையைக் கேட்க அகஸ்த்யர் சொல்கிறார். (128½)

(மூ-ம்) 𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌃 ॥

𑌸𑌤𑍍𑌯𑌾𑌚𑌲𑍋 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌸𑌰𑍍𑌵 𑌪𑍁𑌣𑍍𑌯 𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌃 ।
𑌅𑌸𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑍋 𑌮𑌹𑍋𑌤𑍍𑌸𑌾𑌯 𑌸𑍍𑌤𑍁𑌤 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿 𑌨𑌿𑌰𑍍𑌜𑌰𑌾𑌃 ॥ (129½)

𑌪𑍂𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌨𑌿𑌶𑌂 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ।
𑌸𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌵𑍍𑌰𑌜 𑌇𑌤𑍋𑌽𑌧𑍁𑌨𑌾 ॥ (130½)

(உ) அகஸ்த்ய மாமுனிவர் சொல்லுவது:—

"மகா பாக்யசாலியான ஹே ராமசந்த்ரா! ரொம்பவும் உயர்ந்ததும் மலை அருவிகளோடு கூடினதும் ஸர்வ புண்ய பலனைத் தருவதும் மிக்க மஹிமைவாய்ந்ததுமாகிய ஸத்யாசலமென்னும் ஒரு க்ஷேத்ரமிருக்கின்றது. அங்கு எழுந்தருளியிருக்கும் நித்யஸ்வரூபியாகிய ஸுப்ரஹ்மண்ய பரமாத்மாவை நான்முகன் முதலான தேவர்கள் எப்பொழுதும் பூஜை செய்துகொண்டிருக்கின்றார்கள் நீரும் இப்பொழுதே இங்கிருந்து உமது தம்பியோடுகூட சீக்ரமாக அந்த க்ஷேத்ரத்திற்குச் செல்லும்" என உரைத்தனர். (130½)

(மூ-ம்)

𑌸𑍋𑌽𑌪𑌿 𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌾𑌕𑌰𑍍𑌣𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑌿𑌂 𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌭𑍍𑌯𑌗𑌾𑌤𑍍 ॥ (131)
𑌤𑌤𑍍𑌰 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍀 𑌜𑌲𑍇 ।
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌘𑌵 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌦𑍀𑌪𑌂 𑌪𑌶𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌹𑌾𑌨𑍁𑌜𑌃 ॥ (132)

ப்ரதக்ஷிணஶதம் க்ருத்வா ஸ்வயம் ப்ரவிவேஶ ஹ ।
தத்ராபஶ்யத்ராமசந்த்ர: ஸ்கந்தம் விஶ்வாத்மகம் விபும் ॥ (133)
க்ருத்வா ப்ரணாமம் பஹுதா ஸ்தோத்ரம் ஸமுபசக்ரமே ॥ (133½)
(உ)

ராஜஶ்ரேஷ்டராகிய அந்த ராமரும் அகஸ்த்ய மகரிஷியினுடைய வார்த்தையைக்கேட்டு சீக்ரமாகத் திருப்பரங்குன்றம் போய்ச் சேர்ந்து, தம்பியோடு மஹா புண்ய தீர்த்தமாகிய ஸ்வாமி புஸ்கரிணி (சரவணப்பொய்கை)யில் ஸ்நாநம் செய்து கிரிப்ரதக்ஷிணம் செய்து கோவிலுக்குள் போனார். தர்மஸ்வரூபியாயுள்ள தாசரதியானவர்: (தசரகுமாரன்), எங்கும்நிறைந்தவரும் உலக வடிவாயுள்ளவருமான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை அங்கு தரிசனம் செய்துவிட்டு ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தார். (133½)

(மூ) ராம: ॥

ஜய ஜய க்ருபாஸிந்தோ ஶரவண ஶிவ நந்தந ।
ரக்ஷமாம் கருணாஸிந்தோ ப்ரபந்நார்த்தி விநாஶந ॥ (134½)

ஶ்ரீமத் ஸத்யகிரீஶ்வராத்மஜ விபோ ஶ்ரீஸ்வாமிநாத ப்ரபோ ।
ஸாகேதம் ப்ரவிஹாய காநநமஹம் ஸம்ப்ராப்தவாந் பித்ராஜ்ஞயா ॥ (135½)

ஸீதாலக்ஷ்மண ஸம்யுதஸ்த்வவஸம் ஸீதா த்வத்ருஷ்டா கதா ।
த்வாமேவம் ஶரணாகத: கருணயா தேவாத்ய த்ருஷ்ட்வா ஸீதாம் திஶ ॥ (136½)

(உ) ஸ்ரீராமர் ப்ரார்த்தனை:—

தேவாதிதேவா! கருணாமூர்த்தே! ஷாட்குண்ய பரிபூர்ணா! க்ருபாஸமுத்ரமே! சரணமடைந்தவர்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் ப்ரபோ! ஹே சிவஸுப்ரஹ்மண்யமூர்த்தே! என்னை ரக்ஷித்தருளவேண்டுமென்று ஸ்தோத்ரம் செய்து, சக்ரவர்த்தி திருமகனாகிய ராமபிரான், "ஹே ப்ரபோ! ஸத்யகிரீஶ்வர குமாரா! ஹே ஸ்வாமிநாதா! ஜெகந்நாதா! நான் பிதாவின் ஆக்ஞைப்படி அயோத்திமாநகரைவிட்டு ஸீதா லக்ஷ்மணர் ஸஹிதமாய்க் காட்டை அடைந்து வஸித்துக்கொண்டிருந்தேன். அங்கு ஸீதை காணாமல்

போய்விட்டாள். ப்ரபோ! நான் தங்களைச் சரணமடைந்தேன். க்ருபை கூர்ந்து எனக்கு இப்பொழுது ஸீதையைக் கொடுத்தருள வேண்டும்'' என ப்ரார்த்தித்தார். (136½)

(மூ)

இதி ஸ்துத்வா மஹாஸேநம் ராமே ஸ்தித்வா தஸ்யாக்ரதோ விபோ: ।
மஹாஸேநோபி ஸஹஸா தஸ்ய ப்ரஸாதம் சகாரச ப்ரபு: ॥ (137½)

(உ)

இவ்விதம் குஹஸ்வாமியை ஸ்தோத்ரம் செய்துவிட்டு ராம பிரான் எதிரில்நிற்க, முருகபிரானும் சக்ரவர்த்தி திருமகனுகிய ராம மூர்த்திக்குச் சீக்ரமாகவே அநுக்கிரகம் செய்தார். (137½)

(மூ)

ஸ்கந்தமபி நத்வா ஸூத்ய ராவணாதீந் நிஸாசராந் ।
ஹத்வா ஸம்ப்ராப்ய வைதேஹீம் அயோத்யாம் ப்ராவிசத் ப்ரபு: ॥ (138½)

(உ)

ஸ்ரீராமரும் ஸ்கந்தஸ்வாமியை மறுபடியும் நமஸ்காரம் செய்துவிட்டு, பிறகு ராவணுதி ராக்ஷஸர்களை யுத்தத்தில் ஹதம் செய்து மஹா பாக்யவானாய், ஸீதாஸமேதராய் அயோத்யாபுரியை அடைந்தார். (138½)

(மூ) ஸூத: ॥

தஸ்மாத்தத் க்ஷேத்ரம் ஸத்ருஸம் நாஸ்தி நாஸ்தி ஜகத்ரயே ।
கிமோதய ந்யதோ யத்ர தேஹம்வாபி நஸம்ஸய: ॥ (139½)
ஸத்யாவகாஸ்ய தேஹாத்ய ப்ரவணாத் படணாத் த்விஜா: ॥ (140)

ப்ராலேத்த தத் ஸகலம் பாபம் நஸ்யதி நாஸ்ய நஸ்யதி ।
ஸநத்குமார: ஸீதாத்ரா ஸிவயோமீ தேஹாதி: ॥ (141)

ஸந்நாஷாம் பரம் ப்ராப்ய பாதஸ் ப்ரவிணோ தாக: ।
ஸக்த்யா பரவஸோ ஹத்வா ஸாப்ரத்ஷண பராயண: ॥ (142)

ஸாக்ஷாத் ஶிவாத்மகம் தேவம் வ்ருஷவாஹநம் ஶங்கரம் ।
மஹிமாநம் ஷண்முகஸ்யாபி ஶங்கரஸ்ய சரிதம் மஹத் ॥ (143)

(உ) ஸூதர் சொல்லுகின்றார் :—

"ஆகையால் இந்த க்ஷேத்ரத்திற்கு ஸமானமான க்ஷேத்ரம் மூன்று உலகங்களிலுமில்லவேயில்லை. ஹே மகரிஷிகளே! இந்த ஸத்யாசல மாஹாத்ம்யத்தை கேட்டதினாலும் படித்ததினாலும் நீங்களும் நானும் மிகவும் புண்யசாலிகள்தான்; ஸம்சயமில்லை. இது ரொம்ப ஆச்சரியம். மகா புத்திசாலியும் சிவயோகியுமான ஸநத்குமார மஹரிஷி, முந்தி லோகாநந்தகரராகிய நந்திகேஶ்வரரிடமிருந்து இந்த க்ஷேத்ர மாஹாத்ம்யம் எல்லாவற்றையும் கேள்வியுற்று மிக ப்ரீதியுடையவராகி பரமாநந்தத்தை அடைந்து, மறுபடியும் இந்தக் கதையைக் கேட்க ஆவலுடையவராய் பக்தியால் பரவசமாய், தன் குருவாகிய ஸாக்ஷாத் சிவ ஸ்வரூபியான நந்திதேவரைப் பார்த்து இந்த க்ஷேத்ர மாகாத்ம்யத்தையும் முருகபிரானது மகத்தான சரித்திரத்தையும் பின்னும் சொல்லி அருளுமாறு வேண்டிக் கொண்டார். (143)

(ஶ்ரு)

ஶ்ருணோதி யஸ்ஸத்யகிரேர்மாஹாத்ம்யம் தீர்த்தஸ்ய ப்ரபாவம்
மஹிமாநமேவ ச ।
படேத் ஸக்ருத்வா ஸகலேஷு ஸித்திம் ப்ராப்ய ப்ரஸாதாத்
குஹதேவ முக்திம் ॥ (144)

இதி ஶ்ரீ ஶைவே மஹாபுராணே
ஏகாதஶஸாஹஸ்ர்யாம் ஸம்ஹிதாயாம் மஹேஶ்வராகே க்ஷேத்ர வர்ணநே
ஸத்யகிரி மாஹாத்ம்யே ஷஷ்டோத்யாயः

(உ)

ஆகையால் மகா அத்புதமான இந்த ஸத்யகிரி (திருப்பரங்குன்ற) மாகாத்ம்யத்தையும் தீர்த்தங்களின் மகிமையையும் எவனொருவன் ஒருதரமேனும் கேட்கின்றானோ அல்லது படிக்கின்

றானே அவன் ஸகல மனோபீஷ்டங்களையும் அடைந்து ஈஶ்வரானுக்ரஹத்தால் மோக்ஷத்தையும் அடைகின்றான். (144)

ஆறாவது அத்யாயம்
முற்றிற்று.

𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

(𑌮𑍂𑌲𑌮𑍍) 𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 ॥

𑌶𑌿𑌲𑌾𑌦𑌪𑍁𑌤𑍍𑌰 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑍇 ।
𑌪𑍁𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌾 𑌗𑌙𑍍𑌗𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑌿 ॥ (1)

𑌸𑍋𑌮𑌤 𑌉𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑍇 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌮𑌰𑌜𑌨𑍍𑌮𑌨𑌃 ।
𑌕𑌸𑍍𑌮𑍈 𑌵𑌿𑌧𑌿𑌤𑌿 𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌸𑌭𑌕𑍍𑌤𑌃 𑌕𑍋 𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌿 ॥ (2)

𑌸 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑍇 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌦𑍇 ।
𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑍇 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌾𑌧𑌿𑌃 ॥ (3)
𑌶𑍃𑌣𑍁 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌸𑌾𑌂𑌪𑍍𑌰𑌤𑌮𑍍 ॥ (3½)

ஏழாவது அத்யாயம்.

(உரை) ஸநத்குமாரர் சொல்லுகிறார் :—

"ஷட்குண ஸம்பன்னரே! ஸகலமும் அறிந்தவரே! கருணைக் கடலே! சிலாதமஹரிஷியின் புத்ரனாகிய ஹே நந்திகேஶ்வரா! சரவணபவனுடைய ஆக்ஞையினாலே ஒரு பக்தனுக்காக மகா பரிசுத்தமான கங்காதீர்த்தமானது இந்தமலையினுச்சியில் தோன்றியிருக்கின்றதென்று தங்களால் முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வுலகத்தில் மஹானாகிய அந்த பக்தன் யார்? நல்லபுத்திமானாகிய அவன், தேவர்களால் பூஜிக்கப்பட்டவரும் மஹா பாக்கியசாலியும் பராபரப்பொருளும் பராத்பரருமாகிய அந்த ஸுப்ரஹ்மண்யமூர்த்தியினிடத்தில் எவ்விதமான பக்தியைச்செய்து அவரைத் த்ருப்தி

செய்வித்தான். இப்பொழுது இதுகளெல்லாவற்றையும் விஸ்தாரமாய்ச்சொல்ல தாங்கள் தான் தகுந்தவர்கள்'', எனத் தெரிவித்துக் கொண்டார். (3¼)

(மூ)

𑌭𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌨𑍍𑌦𑍀𑌶 𑌭𑌵𑌤𑍍𑌯𑍇𑌵 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌤𑌃 ।
𑌭𑌵𑌤𑍍 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌹𑌿𑌮𑍍𑌨𑌾 𑌚 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌶𑌂𑌕𑌰𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌃 ॥ (4½)
𑌪𑍍𑌰𑌾𑌹 𑌗𑌂𑌭𑍀𑌰𑌯𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌨𑌨𑍍𑌦𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌃 ॥ (5)

(உ)

இந்த ப்ரகாரம் ஸநத்குமாரரால் ப்ரார்த்திக்கப்பட்டபொழுது, ஸமஸ்த தேவர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரும் ஸர்வசக்தியினாலும் மஹிமையினாலும் ஸாக்ஷாத் பரமசிவனுக்கு ஸமான மானவருமான நந்திகேஶ்வரர், கருணையோடு கம்பீரமான வாக்கினால் அந்த முனிவராகிய ஸநத்குமாரரைப் பார்த்துச் சொல்லுகின்றார். (5)

(மூ) 𑌨𑌨𑍍𑌦𑌿𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

[illegible] ।
[illegible] 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌃 ॥ (6)

[illegible] 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌃 ।
[illegible] ॥ (7)

[illegible] 𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 [illegible] ।
[illegible] 𑌶𑍋𑌭𑌿𑌤𑍇 ॥ (8)

[illegible] ।
[illegible] ॥ (9)

[illegible] 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑍇𑌃 ।
[illegible] 𑌗𑌿𑌰𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌦𑌨𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ (10)
[illegible] ॥ (10½)

(உ) நந்திகேஶ்வரர் சொல்கிறார்:—

ஹே ஸநத்குமார மஹரிஷே! முன் காலத்தில் ஹாலாஸ்ய மென்று பெயருடைய பரிசுத்தமான த்வாதசாந்த க்ஷேத்ரத்தில், மகா புத்திசாலியும் யோகீஶ்வரரும் எல்லா தேசங்களிலும் க்யாதி பெற்றவரும் எல்லா வித்தைகளிலும் ஸாமர்த்யமுடையவரும் சங்கவித்வான்களுக்குள் முதன்மையானவரும் கவிசிரேஷ்டருமான நக்கீரர் என்று ப்ரஸித்திபெற்ற ஒருவித்வானிருந்தார். அவர் தினந்தோறும் அந்த ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திலிருந்து திருப்பரங் குன்றத்திற்கு வந்து, தாமரஸபுஷ்பம் செங்காந்தல் புஷ்பங்களால் நிறைந்து அழகு பொருந்தியதும், ஒருதரம் ஸ்நாநம் செய்தவர் களுக்கும் ஸ்கந்த ஸாரூப்யத்தைக்கொடுக்கும் புண்யதீர்த்தமுமான ஸ்வாமி புஷ்கரிணி என்ற சரவணப்பொய்கையில் பக்தியோடு விதிப்படி ஸ்நாநம் செய்து நித்யானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, பார்வதீ நந்தனனும் தேவதேவனும் கருணாநிதியும் மஹாத்மாவுமாகிய ஸுப்ரஹ்மண்யமூர்த்தியை தரிசனம் செய்யா மல், வித்தையினால் பூஜிக்கத்தகுந்தவராயிருந்தாலும் விசேஷமான மாத்ஸரிய (த்வேஷ) முடையவரான அந்த நக்கீரகவி, மதுரைக்குத் திரும்பிவிடுவார். (10½)

(ஶ்லோ)

தஸ்யாஹங்கார ஶாஸ்த்ரேயா த்ருஷ்டா ஸ்கந்தகணாந் ஸ்வகாந் ।
உக்ர ப்ரஹ்ருதிகாந் காம்ஶ்சித் ப்ராவாச ஸுரஶேகரஃ ॥ (11½)

(உ)

அதனால் அக்னிகுமாரராகிய ஸத்யாசலபதி - ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியானவர், அந்த கவியினுடைய அகங்காரத்தைப் பார்த்து, தமது பூதகணங்களாகிய உக்ரன் (அண்டாபரணன்) முதலிய சிலரை நோக்கி ஆக்ஞாபித்தார். (11½)

(ஶ்லோ)

ஶ்ரீமத்கந்தஶைலஸ்ய ஸாக்ஷாத் ஸந்நிதாவஹோ ஸ்திதாந் ।
ஶிவஜ்ஞாநஸுஸிதாந் பூஜாகாஸிதாந் ஸுராந் ॥ (12½)

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑍁𑌖𑌾𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌶𑌾𑌖𑌾𑌦𑍍𑌯𑌾 𑌦𑍈𑌵𑌤𑌾𑌦𑌯𑌃 ।
𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍋 𑌨𑍈𑌵 𑌶𑌿𑌵𑍋𑌽𑌹𑌮𑌿𑌤𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥ (13½)
𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌕𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌾𑌰𑌿𑌧𑍇𑌃 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌹 𑌗𑍁𑌹𑌃 ॥ (14)

(உ)

ஸாக்ஷாத் பரமசிவனே அடிக்கிழங்கு (விருக்ஷத்தின் வித்து); ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரன் ஸ்கந்தன் முதலான தேவர்கள் அந்தக் கிழங்கி(வித்தி)லிருந்து (பரமசிவனிடத்திலிருந்து) உண்டான முளை தளிர் கொம்பு கிளைகளாம்; (மூலப்பொருளாகிற பரமசிவனை பக்தி செய்யும் நமக்கு மற்ற கொம்புகிளைகளாகிற தேவாதிகள் நிகரில்லை;) அதினால் அந்த ஸாக்ஷாத் பரமசிவனே நாம் என்று நினைத்துக் கொண்டு கர்வத்தை அடைந்திருக்கும் நக்கீரரைக் குறித்து தத்வங்களின் கரையைக்கண்ட குஹஸ்வாமி (தம்முடைய) பூதகணங்களைப்பார்த்து உத்தரவு செய்தார். (14)

(ஸ்ரீ) 𑌶𑍍𑌰𑍀𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌃 ॥

𑌹𑍇 𑌭𑍂𑌤𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌂 𑌮𑌧𑍁𑌰𑌾𑌨𑌗𑌰𑌾𑌤𑍍
𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌕𑌵𑌿𑌰𑌤𑍍𑌰 𑌮𑌮 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 ।
𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑌰𑌸𑌿 𑌫𑍁𑌲𑍍𑌲𑌾𑌬𑍍𑌜𑌪𑍂𑌰𑍍𑌣𑍇
𑌸𑌂𑌸𑍍𑌨𑌾𑌯 𑌮𑌾𑌮𑌪𑌿 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌮𑍂𑌢𑌭𑌾𑌵𑌃 ॥ (15)
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌮𑍁𑌂 𑌦𑍁𑌰𑌾𑌶𑌯𑌮𑌾𑌶𑍁 𑌶𑌿𑌲𑌾𑌯𑌾𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂
𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌦𑍃𑌢𑌂 𑌦𑍃𑌢𑌤𑌰𑌂 𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌮𑍍 𑌅𑌪𑌿 𑌵𑌾𑌰𑌯𑌧𑍍𑌵𑌂 ।
𑌉𑌦𑍍𑌵𑌾𑌹𑌤𑍋 𑌮𑌮 𑌹𑌿 𑌵𑌿𑌨𑌯𑍇𑌨 𑌤𑌸𑍍𑌯
𑌆𑌰𑌾𑌦𑍍 𑌵𑌿𑌧𑌾𑌯 𑌜𑌯𑌨 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌯𑍁𑌵𑌾𑌨𑌃 ॥ (16)

(உ) ஸ்ரீ ஸ்கந்தஸ்வாமி ஆக்ஞை:—

"ஹே பூதகணங்களே! மூடனாகிய நக்கீரகவியானவன், மதுரைமாநகரிலிருந்து ப்ரஸித்தமான இந்த நமது க்ஷேத்ரத்திற்கு தினந்தோறும் வந்து, மலர்ந்த தாமரை புஷ்பங்களால் நிறைந்ததும் பரிசுத்தமானதுமான குமாரஸரஸில் (சரவணப்பொய்கையில்) ஸ்நானம் செய்தும் நம்மை தரிசனம் செய்யாமல் போகிறான்,

ஆகையால் துரஹங்காரமாகிய மலையிலேறியிருக்கும் (மமதை யடைந்திருக்கும்) இவனை மிக உறுதியான பாசக்கயிறுகளால் பலமாய் இறுக்கிக்கட்டி, நம்முடைய பர்வதத்தின் முன்பாகத்தி லிருக்கிற குஹையில் அவனைத்தள்ளி அந்த குஹையின் வாசலை நன்றாய் அடைத்து சீக்ரமாய்த் திரும்பிவாருங்கள்" என? ஆக்ஞா பித்தனர். (16)

([illegible]) [illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ (17)

[illegible] ।
[illegible] ॥ (18)

(உ) நந்திகேஶ்வரர் சொல்லுகிறார் :—

இவ்விதமாக குஹஸ்வாமியினால் ஆக்ஞாபிக்கப்பட்டவர்களா கிய உக்ரஸேநன் முதலிய பூதநாயகர்கள் ஜபத்யான பராயணரா கிய நக்கீரகவியானவர் எந்த இடத்திலிருக்கின்றாரோ அந்த பரி சுத்தமான சரவணப்பொய்கைக்கரையை யடைந்தும் அவருடைய தபோமகிமையினால் அந்தக் கவிஶ்ரேஷ்டரைப் பிடிப்பதற்கு சக்தி யற்றவர்களாயினர். (18)

([illegible])

[illegible] ।
[illegible] ॥ (19)

[illegible] ।
[illegible] ॥ (20)

[illegible] ।
[illegible] ॥ (21)



நக்கீரர் சரவணப்பொய்கையில் நீராடி கிரிவலம்வந்து முருகக்கடவுளைத் தரிசியாது சென்றமைக்குச் சிக்ஷிக்கப்பட்டுப்பின் குமாரஸ்வாமியைத் துதித்து அநுக்ரஹம் பெறல்.

[பக்கம் 153

𑌤𑍇𑌨 𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌹𑌙𑍍𑌗𑍇𑌨 𑌕𑍃𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌪𑍋𑌧𑌨𑌃 ।
𑌜𑍀𑌵𑌹𑌿𑌂𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌕𑌷𑍍𑌟𑌂 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾𑌦𑍍 𑌦𑍁𑌷𑍍𑌟𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑍈𑌃 ॥ (22)

𑌜𑌪𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑍋𑌤𑍍𑌥𑌾𑌯 𑌸𑌤𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌮𑍋𑌚𑌨𑌾𑌯𑍋𑌦𑍍𑌯𑌤𑍋 𑌦𑍀𑌨𑌸𑍍𑌯 (1) 𑌜𑍀𑌵𑌨𑌸𑍍𑌯𑌾𑌭𑌿𑌤𑍋 𑌯𑌦𑌾 ॥ (23)

𑌕𑍍𑌷𑌣𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍𑌤𑌦𑍈𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌮𑌯𑍇 𑌗𑌣𑌨𑌾𑌯𑌕𑌾𑌃 ।
𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌂 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌾𑌶𑍈𑌰𑍍𑌦𑍃𑌢𑌂 𑌮𑍁𑌦𑌾 ॥ (24)

𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯𑌾𑌥 𑌤𑍍𑌵𑌰𑌯𑌾 𑌗𑍁𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌗𑍃𑌹𑍇 𑌤𑌦𑌾 ।
𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌪𑌿𑌧𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌬𑍃𑌹𑌚𑍍𑌛𑌿𑌲𑌯𑌾 𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌾𑌃 ॥ (25)

𑌸𑍈𑌨𑍍𑌯𑌾𑌯𑌿𑌵 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌂 𑌤𑍇 𑌨𑌿𑌕𑌟𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌹𑌰𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯𑌾𑌮𑌾𑌸𑍁𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑍇 𑌶𑌿𑌵𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍇 ॥ (26)

(உ)

அந்த பூதநாயகர்கள் பின் உபாயத்தினாலொரு வேலைசெய்தார்கள். அரச மரத்தினுடைய மனோஹரமான ஒரு இலையையெடுத்து இரண்டாகக்கிழித்து அதை மறுபடி ஒன்று சேர்த்து அங்கு ஜலத்தோரத்தில் போட்டார்கள். அதிலொரு பாதி பக்ஷியாயும் மற்றொரு பாதி மீனாயு மாச்சுது. ஹே ஸநத்குமார மஹரிஷே! அந்த பக்ஷியானது அந்த மீனை மூக்கினால் கொத்திக் கரையிலிழுத்தது. அப்படியிழுக்கும் பக்ஷியை அந்த மீனானது பயத்தினால் ஜலத்திலிழுத்தது. அப்பொழுது நக்கீரகவியானவர் அந்த மாயா பக்ஷியினால் செய்யப்பட்ட ஜீவஹிம்ஸாரூபமான கஷ்டத்தைப் பார்க்கப் பொறுக்காதவராய் ஜபத்யானம் முதலான எல்லா க்ரியைகளையும் சீக்ரமாகச் செய்துமுடித்துக்கொண்டு எழுந்திருந்து மீனைக் காப்பாற்றுவதற்காக ஜலக்கரையைச் சார்ந்த தருணத்தில், ஸமயம் பார்த்திருந்த கணநாயகர்கள் வேகமாயோடிவந்து நக்கீரரைப்பிடித்து பாசக்கயிறுகளால் பலமாகக்கட்டி மலையிலுள்ள குஹையில் கொண்டுவந்தடைத்து அந்த குஹாத்வாரத்தை பெரிய

(1) 𑌜𑍀𑌵𑌨𑌸𑍍𑌯---𑌜𑌲𑌸𑍍𑌯.

பாராங்கற்களினல் மூடி, ஹே மஹரிஷிகளே! தேவஸேநாபதியான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியின் திருஸந்நிதானத்தை அடைந்து நடந்த வ்ருத்தாந்தங்களை பூதநாயகர்கள் பரமசிவ குமாரராகிய ஸ்வாமிநாத மஹாப்ரபுவினிடத்தில் ஸந்தோஷத்துடன் தெரிவித்துக்கொண்டார்கள். (26)

(ஸம்)

𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌸𑍍𑌯 𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌗𑍍𑌰𑍇 𑌕𑌾𑌰𑌾𑌗𑍇𑌹𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌨𑍍𑌵𑌹𑌮𑍍 ।
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑌶𑍍𑌚 𑌦𑍀𑌨𑌶𑍍𑌚 𑌤𑌥𑌾 𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ॥ (27)

𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑌰𑌾𑌦𑍍𑌰𑍀𑌶𑌂 𑌪𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌦𑌾𑌯𑌕𑌮𑍍 ।
𑌪𑌰𑌶𑌂𑌭𑍋 𑌪𑌰𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 𑌸𑌙𑍍𑌗𑌜𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌕𑍃𑌤𑌿𑌮𑍍 ॥ (28)

𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌾𑌨𑌾𑌂 𑌦𑌿𑌵𑍌𑌕𑌸𑌾𑌮𑍍 ।
𑌅𑌨𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌗𑍁𑌹𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ (29)

𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑌰𑌮𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌹𑌿𑌤𑌃 ।
𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑍈𑌰𑍍𑌨𑌵𑍍𑌯𑍈𑌸𑍍𑌤𑍋𑌷𑌯𑌾𑌮𑌾𑌸 𑌤𑌤𑍍𑌕𑌵𑌿𑌃 ॥ (30)

(உ)

பிறகு மலையின் முன்பாகத்தில் பந்தேகானுவிலடைபட்டிருக்கிற நக்கிரகவியானவர், கர்வமடங்கி த்வேஷபுத்தியைவிட்டு மிகவும் தீனராய், பராபரமூர்த்தியும் பரங்குன்றநாயகரும் பரமானந்தத்தைத் தருகிறவரும் பார்வதீ பரமேச்வரர்களுடைய ஸங்கத்தினல் ஞான வடிவாய் அவதரித்த மூர்த்தியும், ப்ரஹ்மா விஷ்ணு முதலான தேவர்களுக்கு ப்ரபுவும், ஆதியந்த மற்றவரும் குறைவில்லாதவரும் அழிவற்றவரும் பரமாத்மஸ்வரூபியுமான ஸாக்ஷாத் குஹஸ்வாமியை, அந்தக்கவிசிரேஷ்டர் தினந்தோறும் சோர்வடையாதவிசேஷபக்தியுடன், புதிது புதிதான பலவித அநேக ஸ்தோத்ரங்களால் இரவும் பகலும் ஸ்துதித்து ஸந்தோஷமுண்டாகும் படி செய்தார். (30)

𑌅𑌥 𑌤𑌤𑍍𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 𑌸𑍍𑌤𑍂𑌯𑌮𑌾𑌨𑌃 𑌪𑌰𑌿𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌪𑍍𑌰𑌮𑌥𑌗𑌣𑌸𑍇𑌵𑍍𑌯𑌃 ।
𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑍈𑌶𑍍𑌚 𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑌃 𑌸𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑌾𑌰𑍍𑌯 𑌤𑌤𑍍 𑌸𑍍𑌵𑌯𑌂
𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 ॥ (31)

𑌅𑌥 𑌤𑌂 𑌪𑌾𑌶𑌜𑌾𑌲𑍇𑌨 𑌬𑌦𑍍𑌧𑌂 𑌦𑍀𑌨𑌮𑌾𑌨𑌸𑌮𑍍 ।
𑌮𑍋𑌚𑌯𑌾𑌮𑌾𑌸 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌂 𑌸 𑌤𑍁 𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ (32)

𑌉𑌦𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌾𑌯𑍁𑌤𑌾𑌭𑌸𑍍𑌯 𑌆𑌰𑍂𑌢𑌸𑍍𑌯 𑌬𑌰𑍍𑌹𑌿𑌣𑌮𑍍 ।
𑌵𑍃𑌨𑍍𑌦𑌾𑌰𑌕𑍈𑌶𑍍𑌚 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑍈𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌚𑌾𑌰𑌣𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑍈𑌃 ॥ (33)

𑌸𑍍𑌤𑍂𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑍁𑌖𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌨𑌃 ।
𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌾 𑌦𑌣𑍍𑌡𑌵𑌦𑍍𑌭𑍂𑌮𑍌 𑌪𑌾𑌦𑌯𑍋𑌃 𑌸 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ॥ (34)

𑌶𑌿𑌰𑌸𑍍𑌯𑌞𑍍𑌜𑌲𑌿𑌮𑌾𑌧𑌾𑌯 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌕𑌵𑌿𑌃 𑌪𑌰𑌃 ।
𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌮𑌹𑌾𑌸𑍇𑌨𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 ॥ (35)
𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍌𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌹𑌤𑍍𑌯𑌾 𑌗𑌿𑌰𑌾 ॥ (35½)

(உ)

பிறகு அந்தக்கவியினுடைய ஸ்தோத்ரங்களால் ப்ரார்த்திக்கப்பட்டு ஸந்தோஷமடைந்தவரும் ப்ரமதகணங்களாலும் இந்த்ரன் முதலான தேவர்களாலும் வந்தனம் செய்யப்பட்டவருமாகிய குமாரஸ்வாமியானவர், தன் கையிலிருக்கும் சக்த்யாயுதத்தினால் அந்த குஹாத்வாரத்தில் அடைத்திருக்கும் கல்லை சீக்ரமாக உடைத்துத்தள்ளி, பாசக்கயற்றினால் கட்டப்பட்டு ரொம்பதீனமான மனமுடையவராகிய அந்த நக்கீரகவியின் கட்டையும் அவிழ்த்து விட்டு அவருக்கு நேரில் ப்ரஸந்நமானார். அப்போது அந்த நக்கீரகவியானவர், கோடிஸூர்யோதய ப்ரகாசம் போல ப்ரகாசித்துக்கொண்டிருப்பவரும் மயில் வாகனத்திலாரோகணித்திருப்பவரும், தேவர்களாலும் கந்தர்வர்களாலும் ஸித்தசாரண கின்னரர்களாலும் முனீஶ்வரர்களாலும் ஸ்தோத்ரம்செய்யப்பட்டவரும், பரமாத்மஸ்வரூபியுமாகிய அந்த குஹஸ்வாமியினுடைய அழகுபொருந்திய பாதாரவிந்த மூலத்தில் தண்டம்போல் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, மனமடங்கினவராய்த் தன்னிருகை

களையும் சிரமேல் கூப்பி, பக்தியினால் வணங்கின சரீரத்தையுடைய வராய்த் தன் முன்னால் ப்ரத்யக்ஷராய்த்தோன்றி நிற்கும் தேவாதி தேவேஶ்வரனும் மஹாப்ரபுவும் ஸகல ஜகத்திற்கும் கர்த்தாவும் மஹாஸேநனுமாகிய ஸுப்ரஹ்மண்யமூர்த்தியை, பக்திமேலிட்டு தழுதழுத்த வாக்கினால் ஸ்தோத்ரம்செய்கிறார். (35½)

[illegible]

(8-ம்) [illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (36½)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (37½)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (38½)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (39½)

[illegible]
[illegible]

[illegible]
[illegible] (40½)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] (41½)

(உ) குஹஸ்வாமியை நக்கீரகவி ஸ்தோத்திரம் செய்கிறார்:—

அழகு பொருந்தியவரான ஹே ஸத்யாசல நாயகா! ஹே ஜகன்னாதா! தங்கள் மூர்த்தியின் தரிசனமே செய்யாதவனாகிய நான், ஜனனமரண பயத்தை நாசம் செய்கிறதான தங்களுடைய பாதாரவிந்தங்களை இப்பொழுது சரணமடைகின்றேன். ஆகையால், மகாவ்யாபகரான ஹே ஸ்கந்த மூர்த்தே! பரமசிவ குமாரா! ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (36½)

திருச்செந்தூரில் வஸிக்கும் செந்திலாண்டவா! தேவேந்த்ரனுக்கு வரம் கொடுத்தருளிய பாலஸுப்ரமண்யப்ரபோ! முருகேசா! அகஸ்த்யர் முதலான மஹரிஷிகளினுடைய நிர்மலமான ஹ்ருதய கமலத்திலேயே எப்பொழுதும் வஸிக்கிறதான தங்களுடைய இரண்டு பாதாரவிந்தங்களும் என்னால் ஒரு தரம்கூட த்யானம் செய்யப்படவில்லை. அப்படியிருந்தாலும், ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (37½)

அழகிய சிவகிரிநாதா! பழனியாண்டவா! ஹே தண்டபாணே. தாரகன் முதலான எல்லா அரக்கர்களையும் யுத்தத்தில் சக்த்யாயுதத்தினால் ஸம்ஹாரம் செய்து, விஷ்ணு ப்ரஹ்மேந்த்ரன் முதலான தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பூலோகத்தில் மனுஷ்யர்களுக்கும் பூர்ணமான ஸந்தோஷத்தைச் செய்து வைத்தவராகிய முருகேசா! ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (38½)

ஸ்ரீபார்வதிதேவியின் ஆனந்தத்திற்கு ஸாகரமாய் விளங்கும் குமரா! ஸ்வாமி மலைக்கதிபதியான ஹே ஸ்வாமிநாதா! ஸமஸ்த வேதங்களுடைய மூலார்த்தமாகிய ப்ரணவத்தின் பொருளை நன்குரைக்கச் சக்தியற்றவரான ப்ரஹ்மதேவரைக் கண்டித்து, ஸ்வயமாகவே கைலாஸபதிக்கு உபதேசம் செய்த தேசிககுரோ! ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (39½)

சரத்கால பூர்ணசந்த்ரமண்டலம் போல நிர்மலமான ஆறு முகங்களாலும் அழகுபொருந்திய பன்னிரண்டு கைகளாலும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ஷண்முகனாதா! ஹல்லக கிரியாகிய திருத்தணிக்கதிபதியான பாலஸுப்ரமண்யமூர்த்தே! பெரும் மலையாய் விளங்கின க்ரௌஞ்சாஸுரனை சக்த்யாயுதத்தினால் கொன்ற சக்திதரா! ஞானிகளினுடைய ஹ்ருதய கமலங்களில் வஸிக்கும் ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (40½)

பெரிதாகிய மயிலின்மீது ஆரோகணித்திருக்கும் சிகிவாகனா! தங்களை பஜிக்கின்றவர்களான ஸமஸ்த தேவகணங்களுக்கும் மஹரிஷிகளுக்கும் அடியார்களுக்கும் அபயமளித்து வேண்டிய வரத்தைக் கொடுத்தருளும் ஹே ப்ரபோ! குன்றுதோராடும் குமரேசா! தேவேந்த்ர குமாரியாகிய தேவஸேனை அம்மையின் அழகியமணவாளா! ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (41½)

(இவ்விதம் ஆறு படை வீட்டினிற்கதிபதியான முருகேசனை நக்கீரகவி துதித்தனர்).

(𑌮𑍂)

𑌏𑌵𑌂 𑌸𑍍𑌤𑍁𑌤𑍋 𑌮𑌹𑌾𑌸𑍇𑌨𑍋 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑍇𑌣 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌤𑌦𑌾 ।
𑌕𑍃𑌪𑌯𑌾 𑌪𑌰𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌤𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥ (42½)

(உ)

இந்த ப்ரகாரம் நக்கீரமுனிவரால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டபொழுது ஸ்ரீ ஸுப்ரமண்ய மூர்த்தியானவர் ரொம்பவும் ஸந்தோ

ஷமடைந்து கருணையோடு அம்முனிவரைப் பார்த்து திருவாய் மலர்ந்தருளிகின்றார். (42½)

(மூ-ல) ஸ்கந்த: ।

த்வத்க்ருதேந ஸ்தவேநாஹம் ஸந்துஷ்டோஸ்மி மஹாமுநே ।
வரயாபிமதம் விப்ர மத்தோவர மநோகதம் ॥ (43½)

த்வயா க்ருதமிமம் முநே ஸ்கந்தமஶேஷஸித்தி ப்ரதம்
படேத் ப்ரதிதிநம் மம ப்ரியகரம் ஹி யஸ்ஸாதரம் ।
விமுக்த து:கிதஸ்ஸதா விவிதஸர்வ ஸம்பத்யுத
ஸ்ஸமேத: பதமநுத்தமம் ஸமுபயாதி ஸர்வோத்தமம் ॥ (44½)

இத்யாதிஷ்டேந மஹதாऽநுக்ருஹீதோ முநிஸ்ததா ।
ப்ரார்த்தயாமாஸ தேவேஶம் வரம் வரகவீஶ்வர: ॥ (45½)

(உ) ஸ்கந்த மூர்த்தி அருள்கின்றார்:—

"ஹே மகாமுனே! வித்வானே! நீ செய்த ஸ்தோத்ரத்தினல் நாம் சந்தோஷமடைந்தோம். ஆகையால் உனக்கு இஷ்டமான படி உத்தமமான வரனை நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஹே நக்கீரமுனே! ஸகலஸித்தமான ஸித்திகளையும்கொடுக்கத்தகுந்ததும் நமக்கு ரொம்பவும் ப்ரியமுள்ளதுமான உம்மால் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை எவன் தினந்தோரும் ஆதரவுடன் படிக்கிருனே அவன், ஸகலமான கஷ்டங்களிலிருந்தும் விடுபட்டு, ஸகல ஸம்பத்துக்களையுமடைந்து, பின் ஸர்வோத்தமமான என் பதத்தையும் அடைகின்றான்"; என்று மஹானுகிய அக்னிகுமாரனுலே அநுக்ரஹம் செய்யப்பட்ட அந்த வாகவிஶ்ரேஷ்டரான வர், அப்பொழுது தேவநாயகராகிய ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை வரம் கோறிப்ரார்த்திக்கின்றார். (45½)

(மூ-ல)

பகவந் தேவதேவேஶ குமார கருணாநிதே ।
மயா க்ருதாக: க்ஷந்தவ்யம் யத்ஸர்வம் பவதா ப்ரபோ ॥ (46½)

𑌭𑌵𑌚𑍍𑌛𑌰𑌣𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑍇 𑌭𑌵𑌸𑌾𑌗𑌰𑌤𑌾𑌰𑌕𑍇 ।
𑌭𑌵𑍇𑌤𑍍𑌤𑌵 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌦𑍇𑌹𑌿 𑌦𑍃𑌢𑌾𑌂 𑌮𑌮 ॥ (47½)

(உ)

"ஷாட்குண்ய பரிபூர்ணராகிய தேவநாயகா! கருணாநிதே ப்ரபோ குமாரஸ்வாமின்! நான் செய்த அபராத (குற்ற)ங்களை யெல்லாம் மன்னித்தருளி, ஸம்ஸாரஸாகரத்தினின்றும்கரையேற்றக் கூடியதான தங்கள் சரண கமலங்களில் ஸ்திரமான (த்ருடமான) பக்தியை எனக்குத்தந்தருள வேண்டும்", எனப்ரார்த்தித்தார். (47½)

(மூ)

𑌇𑌤𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌃 𑌶𑌕𑍍𑌤𑌿𑌪𑌾𑌣𑌿𑌃 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑌿𑌃 ।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌦𑍃𑌢𑌾𑌂𑌚 𑌪𑍍𑌰𑌦𑌦𑍌 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌪𑍁𑌨𑌰𑍁𑌵𑌾𑌚 𑌤𑌮𑍍 ॥ (48½)
𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑌿𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿 𑌵𑌰𑌂 𑌤𑌦𑍍𑌦𑌦𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑍇 ॥ (49)

(உ)

இவ்விதம் ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்கந்த பரமாத்மாவானவர், க்ருபாஸாகரமூர்த்தியான சக்திதரர், அந்த நக்கிரகவிக்குஅவ்விதமே விசேஷ த்ருடமான பக்தியை அநுக்ரஹித்து, மறுபடியும் அவரைப்பார்த்துச் சொல்லுகின்றார். "ஹே மஹாமுனே! இன்னும் எதை இஷ்டப்படுகின்றாயோ அந்த வரத்தையும் கேள், தருகின்றோம்". என்று அருளினார். (49)

(மூ)

𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌤𑌿 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑍇 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰 𑌸𑌤𑍍𑌕𑌵𑌿𑌃 ।
𑌪𑍁𑌨𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌸𑌮𑍁𑌤𑍍𑌸𑍁𑌕𑌃 ॥ (50)

(உ)

இவ்விதம் ஷண்முகநாதன் திருவாய் மலர்ந்தருளலும் மகானுகிய நக்கிரகவி இஷ்ட ஸித்தியைத்தந்தருளும் முருகபிரானைப் பார்த்துத் தனக்கிஷ்டமான வரத்தைக் குறித்து மறுபடியும் ப்ரார்த்திக்கின்றார். (50)

(மூ) 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌃 ॥

𑌦𑍇𑌵 𑌦𑍇𑌵 𑌕𑍃𑌪𑌾𑌪𑍂𑌰𑍍𑌣 𑌭𑌕𑍍𑌤𑌾𑌧𑍀𑌨 𑌵𑌰𑌪𑍍𑌰𑌦 ।
𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌂 𑌸𑍍𑌨𑌾𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌾𑌦𑍍 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌂 𑌕𑌰𑍋𑌤𑍁 𑌪𑍍𑌰𑌭𑍋 ॥ (51)

(உ) நக்கீரர் ப்ரார்த்திக்கின்றார்:—

"தேவாதிதேவ! கருணையே வடிவாய்க்கொண்டு பக்தர்களுக்கு வசப்பட்டு அநுக்ரஹிக்கும் ப்ரபோ! பராபரப்பொருளே! ஷண்முகநாதா! கங்காஸ்நானஞ் செய்ய ஆசைகொண்டிருக்கின்றேன்; அநுக்ரஹிக்க வேண்டும்;" எனப்ரார்த்தித்தார். (51)

(மூ)

𑌸𑌨𑌕𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑍋 𑌦𑍇𑌵𑍋 𑌦𑍇𑌵𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌗𑍁𑌹𑌃 ।
𑌵𑌾𑌚𑌾 𑌮𑌧𑍁𑌰𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌮𑍁𑌨𑌿𑌗𑌣𑍇𑌷𑍍𑌟𑍁𑌤𑌃 ॥ (52)

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌗𑌿𑌰𑍌 𑌶𑍃𑌙𑍍𑌗𑍇 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑍇 𑌵𑌰𑍇 ।
𑌆𑌨𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌗𑌙𑍍𑌗𑌾𑌂 𑌚 𑌪𑌾𑌵𑌨𑍀𑌮𑍍 ॥ (53)
𑌤𑌵𑌾𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑌯𑌤𑍍𑌨𑌾𑌦𑍍𑌭𑍋𑌗𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑌾𑌮𑍍 ॥ 53½

(உ)

இவ்வாறு நக்கீரரால் ப்ரார்த்திக்கப்படவே, மஹரிஷிகளால் ஸ்தோத்ரம் செய்யப்பட்ட குஹஸ்வாமி, தேவஸேநாபதி, ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியானவர், மதுரமான வார்த்தையால் அவரை (நக்கீரரை)ப்பார்த்துச் சொல்லுகின்றார். "ஹே யோகீந்த்ர! ஸர்வ ஞான ஸ்வரூபமாய் விளங்கும் உத்தமமான இந்தபர்வதத்தின் சிகரத்திலேயே, உனக்கும் இன்னும் மற்றெல்லோர்க்கும் முயற்சியில்லாமலே ஸேவிக்கப்படும் பொருட்டு, போகமோக்ஷங்களைத் தரத்தகுந்ததும் மகாபரிசுத்தமானதுமான கங்காதீர்த்தத்தை ப்ரத்யக்ஷமாகத் தருவிக்கிறேன்" என்று சொல்லி அருளினர். (53½)

(மூ)

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌗𑌾𑌙𑍍𑌗𑍇𑌯𑍋 𑌗𑌙𑍍𑌗𑌾𑌂 𑌪𑌾𑌤𑌾𑌲𑌵𑌾𑌸𑌿𑌨𑍀𑌮𑍍 ।
𑌸𑌾𑌮𑍍𑌬𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌃 𑌸𑌤𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ (54½)
𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌵𑌾𑌹𑌯𑌤𑍍 𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌕𑍁𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ॥ (55)

(உ)

கங்கா புத்ரனாகிய குஹஸ்வாமி யானவர், பாதாளவாஸினியான கங்கையை அழகுபொருந்திய பராசலரூபியும் தேவதேவருமான

ஸாம்ப மூர்த்திக்கு அந்தர்வாகினி ரூபமாய் எப்பொழுதும் ப்ர தக்ஷிணம் செய்கிறவளாக இந்த இடத்திற்கு வரவேண்டுமென்று நினைத்தார். (55)

(ஶ்லோ)

[illegible]
[illegible] (56)

[illegible]
[illegible] (57)

[illegible]
[illegible] (58)

[illegible]
[illegible] (59)

[illegible]
[illegible] (60)

[illegible]
[illegible] (61)
[illegible] (61½)

(உ)

அப்பொழுதே, மகாபாக்யசாலியாய் உலகங்களைப் பரிசுத்தம் செய்கிறவளான அந்த கங்காதேவியானவள், பூமிக்குக்கீழே யிருக்கிற ஆதாரசக்திக்கும் ஆதிகூர்ம மூர்த்திக்கும் பக்கத்திலிருக்கிற த்வாரத்திலிருந்து வெளிப்பட்டு, உன்னதமானதும் ஶ்ரேஷ்டமானதுமான ஸத்யபர்வதத்தின் உச்சியின்நடுவில் தென்பாகமாக சீக்ரமாய்த் தோன்றினாள். ஸமஸ்த (அறுபத்தாறுகோடி) தீர்த்தங்களாலும் ஸேவிக்கப்பட்டவளும், அநேக வர்ணங்களையுடைய தான மீன் கூட்டங்கள் தன்னிடத்திலிருப்பதால் கதம்ப

புஷ்பத்தின் காந்தியை ஒத்தவளும், ஆரவாரத்துடன் ஆகாயம் வரையும் உயர்ந்தெழும்புகின்ற அலைகளாகிய மாலையோடு விளங்குகிறவளும், தேவகந்தர்வ கின்னரர்களால் ஸ்தோத்ரம் செய்யப்படுவதால் பெருமை பெற்றவளும், பராசலேஶ்வரரும் பரமாத்மாவும் கருணாநிதியும் உமாதேவியாரோடு கூடினவருமாகிய பரமசிவனுடை ஜடாமண்டலத்திற்கு அலங்காரமாயிருப்பவளுமாகிய அந்த தேவநதியான கங்காதேவியானவள் சீக்ரமாய் வந்து, சிவசக்திஸ்வரூபியும் மஹாஸேநருமாகிய குஹமூர்த்தியைப் பார்த்து, ப்ரீதியோடு கை குவித்தவளாகச் சொல்லுகின்றாள். “தேவசத்ருக்களான அஸுரர்களைக் கொல்லும் மகாபலசாலியான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தே! ப்ரஹ்மதேவரை விலங்கிலிட்ட குமாரப்ரபோ! யாதுகாரணம் பற்றி என்னை நினைத்தீர்கள்? அதனைச் சொல்லியருள வேண்டு”மெனக் கேட்டுக் கொண்டாள். (61½)

(8-ம) ஸ்கந்த: ॥

தேவ்யே தேவ ஸராவமே நிவஸஸ்வ ஹஸ்தா த்ரமண்யாஸோ
நக்கீரஸ்ய வாமவஸ்து கி ஸாஹே ஸ்நாதாம் தஷய ஸதா ।
ஸந்த்யஷாம்ச ஜோஜ்ஞயா தவஜ்ஞே ஸம்ஜ்ஞதாம் தேஹிநாம்
ஸவாபீஷ்ட ஸம வ்ருஷாந நிரதா ஸத்யாத்ரி கூடாந்தரா ॥
(62½)

(உ) ஸ்கந்தஸ்வாமி திருவாய் மலர்ந்தருளுகின்றார்:—

“தேவலோகத்தில் ப்ரவஹிக்கின்ற கங்காதேவியே! நமது பக்தசிரோன்மணியான நக்கீரன் என்னும் மகான் உனது தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய விரும்புகின்றான்; அதற்காகவும், இன்னும் உனது தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்யும் இதர ஜனங்களுடைய பாபங்களைப் போக்கடித்து எல்லாருடைய மனோபீஷ்டங்களையும் நிறைவேற்றிக் கொடுப்பதற்காகவும், நமது ஆக்ஞையின்படி, ஹே மங்களே! இந்த ஸத்யாசலத்தின் கொடுமுடியில் எப்பொழுதும் நீ வஸித்துக் கொண்டிருப்பாயாக”, வென்று ஸ்கந்தமூர்த்தி கங்காதேவிக்கு ஆக்ஞாபித்தருளினர். (62½)

(𑌮𑍂-𑌮𑍍) 𑌶𑍈𑌲𑌾𑌦𑌿𑌃 ॥

𑌸𑌮𑌾𑌦𑌿𑌷𑍍𑌟𑌾 𑌕𑍁𑌮𑌾𑌰𑍇𑌣 𑌗𑌂𑌗𑌾 𑌪𑌾𑌤𑌾𑌲𑌵𑌾𑌹𑌿𑌨𑍀 ।
𑌤𑌦𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌧𑍃𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌨𑍁𑌤𑌾 ॥ (63½)

𑌤𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾 𑌕𑍁𑌣𑍍𑌡𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌸𑌂𑌵𑍃𑌤𑌾 ।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌵𑌸𑌤𑌿 𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑌕𑍋𑌟𑌿 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 ॥ (64½)

𑌤𑌦𑌾 [illegible] ।
𑌵𑌵𑍃𑌷𑍁𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑌿 𑌜𑌗𑍁𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌾𑌃 ॥ (65½)

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀 𑌶𑍈𑌵𑍇 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑌾𑌣𑍇
𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌉𑌪𑌰𑌿𑌭𑌾𑌗𑍇 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌖𑌣𑍍𑌡𑍇
𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇 𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

(உ) நந்திகேஶ்வரர் சொல்கிறார்:—

இவ்வாறு குமாரஸ்வாமியால் ஆக்ஞாபிக்கப்பட்ட பாதாள வாகினியான கங்காதேவியானவள், அந்த ப்ரபுவின் ஆக்ஞையை சிரஸால் வஹித்துக்கொண்டு, ப்ரஹ்மாவினால்வணங்கப்பட்டவளாய் ஸர்வ தீர்த்தங்களுடனும் சேர்ந்தவளாய்க் கொண்டு, அதுமுதல் ப்ரீதியுடன் குண்டரூபமாய் இந்த ஸத்யாசலத்தில் வஸித்து வருகின்றாள். அதில் ஒருதரம் ஸ்நாநம் செய்தால் கோடி தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்த பலனுண்டு. இந்த ஸம்பவம் யேற்பட்ட ஸமயத்தில் ஸகலமான தேவர்களும் ஆகாயத்திலிருந்து மிகுந்த ஸந்தோஷத்தோடு புஷ்பமாரி பொழிந்தார்கள். கந்தர்வர்களும் கின்னரர்களும் கானம் செய்தார்கள். (65½)

ஏழாவது அத்யாயம்

முற்றிற்று.

अष्टमोऽध्यायः.

(मूलम्) नन्दिकेश्वरः ॥

अथ स्कन्दो महाबाहुर्देवतावाहिनीपतिः ।
गङ्गास्नानाय नक्कीरमनुगृह्य महायशाः ॥ (1)

स्तूयमानो नारदाद्यैर्देवगन्धर्वकिन्नरैः ।
योगिभिः सनकाद्यैश्च स्वगणैश्च समावृतः ॥ (2)

स्ववाहनात्केकिवरादवरुह्य स्वयं जवात् ।
तत्र गङ्गां [illegible] स्नात्वा लोकानुग्रहतत्परः ॥ (3)

अत्र [illegible] विधिवत् [illegible] ।
[illegible] शैवीं षडक्षरीम् ॥ (4)

शिवशक्त्यात्मिकां विद्यां [illegible] ।
[illegible] कृत्वा [illegible] संस्तुतवान् ॥ (5)

वीरबाहु [illegible] स्नानतत्परान् ।
अनुगृह्य [illegible] ॥ (6)

எட்டாவது அத்யாயம்.

(உரை) நந்திகேஶ்வரர் சொல்லுகிறார்:—

பிறகு மகாபல பராக்கிரமசாலியும் தேவஸேனைபதியும் மிகக் கீர்த்தி பெற்றவருமான ஸ்கந்த மூர்த்தியானவர், நக்கீரரை கங்கா ஸ்நாநம் செய்யும்படி அநுக்கிரஹம் செய்து, நாரதாதி மஹரிஷிகளாலும் ஸநகாதியோகீந்த்ரர்களாலும் தேவகந்தர்வ கின்னரர்களாலும் ஸ்துதிக்கப்பட்டவராய்த் தமது கணங்களால் சூழப்பட்டு, தமது வாகனமாகிய மயில்மேலிருந்து, உலகத்திற்கநுக்ரஹம் செய்யும் விஷயத்தில் ப்ரியமுடையவரான குஹஸ்வாமி சீக்ரமாக

இறங்கி, அந்த கங்கா தீர்த்தத்தில் விதிப்படி முன்னால் நாம் ஸ்நாநம் செய்து கரைசேர்ந்து, ஶ்ரௌத பஸ்மாவை (ஜாபாலோப நிஷத்தில் சொல்லியபடி உத்தூளனம்அவகுண்டனம் த்ருபுண்ட்ரம் முதலாக விபூதியை) தரித்துக்கொண்டு, சிவசக்தி ஸ்வரூபமாயும் ஜனனமரணத்தை நாசம் செய்கிறதாயும் சிவஸம்பந்தமாயுமுள்ள தான ஷடக்ஷரமந்த்ரத்தை தம் மனதால் ஜபித்து, பிறகு கங்கா ஸ்நாநத்தில் ப்ரியமுள்ளவர்களாயிருக்கிற தேவர்களையும் ரிஷிகளையும் வீரபாகு முதலான பூதகணநாயகர்களையும் மற்றவர்களையும் ஸ்நாநம் செய்யும்படி உத்தரவு கொடுத்துவிட்டு, குமாரக்கடவுள் அந்தர்த்தானமாயினார் (மறைந்தார்). (6)

(ஸ-டு)

நக்கீரஸ் ஸஹஸர்வைர் தேவைர் முநிபிர் நாரதாதிபி: ।
பூதஸங்கைர் யோகிபிஶ்ச ஸஹ ஸ்நாத்வா க்ருதார்த்ததாம் ॥ (7)
அநேகஜந்மாந்தர புண்யௌக ஸுப்ரஸாதத: ॥ (7½)

(உ)

பிறகு நக்கீரகவியானவர் தேவர்களோடும் நாரதாதி மஹரிஷிகளோடும் பூதகணங்களோடும் யோகிவரர்களோடும் கூட அந்த கங்கா தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, அநேக ஜன்மங்களில் செய்த புண்யவசத்தாலும் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ப்ரஸாதத்தினாலும் தன் மனோரதம் பூர்த்தி செய்யப்பட்டவராக ஆனார். (7½)

(ஸ-டு)

கார்த்திகே ப்ரஸாதோஸ்ய தஸ்ய பாதாப்ஜ பரஸ்ய ச ।
ஶிவராஜ்யா ஸமாயாதி ஸாக்ஷாத் ஶம்பவ ஸ்வதா ॥ (8½)

ஶ்ருத்வைதத் ருஷய ஸ்ஸர்வே ததா ப்ராஹ்மணாதய: ।
முநயஶ்ச வஸிஷ்டாத்யா வ்யாஸ ஶக்தி பராஶரா: ॥ (9½)

லோகபாலா மஹாதேஜா தேவேந்த்ரா ராகவ ஶந்தநு: ।
ப்ரஹ்மா வாஸுதேவஶ்ச விஷ்ணுர் ஸ்கந்தாதய ஸ்ததா ॥ (10½)



குஹஸ்வாமி நக்கீரகவியின் பொருட்டு மலையின் உச்சியில் பாதாள கங்கையைத் தருவிக்க, அதில் முருகக்கடவுளும், நக்கீரர் வீரபாகு முதலிய தேவர்கள், முனிவர்களும் நீராடல். [பக்கம் 166

सदारास्साग्निहोत्राश्च सपुत्रास्सबान्धवाः ।
वसिष्ठश्च सशिष्याश्च यतयो ब्रह्मवादिनः ॥ (11½)

व्यासश्शक्तिपराशराश्च गालवो ब्रह्मसंमिताः ।
कण्वो राजर्षयश्चैव शौनकाद्यास्तथा ॥ (12½)

निवृत्य संवत्सरेषु शालीनयायावराः ।
वानप्रस्थास्सहिता वानप्रस्थनिष्ठुराः ॥ (13½)
दृष्ट्वा विस्मयमापन्नाः कुमाराज्ञां समागताः ॥ (14)

(உ)

பராசல க்ஷேத்ரத்தில் கார்த்திகை மாஸம் ஸோமவாரத்தன்று ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினுடைய ஆக்ஞையினால் கங்காதீர்த்தமானது ப்ரத்யக்ஷமாய்த் தோன்றி வந்ததென்று கேள்விப்பட்டதும், அந்தந்த தேசத்திலுள்ள ப்ராஹ்மணாதி ஸர்வஜனங்களும், தங்கள் தங்கள் பத்நிகள், அக்னிஹோத்ரங்கள், பசு புத்ர பந்துக்கள் முதலானவர்கள் ஸஹிதமாய், வஸிஷ்டர், அத்ரி, வ்யாஸர், சக்தி, பராசரர், காலவர், சந்தனு, அகஸ்த்யர், வாமதேவர், விஷ்ணுவ்ருத்தர், மகாதேஜஸ்ஸுடைய மார்க்கண்டேயர், ரைப்யர், முதலான மஹரிஷிகளும், தங்கள் தங்களுடைய ஆஶ்ரமத்திற்குரிய தர்மங்களை த்தவராமல் ஒழுங்காயனுஷ்டிப்பதில் ஶ்ரத்தையுடையவர்களாகிய ப்ரஹ்மசாரி, வானப்ரஸ்தன், ப்ரஹ்மவாதிகள், ஸன்யாஸிகளும், யக்ஞம் முதலான கர்மானுஷ்டான விஷயத்தில் சிறந்தவர்களாகிய முசுகுந்தாதி ராஜ ரிஷிகளும், மஹாஸந்தோஷமுடையவர்களாகி, கூட்டம் கூட்டமாய்ப்புறப்பட்டுதிருப்பரங்குன்றம் வந்து சேர்ந்து, அங்கு குமாரமூர்த்தியின் ஆக்ஞையைப் பார்த்து மிகவும் ஆச்சர்யமடைந்தவர்களாய் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார்கள். (14)

(श्लो)

गाङ्गं पवित्रं सलिलं पावनं भुवनन्द्या ।
दृष्ट्वा तत्रैव पावनं तावत्य स्नानं चक्रुः ॥ (15)

அதிஶீதஞ்ச ஶுப்ரஞ்ச பவித்ரம் பாவனம் ஸமீஹிதம் ।
ஸர்வே ஸம்பூய ஸம்ஹ்ருஷ்டா ஸ்நாத்வா தத்ரைவ வாஸரே ॥ (16)

ஶ்ரத்தயா பரயா தேவாந் ருஷீந் பித்ருகணாநுஷயா ।
ஸந்தர்ப்யாந்ந ஸுவர்ணாதி தாநாநி ச யதாபலம் ॥ (17)

த்ருஷ்ட்வா ப்ரதக்ஷிணீக்ருத்ய கிரிஞ்ச கிரிஶாத்மஜம் ।
கிரிஜாநந்தனம் ஸ்கந்தம் கிராமீஶம் நமஸ்யயா ॥ (18)

ஸம்ஸ்துத்ய ஸர்வே த்ரய்யுக்தை வாக்பிர்நிகம ஸம்மிதை: ।
ஸம்ப்ராபுர் நிலயம் ஸ்வம் ஸ்வம் க்ருதார்த்தா ஸ்மேதி மந்வதே ॥ (19)

(உ)

ரொம்பவும் பரிசுத்தமானதும் தோஷமற்று நிர்மலமாயுள்ளதும் உலகத்தை சுத்தம் செய்வதும் தரிசித்த மாத்திரத்தில் பாபங்களைப் போக்கடிப்பதும், தன்னாலும் பிறராலும் தெய்வாதீனத்தினாலும் ஏற்படக்கூடிய துன்பங்களை நிவிர்த்தி செய்வதுமாயுள்ள ஶ்ரேஷ்டமான அந்த கங்காதீர்த்தமானது, மிகக் குளிர்ச்சியுள்ளதாய் பர்வதத்தின்மேலே அவதரித்திருப்பதைக்கண்டு ஆச்சர்யமுற்று எல்லோரும் சேர்ந்து அந்த ஸோமவாரத்திலேயே அந்த கங்காதீர்த்தத்தில் பரமஸந்தோஷத்துடன் ஸ்நானம் செய்து, தேவ ரிஷி பித்ருக்களுக்கு மிகுந்த ஶ்ரத்தையுடன் தர்ப்பணம் செய்து, தங்கள் தங்கள் சக்திக்குத்தக்கபடி அன்னதானம் ஸுவர்னதானம் முதலான தானங்களையும் கொடுத்து, பரமசிவஸ்வரூபமான அந்த பர்வதத்தையும், கிரீசராகிய சிவபெருமானின் திருக்குமாரரும் சத்ருஸம்ஹார மூர்த்தியும் தேவஸேநாபதியும் பார்வதி தேவியாருக்கு ஆனந்தத்தை விளைவிக்கும் மூர்த்தியுமான ஸ்கந்தஸ்வாமியையும் ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்து, வேதவாக்யங்களால் ஸ்தோத்ரமும் செய்துவிட்டு, தங்கள் ஜன்மம் ஸாபல்யமாயிற்றென்று எண்ணிக்கொண்டு, தங்கள் தங்களுடைய ஸ்தானத்தை அடைந்தார்கள். (19)

(𑌸𑍂-𑌉) 𑌸𑍂𑌤𑌃 ॥

𑌇𑌤𑍍𑌥𑌂 𑌶𑍈𑌲𑌾𑌦𑌿𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌗𑌂𑌗𑌾𑌤𑍀𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌸𑌮𑍍𑌭𑌵𑌮𑍍 ।
𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌂 𑌚 𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑌿𑌲𑍇𑌶𑌯𑍁𑌤𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 ॥ (20)

𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑍋 𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌪𑌯𑌸𑌾𑌂 𑌨𑌿𑌧𑍌 ।
𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑌸𑍍𑌸𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑍍𑌨𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌶𑍍𑌶𑍍𑌰𑌵𑌣𑌕𑍌𑌤𑍁𑌕𑌾𑌤𑍍 ॥ (21)
𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌰𑍍𑌧𑌕𑍃𑌤𑌶𑍇𑌖𑌰𑌮𑍍 ॥ (21½)

𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌬𑌹𑍂𑌨𑌿 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌨𑌿 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 𑌚 ।
𑌶𑌾𑌮𑍍𑌭𑌵𑌾𑌨𑌿 𑌚 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌨𑌿 𑌬𑌹𑍂𑌨𑌿 𑌚 ॥ (22½)

𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌰𑌿𑌤𑌾𑌨𑌿 𑌵𑌸𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌹𑌰𑌾𑌣𑌿 𑌚 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑌤𑌮𑌂 𑌏𑌕𑌂 𑌵𑌦 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑌾𑌂 𑌵𑌰 ॥ (23½)

(உ) ஸூதமுனிவர் சொல்கிறார் :—

ஹே ஶௌனகாதி மஹாரிஷிகளே! இந்தப்ரகாரம் நந்திகேசரால் சொல்லப்பட்ட கங்காதீர்த்தத்தின் உற்பத்தியையும், சொல்ப பக்தியுடைய ஜனங்களிடத்திலுங்கூட குமாரமூர்த்திக்கு யேற்படும் விஶ்வாஸத்தையும் கேள்விப்பட்ட ஸநத்குமார யோகீந்த்ரர், ஸந்தோஷஸாகரத்தில் மூழ்கினவராகி, இன்னும் கேட்கவேணுமென்ற ஆசையினாலே, பொறுமையை யுடையவரும் அர்த்த சந்த்ரனை சிரஸில் தரித்தவருமான நந்திகேஶ்வரரைப் பார்த்து இருகை கூப்பி தண்டனிட்டு, "ஹே நந்திகேஶ்வரமூர்த்தே! வெகு புண்யங்களைத் தருகிறதுகளும், வேதங்களால் சொல்லப்பட்டதுகளும், அங்கங்கே வஸிக்கிறவர்களுடைய ஸர்வதுக்கங்களையும் நிவாரணம் செய்கிறதுகளும், வெகுஶ்ரேஷ்டமானதுகளுமான பல சிவக்ஷேத்ரங்களும் விஷ்ணு க்ஷேத்ரங்களுமான அநேக க்ஷேத்ரங்களிருக்கின்றன. தத்வங்களை யறிந்தவர்களுள் மேலானவரே! அந்த க்ஷேத்ரங்களுக்குள் ரொம்பவும் முக்யமான ஒரு க்ஷேத்ரத்தைக் குறித்துச் சொல்லவேண்டும்," என்று கேட்டுக்கொண்டார். (23½)

(ஈ-ஞ) [illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ (24½)
[illegible] ॥ (25)

[illegible] ।
[illegible] ॥ (26)

[illegible] ।
[illegible] ॥ (27)

[illegible] ।
[illegible] ॥ (28)

[illegible] ।
[illegible] ॥ (29)

[illegible] ।
[illegible] ॥ (30)

[illegible] ।
[illegible] ॥ (31)

[illegible] ।
[illegible] ॥ (32)

(உ) நந்திகேஶ்வரர் சொல்கின்றார்:—

முன்னொரு காலத்தில் தேவரிஷியும் த்ருகாலஞானியும் கம்பீர புத்திமானுமான நாரதமஹாரிஷியானவர், ஶ்ருஷ்டிகர்த்தராகிய நான்முகக்கடவுளை யடைந்து வணங்கி நின்று, எல்லாஸந்தேகங்களும் நிவர்த்தியாகவேண்டி ஒருவார்த்தை சொல்லுகிறார். "மகா பாக்யசாலியான நல்லவ்ரதமுடைய பிதாவே! என்விக்ஞாபனத்தை

கேட்டருளவேண்டும். ஸர்வ லோகங்களிலும் வெகுபுண்யத்தைத் தரத்தகுந்ததுகளும், அதிரஹஸ்யமானதுகளும், தரிசனம் செய்த மாத்திரத்தில் ஸகல ஸித்திகளேயும் மோக்ஷஸாம்ப்ராஜ்யத்தையும் கொடுக்கத்தகுந்ததுகளும், அதிஶ்ரேஷ்டமானதுகளுமான, ஸர்வ க்ஷேத்ரங்களும் அநேகவிதங்களான தீர்த்தங்களும், தபோவனங்களும், உன்னதமான மலேகளும், ஆகிய இவைகளெல்லாம், எங்கும் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு வருகிற என்னல் நேரில் தரிசனம் செய்யப்பட்டதுகள். அந்தந்த க்ஷேத்ரத்தினுடைய மகிமையானது, ஶ்ருதி ஸ்ம்ருதி புராணங்களில் மனஸுக்கும் வாக்குக்கும் எட்டாததாகவும் மிகப்பரிசுத்த முள்ளதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஹே பத்மாஸன! அவைகளில் எது உத்தமமான க்ஷேத்ரமென்று நிச்சயிக்கத் தெரியாமல் மயங்குகின்றேன். ஆகையினல், பகவானே! இந்தக்ஷேத்ர முதலானதுகளில் தர்மமார்க்கம் தவருமல் வஸிக்கின்றவர்களுக்கு இஹலோக பரலோகபலன்களேக்கொடுக்கத் தகுந்ததும், நேரே மோக்ஷத்தைத்தரத் தகுந்ததும், ஸர்வோத்தமமானதும், ஸர்வவேதார்த்தங்களாலும் நிச்சயம் செய்யப்பட்டதுமான ஓர்ஸ்தானத்தை தெரிந்து இப்பொழுது எனக்குச் சொல்லவேணும்; ஸர்வதேவர்களுக்கும் உத்தமராகிய பிதாவே! இந்த மூன்று உலகங்களிலும் தங்களாலறியப்படாதது ஒன்றுமில்லேயல்லவா!” எனப்ராரத்தித்தார். (32)

(ஸூ-ப்ர)

ஏவம் ப்ருஷ்டவதி ப்ரஹ்மஸூநௌ ஹம்ஸவாஹ ஸம்ஸேவ்ய: ஸ்வாத்
ஸ்வஜ்ஞாநாய தநாகஸ: கமலஜ: ப்ராஜ்ஞ: வாணீஶோ
விதி: ।

க்ஷேத்ராணாம் பரமம் பவித்ரமமலம் ப்ரோவாச தேவர்ஷயே
ஶ்ரோத்ரு ப்ரீதிவர்த்திதம் நிவஸதாம் ஸர்வார்த்த ஸித்தி ப்ரதம் ॥
(33)

(உ)

இவ்வாறு நாரத முனிவரால் கேள்கப்பட்டபொழுது, எண்ணிறந்த தேவகணங்களால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டவரும் வேத ஸமூகங்களுக்கு இருப்பிடமாகச் சொல்லப்பட்டவரும்,

மூலப்பொருளும் ஸர்வவ்யாபகரும், தாமரைப் பூவிலுதித்தவருமான ப்ரஹ்மதேவரானவர், க்ஷேத்ரங்களுள் உத்தமமானதும் புண்யமானதும், பரிசுத்தமானதும், வேதவேதாந்தங்களால் வெளியிடப்பட்டதும், வஸிப்பவர்களுக்கு மோக்ஷத்தைத் தரத் தகுந்ததுமான க்ஷேத்ரத்தை ஆலோஜித்து நிச்சயம் செய்து கொண்டு, தேவரிஷிக்குச் சொல்லுகின்றார். (33)

(ஸ-ஞ) ப்ரஹ்மா ॥

ஶ்ருணு நாரத வக்ஷ்யாமி ரஹஸ்யமதிபாவநம் ।
பவ கோடி தபோலப்யம் க்ஷேத்ரம் ஸர்வோத்தமோத்தமம் ॥ (34)

ப்ரணவார்த்தமஜாநந்தம் மாமேதம் தத்வதோ குஹ: ।
அநுக்ரஹாய யம் காலே ஶிக்ஷாரக்ஷாவிதாயிநீ ॥ (35)

யதா ததா ஸமாரப்ய ப்ரார்த்தித ஸ்ஸுர ஸைந்யப: ।
சிரகாலம் ஸந்துஷ்ட்யா ப்ராஹ கம்பீரயா கிரா ॥ (36)

(உ) ப்ரஹ்ம தேவர் அருள்கின்றார்:—

"ஹே நாரதா! மிக பரிசுத்தமானதும் அதிரஹஸ்யமானதும் அநேக கோடி ஜன்மங்களில் செய்த தபஸினாலடையத் தகுந்த ... உத்தமோத்தமமானதுமான க்ஷேத்ரத்தைச் சொல்லுகின்றேன்; கேட்பாயாக."

"முன் ஒருகாலத்தில் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியானவர், ப்ரணவார்த்தத்தை உள்ளபடி அறியாதவனாகிய எனக்கு அநுக்ரஹஞ் செய்யக்கருதி ரக்ஷா (பரிபாலன) ரூபமாகிற சிக்ஷையை எப்பொழுது செய்தாரோ, அது முதல் வெகுகாலம் என்னால் ப்ரார்த்திக்கப் பட்டவராகிய தேவஸேநாபதியான குஹஸ்வாமி, மிக்க ஸந்தோஷத்தோடு கம்பீரமான வாக்கினால் (பின் வருமாறு) என்னிடம் கூறியருளினர்." (36)

(ஸ-ஞ)

விஶேஷம் ஸர்வகார்யார்த்தம் ஸம்ப்ரவக்ஷ்யாமி தே ஹரே ।
தாநவேந்த்ரம் தாரகம் ச ஹத்வா க்ஷேத்ரம் ததோ மயா ॥ (37)

𑌤𑌦𑍀𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌾𑌨𑍍 𑌸𑌜𑍍𑌜𑌨𑌕𑌣𑍍𑌟𑌕𑌾𑌨𑍍 ।
𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌶𑍋 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌪𑍁𑌰𑌂 𑌚 𑌵𑌿𑌡𑍌𑌜𑌸𑍇 ॥ (38)

𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌕𑌾𑌨𑍍 𑌸𑍁𑌰𑌾𑌸𑍁𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑍁𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑍁 𑌸𑌜𑍍𑌜𑌨𑌾𑌨𑍍 ।
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌹𑌸𑌿 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑍇𑌨𑍈𑌶𑍍𑌚 𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌤𑍋𑌹𑌂 𑌸𑍁𑌰𑍇𑌶𑍍𑌵𑌰 ॥ (39)

𑌪𑌰𑌾𑌵𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂 𑌵𑌿𑌭𑍋 ।
[illegible] ॥ (40)

[illegible] ।
[illegible] ॥ (41)

[illegible] ।
[illegible] ॥ (42)

[illegible] ।
[illegible] ॥ (43)

[illegible] ।
[illegible] ॥ (44)

[illegible] ।
[illegible] ॥ (45)

[illegible] ।
[illegible] ॥ (46)

[illegible] ।
[illegible] ॥ (47)

(உ)

"ஹே ப்ரஹ்மதேவா! ஸாதுக்களை ஹிம்ஸிக்கின்றவர்களான அஸுரேந்த்ராகிய சூரபத்மாஸுரனையும் தாரகாஸுரனையும் ஸிம்ஹவக்த்ரனையும் அவர்களைச்சேர்ந்த மற்றெல்லா அஸுரர்களை

யும், தேவகார்யார்த்தமாக யுத்தத்தில் கூட்டங்கூட்டமாய் ஸம்ஹாரம் செய்து, தேவேந்த்ரனுக்கு ஸ்வர்க்கலோகத்தைக் கொடுத்து, தேவர்களையும் ப்ராஹ்மணர்களையும் மற்றய ஸாதுக்களெல்லோரையும் ஸுகமுடையவர்களாகச் செய்துவிட்டு, இந்த்ராதிதேவர்களால் பூஜிக்கப்பட்டு நாம், ஸச்சிதாநந்தலக்ஷணரும் ஸுககாரணருமான மகாதேவரானவர், தக்ஷிணகைலாஸமென்றும் ஸத்யஞானகிரியென்றும் சொல்லப்பட்ட எந்த ஸ்தலத்தில் ஆவிர்பவித்தவராய், ஸர்வ ஜனங்களுக்கும் ப்ராணாந்த்ய காலத்தில் வலது காதில் தாரகோபதேசம் செய்கின்றாரோ; அப்பேர்பட்ட உத்தமோத்தமமான பராசல க்ஷேத்ரத்தை (திருப்பரங்குன்றத்தை) யடைந்து, அங்கு தேவேந்த்ரனின் குமாரியான தேவஸேனையை விவாகஞ் செய்துகொண்டு, பக்தர்களை ரக்ஷிக்கும் பொருட்டு அந்த ஸ்தலத்திலேயே தேவர்களோடு வஸிக்கப்போகின்றோம். தாமரைப்பூவினுதித்த ப்ரஹ்மதேவா! அப்பொழுது நீர் அந்த இடத்திற்கு வந்து சேரும். ஹே பரிசுத்தா! உமக்கு ப்ரணவார்த்தத்தை உள்ளபடி உபதேசஞ் செய்கின்றோம்.'' என்று குஹஸ்வாமியினால் அநுக்ரஹிக்கப்பட்டவனாகிய நான், "தேவரிஷிகளில் ஶ்ரேஷ்டனான நாதா! ப்ரணவஸ்வரூபமாய் ஸத்யாசலமெனப் பெயர் பெற்றதான அந்த மகா பர்வதத்தையடைந்து, அந்த கல்யாண நகரத்தில் திருமணக் கோலத்துடன் எழுந்தருளியிருக்கும் அகிலாண்டரூபியும் தேவதேவனுமாகிய ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய பரமாத்மாவை தரிசனஞ்செய்து, அந்த தேசிககுருவினிடமிருந்து, எந்த ப்ரணவத்தின் பொருளை அறிந்த எவனும் துக்கப்படமாட்டானோ அப்படிப்பட்ட மிகப் பெருமை வாய்ந்துள்ளதான ப்ரணவார்த்த ஸமூகத்தை ரகஸ்யத்துடன் உள்ளபடி உபதேசம்பெற்றுக்கொண்டேன். ஹே தேவரிஷே! ஸர்வக்ஞான நாரதமுனே! புண்ய க்ஷேத்ரங்களில் சிறந்ததும் மங்களகரமானதும் உத்தமோத்தமமானதுமான அந்த ஸத்யாசல க்ஷேத்ரத்திற்கு நீ சீக்ரம் செல்'' என அருள் கூர்ந்தனர். (47)

(௪-௭) 𑌶𑍌𑌨𑌕𑌃 ॥

[illegible]

[illegible] ॥(48)

𑌤𑌦𑌾𑌗𑌤𑌂 𑌨𑌾𑌰𑌦𑌯𑍋𑌗𑌿𑌵𑌰𑍍𑌯𑌂 𑌵𑌿𑌲𑍋𑌕𑍍𑌯 𑌮𑍈𑌤𑍍𑌰𑌾𑌵𑌰𑌣𑌿𑌸𑍍𑌸𑌶𑌿𑌷𑍍𑌯𑌃।
𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌷𑌾𑌣𑍍𑌮𑌾𑌤𑍁𑌰𑌸𑍍𑌯 𑌬𑌹𑌿𑌰𑍍𑌨𑌿𑌵𑍇𑌶𑍇 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌸𑌮𑍇𑌤𑍁
𑌤𑍁𑌷𑍍𑌟𑍋𑌽𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌤𑍍 ॥ (49)

𑌸 𑌨𑌾𑌰𑌦𑌃 𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑌮𑍍𑌭𑌵𑍇𑌨 𑌪𑍃𑌷𑍍𑌟𑍋 𑌜𑌿𑌤𑌾𑌶𑌿𑌵𑍌𑌘𑌃 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌰।
𑌕𑍃𑌤𑌾𑌹𑍍𑌨𑌿𑌕𑌃 𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌵𑌿𑌦𑌾𑌰𑌣𑌂 𑌗𑍁𑌹𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑍁𑌵𑌿
𑌦𑌣𑍍𑌡𑌵𑌤𑍍 𑌸 𑌹𑍃𑌷𑍍𑌟𑌃 ॥ (50)

𑌤𑌤𑌸𑍍𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌶𑌿𑌵𑌂 𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌜𑌂
𑌶𑌿𑌵𑌪𑍍𑌰𑌦𑌂 𑌵𑌿𑌨𑌮𑍍𑌯 𑌮𑍌𑌲𑌿 𑌪𑌰𑌾𑌮𑍃𑌷𑍍𑌟𑌃 ।
𑌸𑌦𑍇𑌵𑌸𑍇𑌨𑌂 𑌸𑌤𑌤𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌨𑌮𑍍𑌰𑌃
𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 𑌕𑍃𑌤𑍀 𑌕𑍁𑌮𑌾𑌰𑌮𑌸𑍍𑌤𑍌𑌤𑍍 ॥ (51)

(உ) நந்திகேஶ்வரர் சொல்லுகின்றார்:—

இந்த ப்ரகாரம் ப்ரஹ்மதேவருடைய வேதாந்தஸாரமான வார்த்தையை, ஸதா ஈஶ்வரத்யாநம் செய்கிற சித்த வ்ருத்தியுடைய நாரத மகரிஷியானவர் கேட்டு, ஸந்தோஷ சித்தராய், சீக்ரமாக ஸத்யாசலம் வந்துசேர்ந்தார். யோகீஶ்வரரான அந்த நாரதமகரிஷியின் வரவைக்கண்டு, சிஷ்யவர்க்கங்களுடன் சரணவப்பொய்கையில் அனுஷ்டானஞ் செய்துகொண்டிருந்த அகஸ்த்ய மஹா முனிவரும் மற்ற மஹரிஷிகளும் களித்தனர். காமாதி சத்ருக்களை ஜயித்தவரான நாரத மஹரிஷியானவர் அகஸ்த்ய மஹரிஷியினால் க்ஷேமம் விசாரிக்கப்பட்ட பின் அனுஷ்டானம் செய்து முடித்துக்கொண்டு, க்ரௌஞ்சாஸுரனை ஸம்ஹாரம் செய்த ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை தரிசித்து, மிகவும் பக்தியோடு பூமியில் தண்டம்போல் விழுந்து நமஸ்காரம் செய்து எழுந்து, மங்கள ஸ்வரூபியும் மங்களத்தைத்தருகின்றவரும் ஞான ஸ்வரூபியும் ஆதிபுருஷனும் (மூலப்பொருளும்) பரமசிவகுமாரனுமான தேவஸேநாபதியை, ஞானயோகியான நாரத மஹரிஷியானவர் பக்தியுடன் வணங்கினவராய் அஞ்சலிசெய்து கொண்டு, குமார மூர்த்தியை ஸ்தோத்ரம் செய்கிறார்:—

(51)

𑌨𑌾𑌰𑌦 𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰 𑌵𑌟𑍁𑌃 ॥

(ஶ்லோ) 𑌨𑌾𑌰𑌦𑌃 ॥

𑌨𑌮𑍋 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌸𑌚𑍍𑌚𑌿𑌤𑍍
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌗𑍁𑌰𑍋 𑌶𑌿𑌵𑍇𑌶 ।
𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚 𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌿 𑌨𑌾𑌶𑌨𑌾𑌦𑍍𑌯
𑌕𑍃𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌧𑌾𑌤𑍍𑌰𑍇𑌽𑌖𑌿𑌲 𑌲𑍋𑌕 𑌨𑍇𑌤𑍍𑌰 ॥ (52)

𑌸𑌰𑍍𑌵 𑌲𑍋𑌕𑍈𑌕 𑌹𑌿𑌤𑌾𑌯 𑌶𑍂𑌰
𑌪𑌦𑍍𑌮𑌾𑌦𑌿 𑌦𑍈𑌤𑍍𑌯 𑌗𑌣𑌾𑌨𑍍 𑌸𑍁𑌘𑍋𑌰𑌾𑌨𑍍 ।
𑌹𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌚 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌂
𑌸𑍁𑌖𑌂 𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑍍𑌰𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌨𑌮𑍋 𑌗𑍁𑌹𑌾𑌯 ॥ (53)

(உ) குஹஸ்வாமியை நாரதமஹரிஷி ஸ்தோத்ரம் செய்தல்:—

நாரத மஹரிஷி ஸ்தோத்ரம்:—

அகண்ட ஸச்சிதானந்த மூர்த்தே! ப்ரஹ்மதேவருக்கு குருவானவரே! மகேஶ்வர புத்ரா! ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமின்! உலகத்தைப் பரிபாலித்து அழிக்கும் ப்ரபோ! அகிலாண்டகோடி ப்ரம்மாண்ட நாயகா! தங்களுக்கு நமஸ்காரம்:— (52)

ஸர்வலோகங்களுக்கும் ஸுகத்தைச்செய்யவேண்டியதற்காக மகா பயங்கரர்களாகிய சூரபத்மா முதலான அஸுரக்கூட்டங்களை நாசம்செய்து, தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் விசேஷமான ஸுகத்தைக் கொடுத்த குஹஸ்வாமின்! தங்களுக்கு நமஸ்காரம். (53)

(ஶ்லோ)

𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑍁𑌧𑌿𑌯𑌂 𑌵𑌦𑌾𑌵𑌯
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌹𑌾𑌸𑌃 𑌪𑌙𑍍𑌕𑌜 𑌸𑌂𑌭𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 ।
𑌸𑌵𑍀𑌕𑍍𑌷𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌲𑍇𑌶𑌂
𑌪𑍍𑌰𑌾𑌵𑌾𑌪 𑌵𑌾𑌪𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪 𑌯𑌶𑌸𑍍𑌸𑍁 𑌭𑍂𑌮𑌿𑌂 ॥ (54)

(உ)

இவ்வாறு ஸ்தோத்ரம் செய்துகொண்டு எதிரில் நிற்கும் ப்ரஹ்மஞானியும் ப்ரஹ்மகுமாரருமாகிய நாரதமஹரிஷியைப்பார்த்து, ஸத்யாசல நாயகரும் கங்கா குமாரருமான குஹஸ்வாமியானவர் ஸந்தோஷத்தோடு திருவாய் மலர்ந்தருளுவரராயினர். (54)

(மூ)

𑌉𑌵𑌾𑌚 𑌗𑌂𑌗𑌾𑌤𑌨𑌯𑍋𑌽𑌥 𑌨𑌾𑌰𑌦𑌂
𑌤𑍍𑌵𑌯𑌾 [illegible] 𑌵𑌦 𑌸𑌤𑍍𑌯𑌂 ।
[illegible]
[illegible] ॥ (55)

𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑍇𑌣 𑌚𑌾𑌨𑍇𑌨 𑌪𑌰𑍇𑌣 𑌤𑍋𑌷𑌿𑌤𑍋
[illegible] 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 [illegible] ।
[illegible]
[illegible] ॥ (56)

(உ)

"மஹரிஷே! நீ எங்கிருந்து வருகிறாய்? உனது மனோபீஷ்டமென்ன? சொல்; நீ இப்பொழுது செய்த இந்த சிறந்த ஸ்தோத்ரத்தினால் நாம் மிகவும் த்ருப்தியுற்றோம்." (55)

"உன் ஸ்தோத்ரத்தினால் மிகுந்த ஸந்தோஷமடைந்திருக்கும் நாம் உன் அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்து வைத்திக்கின்றோம்," என்று இவ்வாறு சக்திதரரால் அருள்பாலிக்கப்பட்ட நாரதமுனிவர், முருகபிரானைப் பார்த்து தெரிவித்துக்கொள்ளுகிறார். (56)

(மூ)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (57)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (58)

(உ)

"ஹே ஸுப்ரஹ்மண்யப்ரபோ! தங்களுடைய அநுக்ரஹத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ப்ரஹ்மதேவரால் ஏவப்பட்டவனாகிய நான், ஸம்ஸார ஸமுத்ரத்தைத்தாண்டுவ (கடப்ப)தற்குக் கப்பலாயிருக்கிற தங்களுடைய இரண்டு பாத கமலங்களையும் தரிசனம் செய்யவேண்டி, ரொம்ப ச்ரேஷ்டமானதும் பராசலமெனப் பெயர் பெற்றதுமான இந்த ஸமஷ்டி க்ஷேத்ரத்திற்கு வந்திருக்கின்றேன்." (57)

"ஹே தேசிககுரோ! ஒருவராலேயும் தள்ளக்கூடாததான பரமேச்வரனுடைய மாயையானது என்னை எப்படி ஒரு காலத்திலேயும் அணுக மாட்டாதோ, ஹே ஸர்வலோக சரண்யா! ஹே தேவநாயகா! ஹே ப்ரபோ! அப்படியே இப்பொழுது எனக்கு அநுக்ரஹம் செய்யவேண்டும்." (58)

(ஈ-ஞ)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (59)

[illegible]
[illegible]
[illegible]

(உ)

இவ்வாறு ப்ரார்த்திக்கும் தபோதனரான நாரத மஹாமுனிவரைப் பார்த்து, தபோதனர்களான மஹரிஷிக்கூட்டங்களால்

பூஜிக்கப்பட்டவரும் கோடி ஸூர்ய ப்ரகாசருமான ஸத்யாசல நாயகர், ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியானவர், அந்த நாரதமஹரிஷிக்கு வேதார்த்த ஸாரத்தை க்ருபை கூர்ந்து உபதேசித்தருளினர். (59)

எட்டாவது அத்யாயம்
முற்றிற்று.

அத² நவமோऽத்⁴யாய:

([illegible]) நந்தி³கேஶ்வர: ॥

[illegible]க³ஸ்த்யாய [illegible] ஸுப்³ரஹ்மண்யேந தீ⁴மதா ।
ஸர்வ வேதா³ம்ஶ்ச வேதா³ந்த ஶாஸ்த்ராண்யாக³மா அபி ॥ (1)

உபதி³ஷ்டாநி தத்ஸர்வம் க்³ருஹீத்வா ஸோऽபி நாரத³: ।
தஸ்மாத் தி³வ்ய பராத்³ரௌ நகே³ புண்ய [illegible] ॥ (2)

வஸத்யத்³யாபி யோகீ³ந்த்³ரோ ப்³ரஹ்மணா ப்³ரஹ்மநந்த³ந: ।
தஸ்மாத்தத் க்ஷேத்ர ஸத்³ருஶம் வித்³யதே நஹி குத்ரசித் ॥ (3)

ஒன்பதாவது அத்யாயம்.

(உரை) நந்திகேஸ்வரர் சொல்லுகின்றார்:—

ஞானவானாகிய ஸநத்குமாரமஹர்ஷே! அகஸ்த்யமஹரிஷிக்கு, ஞானஸ்வரூபியான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினால் எல்லாவேதங்களும் வேதாந்தங்களும் சாஸ்த்ரங்களும் ஆகமங்களும் வித்தைகளும் முந்தி உபதேசம் செய்யப்பட்டன. இந்த நாரதமஹரிஷியும், வேதம் முதலான ஸகலவித்தைகளையும் அங்கேயே உபதேசம் பெற்றுக்கொண்டபடியினாலே, புண்ய க்ஷேத்ரங்களுக்கெல்லாம் மேலான பராசலத்தி (திருப்பரங்குன்றத்தி)லேயே, ப்ரஹ்ம குமாரரான நாரதயோகீந்த்ரர், ப்ரஹ்மதேவருடன்கூட இன்னமும் வஸித்துக்கொண்டிருக்கின்றார். ஆகையால் அந்தக்ஷேத்ரத்திற்கு ஸமானமான க்ஷேத்ரம் எவ்விடத்திலுமில்லை. (3)

(மூ) सूतः ॥

[illegible] इति श्रीमन्नन्दिनं लोकनन्दिनम् ।
सनत्कुमारो मुनयः प्रत्युवाच विनयान्वितः ॥ (4)

अहो धन्योऽस्मि भगवन् भवत्पादसमाश्रयात् ।
महतां संगमात्को वा याति किं न कृतार्थताम् ॥ (5)

अगस्त्याय यज्ज्ञानमुपदिष्टं गुहेन वै ।
तन्मे [illegible] येनैव कृतकृत्यो भवाम्यहम् ॥ (6)

(உ) ஸூதமஹரிஷி சொல்லுகின்றார்:—

"ஹே சௌனகாதி மஹரிஷிகளே! இந்த ப்ரகாரம் சொல்லுகிற லோகாநந்தகராகிய நந்திகேஶ்வரரைப் பார்த்து, தேஜஸ்வியான ஸநத்குமாரமஹரிஷி வணக்கத்துடன் பதில் சொல்கின்றார்." "ஹே நந்திகேஶ்வர பகவானே! தங்களுடைய பாதங்களில் சரணமடைந்ததினால் நான் தன்யனானேன். மஹான்களுடைய சேர்க்கையினால் எவன் தான் தன்யனாகமாட்டான். முந்தி அகஸ்த்ய மஹரிஷிக்கு குஹஸ்வாமியினால் எந்த ஞானமானது உபதேசிக்கப்பட்டதோ, எந்த ஞானத்தைப்பெற்றுக்கொண்டதினால் நான் க்ருதக்ருத்யனாவேனோ, அப்பேர்ப்பட்ட ஞானத்தை எனக்கு உபதேசம் செய்யவேண்டும், என்று வேண்டிக்கொண்டனர். (6)

(மூ) नन्दीशः ॥

शृणु योगीन्द्र वक्ष्यामि शिवज्ञानमनुत्तमम् ।
यच्छ्रुत्वा मुच्यते पापात् नरः संसारसंभवात् ॥ (7)

(உ) நந்திகேஶ்வரர் சொல்கின்றார்:—

"ஹே ஸநத்குமார யோகீந்த்ரா! மனிதன் எதைக்கேட்டு ஸம்ஸாரத்தினாலுண்டாகிற பாபத்திலிருந்து விடுபடுவானோ அப்பேர்ப்பட்ட உத்தமமான சிவஞானத்தைச்சொல்கின்றேன், கேட்பீராக".

(மூ) सनत्कुमारः ॥

किं तज्ज्ञानमिति प्राज्ञ ज्ञेयं वा येन किं वद ।
ज्ञात्वा किं फलं तस्य सर्वज्ञ करुणानिधे ॥ (8)

𑌪𑌾𑌶𑌾𑌨𑍍 𑌪𑌾𑌶𑌶𑍍𑌚 𑌕𑍋𑌵𑌿𑌦𑍈𑌃 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ।
𑌅𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌪𑌶𑌵𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑌾𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ॥ (9)

𑌪𑌾𑌶𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋 𑌜𑌡𑍋 𑌯𑍋𑌽𑌯𑌂 𑌸𑌕𑍍𑌷𑌰𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌃 𑌪𑌰𑌶𑍍𑌶𑌮𑍍𑌭𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑍇𑌤𑍇 𑌹𑍍𑌯𑌨𑌾𑌦𑌯𑌃 ॥ (10)

𑌯𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑌃 𑌪𑌶𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌏𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।
𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌸𑍍𑌤𑍁 𑌯𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌪𑌾𑌶𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ (11)

𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌪𑌰𑍋 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌤𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑍇𑌰𑌕𑌃 𑌶𑌂𑌸𑌿𑌤𑌃 ।
𑌏𑌤𑌾𑌨𑌹𑌂 𑌨𑌜𑌾𑌨𑌾𑌮𑌿 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌪𑍃𑌥𑌗𑌸𑌂𑌕𑌰𑌮𑍍 ॥ (12)

𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌮𑍇 𑌦𑍇𑌵 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌯𑌥𑌾 𑌜𑌾𑌨𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌚𑍈𑌵 𑌚𑍈𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌚 𑌪𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ॥ (13)

(உ) ஸநத்குமார மஹரிஷி கேட்கின்ருர்:—

"கருணைக்கடலாகிய நந்திகேஶ்வர மூர்த்தே! ஸர்வக்ஞ! ஞானமென்று சொல்லப்படுவதுயாது? அதனல் அறியத்தகுந்தது என்ன? அதை அறிவதால் பலன் என்ன? ப்ரஹ்ம ஞானிகளான ப்ராஹ்மணர்களால் பசு என்றும் பாசமென்றும் சொல்லப்படுகின்றவை எவை? ஜடமில்லாத எது பசு என்று சொல்லப்படுகிறதோ அது அக்ஷரமென்று சொல்லப்படுகிறது. ஜடமான எது பாசமென்று சொல்லப்படுகிறதோ அது க்ஷரமென்று சொல்லப்படுகிறது. பரமாத்மாவான சிவபெருமான் க்ஷரத்திற்கும் அக்ஷரத்திற்கும் வேருக, ஆதாரமாயிருக்கின்ருர். இம்மூவர்களும் ஆதியந்தமற்றவர்கள். எது அக்ஷரமென்றும் பசுவென்றும் சொல்லப்படுகிறதோ, அதுவே புருஷனென்று சொல்லப்படுகிறது. எது க்ஷரமென்றும் பாசமென்றும் சொல்லப்படுகிறதோ, அது ஆத்மாவென்று சொல்லப்படுகிறது. க்ஷரத்திற்கும் அக்ஷரத்திற்கும் பரனுகி எஜமானுயிருக்கிறவர் யாரோ அவர்தான் க்ஷராக்ஷரங்களை ஏவுகின்ருர். இந்த மூன்று பொருள்களையும் ஒன்றிற்கொன்று சம்மந்தமில்லாமல் வேறு வேருக நான் அறியமாட்டேன். ஹே மஹாஞானியாகிற நந்திகேஶ்வர ப்ரபோ! அவைகளுடைய ஸ்வ

ரூபத்தையும் காரியங்களையும் நான் அறியுமாறு எனக்கு அவைகளை உள்ளபடியே சொல்லியருளவேண்டும்;'' என ப்ரார்த்தித்தனர்.(13)

(𑌈-𑌉) 𑌨𑌨𑍍𑌦𑌿𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

𑌮𑌾𑌯𑌾 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌰𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑍍𑌰𑍀 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑍀 𑌜𑌡𑌾 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 𑌸𑌾 𑌪𑌰𑌮𑌾𑌕𑌾𑌶𑍇 𑌵𑌿𑌲𑌸𑌨𑍍𑌤𑍀 𑌶𑌿𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 ॥ (14)

𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌵𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌜𑍀𑌵𑍋 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌜𑌡𑌰𑍂𑌪𑌯𑌾 ।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍀𑌰𑌮𑍋𑌹𑌸𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑍇 𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌂 𑌸𑍍𑌵𑌕𑌮𑍍 ॥ (15)

𑌕𑌲𑌾𑌦𑌿𑌕 𑌮𑍇𑌘𑌤𑌾 𑌮𑍇𑌘𑌾𑌶𑌾𑌤𑍍 𑌸 𑌨𑌿𑌯𑌤𑌿𑌤𑍍 𑌤𑌤𑍍 𑌕𑍍𑌷𑌯𑌾𑌤𑍍 ।
𑌪𑌞𑍍𑌚 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌕𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵 𑌦𑍁𑌃𑌖 𑌮𑌹𑌨𑍍𑌤𑌤𑌃 ॥ (16)

𑌤𑌦𑍀𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌹𑍀𑌨𑍋 𑌮𑍋𑌹 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌮𑍋𑌹 𑌸𑌾𑌯𑌕𑍍𑌷 ।
𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃 𑌕𑌰𑌣𑌂 𑌚𑌾𑌰𑌂 𑌮𑍋𑌹𑌕𑍍𑌤𑌾 𑌪𑌶𑍁𑌪𑌾𑌶𑌾𑌹𑍍𑌯𑌤𑌃 ॥ (17)

𑌮𑍈𑌨𑌵𑌾𑌸𑍍𑌯 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌸𑌲 𑌹𑌯𑌤𑌿 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 ।
𑌪𑌶𑍁 𑌸𑌂𑌜𑍍𑌞 𑌗𑌵𑌾𑌪𑌂 𑌚𑌾𑌮𑍇𑌰𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍍𑌯𑌸𑍍𑌚 𑌬𑌂𑌧𑌨𑍀𑌃 ॥ (18)

𑌮𑌾𑌯𑌿𑌤𑌸𑍍𑌚 𑌵𑌿𑌯𑍂𑌕𑍍𑌤𑌸𑍍𑌚 𑌶𑌰𑍀𑌰𑌮𑍇𑌰𑌮𑍇𑌷 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 ।
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰 𑌬𑌿𑌂𑌬 𑌪𑌟𑌾𑌕𑌾𑌶𑍇 𑌤𑌰𑌙𑍍𑌗𑍈𑌃 𑌸𑌂𑌚𑌲𑌦𑍍𑌭𑌿𑌃 ॥ (19)

𑌅𑌨𑌾𑌗𑌤𑌾 𑌅𑌤𑍀𑌤𑌾𑌸𑍍𑌚 𑌤𑌨𑌵𑍋𑌸𑍍𑌯 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 ।
𑌯𑌥𑌾 𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿 𑌜𑍀𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌦𑌧𑌤𑍇 𑌜𑌨𑌾𑌃 ॥ (20)

𑌗𑌵𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌦𑌾𑌯 𑌦𑌧𑌤𑍇 𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌪𑌶𑍁𑌃 ।
𑌕𑍍𑌲𑍇𑌶𑌕𑍍𑌷𑌂 𑌸𑌂𑌪𑌰𑌤𑍍𑌯𑌂 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌃 𑌕𑌨𑍍𑌦𑍁𑌕𑌂 𑌯𑌥𑌾 ॥ (21)

𑌸𑍍𑌵𑌗𑍃𑌹𑌂 𑌪𑌾𑌤𑌾𑌲 𑌹𑌨𑍍𑌯𑌨𑍍𑌯𑌕𑍇 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮 𑌕𑌲𑍍𑌪𑌶𑌾 𑌦𑌸𑍍𑌨 ।
𑌅𑌸𑍍𑌨 𑌬𑌦𑍍𑌧𑌃 𑌪𑌾𑌶𑌪𑌾𑌮𑍇𑌶 𑌸𑌰𑍍𑌵 𑌦𑌾𑌸𑌵𑌾𑌶𑌨𑌃 𑌪𑌶𑍂𑌃 ॥ (22)

𑌅𑌰𑌂𑌶 𑌶𑍍𑌰𑍀𑌗𑌵𑌨𑍍𑌨𑌾𑌥𑌾𑌯𑌾 𑌤𑍍𑌰𑌿𑌦𑌿 𑌶𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍍𑌗 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯 ।
𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌕𑌾𑌨𑍍𑌤 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌪𑌶𑌵𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ॥ (23)



ஸூதபுராணிகர் சௌநகாதி மஹரிஷிக்குத் தத்வங்களை
எடுத்துரைத்தல். [பக்கம் 183

(உ) நந்திகேச்வரர் சொல்கிறார்:—

ஈச்வரசக்தியானவள் மாயை யென்றும் ப்ரக்ருதி என்றும் ஜடரூபி யென்றும் சொல்லப்படுகிறாள். அந்த மாயையானவள் சிவாக்ஞையினாலே சிதாகாசத்தில் விளங்குகின்றாள். பரமாத்மாவினிடத்தை விட்டுப் பிரியாதவளாயிருக்கிற அவள், சைதன்யமில்லை. புருஷனானவர் ஜடரூபியான மாயையினாலே வ்யாபிக்கப்பட்டவராய் ஜீவனாகிறார். அந்தந்த சரீரத்தை யடைந்தவராகி பூர்வஜன்மத்தில் தான் செய்த கர்மபலத்தை யனுபவிக்கிறார். அந்த ஜீவனானவர் வினையைக் காரணமாகவுடைய போகத்தை யனுபவித்த பிற்பாடு, வினைகள் நாசமாகிறதினாலே ஜனனமரணத்திலிருந்து விடுபடுகிறார். புண்ய பாபரூபமான வினையானது ஸுகதுக்கரூபமான பலத்தைத்தருகிறது. அதினுடைய அனுபவமானது போகம். சரீரம் போகத்திற்கு ஸாதனமாயிருக்கிறது. உள்ளும் வெளியுமாயிருக்கிற இந்த்ரியங்கள் போகத்திற்கு வழியாயிருக்கிறது. போகத்தையனுபவிக்கிற போககர்த்தாவானவன் பசுவென்று சொல்லப்படுகிறான். இவன் செய்த வினைக்கு போக கர்த்தா இவனைத்தவிர வேறில்லை. (அதாவது இவன் செய்த கர்மங்களின் பலனை இவனைத் தவிர வேறொருவரும் அனுபவிக்கமாட்டார்கள்.) இவன் செய்த வினைப்பயனைத் தவிர வேறொருவரின் வினைப்பயனை (பிறர் செய்த கர்மங்களின் பயனை) இவன் அனுபவிக்கமாட்டான். பெண்டு பிள்ளைகள் மற்றும் பந்துக்களோடு கூட சேர்க்கையானது, யாத்திரை போகும்பொழுது மார்க்கத்தில் ஜனங்கள் ஒருவரை ஒருவர் ஸந்தித்துச் சேருவது போலவேதான். சந்த்ரபிம்பமானது ஆகாயத்தில் சஞ்சலமாயிருக்கிற நக்ஷத்திரக் கூட்டங்களோடு சேர்ந்திருந்த போதிலும் ஸம்பந்தமில்லாததாகக் காணப்படுகிறது போல, இந்த ஜீவனானவன் சரீரங்களால் மறைக்கப்பட்டவனானாலும் அதுகளில் ஸம்பந்தமில்லாதவனாகக் காணப்படுகிறான். மேலும் இந்த ஜீவனுக்குச் சென்றதுகளும் இனிவரப்போகிறதுகளுமான சரீரங்கள் கணக்கில்லை. ஜனங்கள் பழய வஸ்திரங்களைத் தள்ளிவிட்டு புது வஸ்திரங்களை தரிப்பதுபோலவே, இந்த ஜீவாத்மாவும் பூர்வ சரீரங்களை விட்டுவிட்டு புதிதான சரீரத்தைத் தரிக்கிறான். நதியிலிருக்கும்

மீனானது எவ்வாறு இருகரைகளிலும் அடிக்கடி முட்டி சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றதோ, அவ்வாறே இந்த ஜீவனும் மோக்ஷமடையும் வரையில் ஜனன மரணத்தை யடைந்து கொண்டிருக்கிறான். மேலும் பசுவான இந்த ஜீவனானவன் தன்னுடைய வினை வசத்தால் ஸ்வர்க்க பாதாளம் பூலோகம் முதலிய இடங்களில் ஈஶ்வரனுடைய பாசத்தால் கட்டுப்பட்டவனாய் ஸுகதுக்கங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். ஈஶ்வரனுடைய லீலாநிமித்தமாக இவ்விதம் ஏற்பட்டிருக்கின்றதென்று சாஸ்திரங்களில் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. ப்ரஹ்மதேவன் முதல் எறும்புவரையுள்ள ப்ராணிகள் பசுக்களென்று சொல்லப்படுகிறார்கள். (23)

(𑌸-வ) 𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 ॥

𑌯𑌾𑌸𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌮𑌾𑌯𑍇𑌤𑌿 𑌚𑌾𑌭𑌿𑌧𑌾 ।
𑌤𑌸𑍍𑌯𑌾 𑌵𑌦𑌸𑍍𑌵 𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌚 𑌮𑌹𑌾𑌮𑌤𑍇 ॥ (24)

(உ) ஸநத்குமாரர் சொல்கிறார்:—

புத்திமானே ஹே நந்திகேஶ்வரா! தங்களால் இப்பொழுது ப்ரக்ருதி யென்றும் மாயை யென்றும் எவள் சொல்லப்பட்டாளோ, (எந்தப்பொருளானது உதாகரிக்கப்பட்டதோ), அந்த மாயையினுடைய ரூபத்தையும் செய்கைகளையும் எனக்குச் சொல்லியருளவேண்டும், எனப்ரார்த்தித்தனர். (24)

(𑌸-வ) 𑌨𑌨𑍍𑌦𑌿𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

𑌯𑍈𑌷𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌸𑌾 𑌮𑌹𑍇𑌶𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 𑌪𑍁𑌨𑌃 ।
𑌪𑌶𑍂𑌨𑌾𑌮𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌾𑌯𑌾 𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌶𑌬𑍍𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ (25)

𑌸𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌮𑌾𑌯𑌾 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑍇𑌨𑌾𑌪𑌿 𑌨𑌾𑌮𑌭𑌿𑌃 ।
𑌕𑌥𑌿𑌤𑌾 𑌸𑌾𑌹𑍍𑌯𑌵𑍍𑌯𑌾𑌧𑌾𑌨𑌕𑌾𑌰𑌣𑌂 𑌚𑌾 𑌵𑌿𑌮𑍋𑌹𑌨𑌾𑌤𑍍 ॥ (26)

𑌸𑍈𑌵 𑌚𑍈𑌵 𑌵𑌿𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑌿 𑌗𑌣𑍍𑌯𑌤𑍇 𑌬𑍁𑌧𑍈𑌃 ।
𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮 𑌇𑌤𑌿 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿 𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 ॥ (27)

𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌪𑌞𑍍𑌚𑍈𑌵 𑌮𑌹𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑌞𑍍𑌚𑍈𑌵 𑌪𑌞𑍍𑌚𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌚 ॥ (28)

𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌹𑌂𑌕𑌾𑌰𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂𑌚𑍇𑌤𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍 ।
𑌸𑌂𑌸𑌾𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌚𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌸𑌵𑌿𑌕𑌾𑌰 𑌉𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ (29)

𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌦𑌿 𑌘𑌟𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 ॥ (30)

𑌨 𑌹𑌿 𑌰𑌾𑌜𑌨𑍍𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌮𑍋𑌹𑌿𑌤𑌾 𑌬𑍁𑌧𑌾𑌃 ।
𑌨 𑌤𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌪𑍍𑌰𑌭𑌾𑌸𑌨𑍍𑌤𑌿 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌕𑌾𑌨𑌪𑌿 ॥ (31)

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌶𑍍𑌵𑌾𑌨𑌂 𑌕𑌾𑌣𑌶𑍍𑌚 𑌬𑌧𑌿𑌰𑌃 𑌕𑍃𑌶𑌃 ।
𑌶𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌂 𑌗𑍌𑌰𑍋 𑌰𑌕𑍍𑌤𑍋𑌹𑌂 𑌕𑍃𑌶𑍋𑌹𑌂 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ॥ (32)

𑌨𑌹𑍍𑌯𑌾 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍋 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌵𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 ।
𑌸𑍍𑌵𑌕𑍀𑌯𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌹𑌿 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌨𑌾𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌤𑍍𑌵𑌪𑌿 ॥ (33)

𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌃 ।
𑌤𑌂 𑌚 𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌦𑍇𑌵𑍇𑌶𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑍇𑌵 𑌨 𑌤𑌂 𑌜𑌨𑌃 ॥ (34)

𑌤𑌾𑌨𑌿 𑌜𑍀𑌵𑍋𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌯𑌥𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌮𑍍 ॥ (35)
𑌵𑌿𑌶𑍇𑌷 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌚 𑌤𑌦𑍍𑌦𑍇𑌶𑍇 𑌤𑌦𑍍𑌦𑍇𑌶𑌕𑍃𑌤𑌾𑌮𑍍 ॥ (35½)

(உ) நந்திகேஶ்வரர் அருளுகிறார்:—

எந்த மாயையானவள் ப்ரக்ருதி என்று சொல்லப்படுகிறளோ அவள் பரமாத்மாவை ஆச்ரயித்தவளாய், மறுபடி எல்லா பசுக்களாலும் மாயை என்று சொல்லப்படுகிறள். அந்த மாயையானவள் அவ்யக்தமென்றும், ப்ரக்ருதி என்றும், மாயை என்றும், ப்ரதானமென்றும், பெயர்களால் அழைக்கப்பட்டு, எல்லா ஆத்மாக்களுக்கும் உபாதான காரணமாகிறள். ஸுகதுக்கங்களால் மோகத்தை அடைந்திருக்கும் ஆன்மாவிற்கு மூன்று குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்கிற இம்மூன்று குணங்களும் மாயையிலிருந்து உண்டானதுகள். சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம், என்கிற ஐந்து தன்மாத்ரைகளும், ப்ருதிவி

அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், என்கிற ஐந்து பூதங்களும், துவக்
(தோல்), சக்ஷுஸ் (கண்), ஶ்ரோத்ரம் (காது), ஜிஹ்வை (நாக்கு),
ஆக்ராணம் (மூக்கு), என்கிற ஐந்து ஞானேந்த்ரியங்களும், வாக்
(வாய்), பாணி (கை), பாதம் (கால்), பாயு (மலத்வாரம்), உபஸ்தம்
(ஜலத்வாரம்), என்கிற ஐந்து கர்மேந்த்ரியங்களும், மனஸ், புத்தி,
அஹங்காரம், சித்தம், என்கிற நாலு அந்தக்கரணங்களும், சுருக்க
மாக "அவ்யக்தம்" என்று சொல்லப்படுகிறது. இவைகள் விகார
பாவத்தைக் காண்பிக்கின்றன. இதுகளுக்கு காரணத்தன்மையை
யடைந்த சக்தி அவ்யக்தமென்று சொல்லப்பட்டது. காரியத்
தன்மையை அடைந்த சரீரம் முதலானதும், கடம் முதலானதுகள்
போல வ்யக்தமென்று சொல்லப்படுகிறது. ஆத்மாவானது இந்த
தத்வங்களால் மறைக்கப்பட்டிருக்கிறது.(என்பதை)வித்வான்களும்
கூட மாயையின் பலத்தினால் மோகிக்கப் பட்டவர்களாகி (உணர
முடியாதவர்களாய்), ப்ரஹ்மா முதலான இந்தபக்ஷங்களையே கொண்
டாடுகிறார்கள். "நான் ப்ரஹ்மா," "நான்ப்ராஹ்மணன்," "நான்
ஏகாக்ஷி" (ஒருகண் தெரியாதவன்), "நான்செவிடன்," "நான்
வித்வான்" "நான் கருப்பன்," "நான்வெள்ளையன்," "நான்மெலி
ந்தவன்," "நான்ஊமையன்," என்று சொல்லப்படுகிற இவ்வெவ்
வேறு லக்ஷணங்கள் பொருந்தியவர்களைக் காட்டிலும் விலக்ஷண
ராகிய ஆத்மாவானவர் தம்முடைய லீலையினாலே, இவர்களைப் பார்க்
கிறவராகி, "சரீரமென்னுடையது; சரீரம் நானில்லை; இதுகளெல்
லாம் ஜடங்கள்; இவை, சரீரத்தை உடையவனாகிய என்னைப்பார்க்க
(ஆத்மாவைத் தெரிந்து கொள்ள) முடியாது. ஆனால் நான் இவை
களைத் தெரிந்து கொள்ளும் திறமை உள்ளவன்" என்று கூறுகின்
றது. அவைகளை யெல்லாம் ஆத்மாவானவர் பார்க்கிறார், அவரை,
இவைகள் பார்க்கிறதில்லை. ஜீவாத்மாவும், ஸர்வத்ர பரிபூர்ணராயும்
நியந்தாவாயும் ஹிரண்மயனாயும் இருக்கிற ஈஶ்வரனை எப்பொழுது
பார்க்கிறானோ (அறிகிறானோ அப்பொழுதே புண்ய பாபங்கள் விடு
பட்டவனாய் உடனே ஸாயுஜ்யத்தை யடைகின்றான். (35½)

(உ-ரு) ஶௌனகஃ ॥

உத்யஹ்வோ உஷாபோமீ ஶாரணா ஸாஜந்நா ।
ஈடீத வேதவித்தாந்த விஶ்வஸ்ஹெவ்யா விராஜதே ॥ (36½)

நாரதஶ்ச ததா ப்ராப்ய ஶிவஜ்ஞாநம் ஶிவாத்மஜாத் ।
தத்ரைவ வஸதி ஶ்ரீமத் ஸத்யஜ்ஞாந கிரௌ முதா ॥ (37½)

அந்யேபி முநயஸ்ஸர்வே மார்கண்டேயாதயஸ்ததா ।
ராஜாநோ முசுகுந்தாத்யா தேவாஶ்சாந்யே தேவதாகணா: ॥ (38½)
போகமோக்ஷபரா நித்யம் வாஸஞ்சக்ரு முதாந்விதா: ॥ (39)

(உ) பின்னும் நந்திகேஶ்வரர் சொல்கின்றார்:—

இவ்விதமாக குருவாகிய ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினாலே வேதாந்த ஸித்தாந்த வித்தைகளை அப்பாஸஞ்செய்து வைக்கப்பட்ட மஹாயோகீஶ்வாராகிய அகஸ்த்ய மஹரிஷியானவர், அப்பொழுதே அதிகமான தேஜஸை அடைந்தார்; அவ்வாறே நாரத மஹரிஷியும் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினிடமிருந்து சிவஞானோபதேசம்பெற்று அழகுபொருந்திய அந்த ஸத்யஞானகிரி (திருப்பரங்குன்றத்தி) லேயே வஸித்து வருகிறார். மார்க்கண்டேயர் முதலான மஹரிஷிகளும், முசுகுந்தர் முதலான ராஜரிஷிகளும், இன்னும் அநேகமான தேவகணங்களும், போகத்தில் ஆசையுள்ளவர்களும், மோக்ஷத்திலாசை யுள்ளவர்களும், மற்றுமநேகம் பேர்களும், ஆனந்தமுடையவர்களாக அந்த க்ஷேத்ரத்தில் வாஸம் செய்துகொண்டு வருகிறார்கள். (39)

(மூ)

தஸ்மிந் க்ஷேத்ரே வஸேத் புண்யே ஹ்ருஷ்டேந்த்ரியோ மஹாத்மந: ।
வஸந்தி யே ஶாஸ்வதீம் யாவத்காலம் மஹாமதே ॥ (40)
தாவத்வர்ஷஶதம் தேவி ஶிவலோகே மஹீயதே ॥ (40½)

பஹுநாத்ர கிமுக்தேந ஶ்ருணு த்வம் யோகிநாம்வர ।
பஹுஜந்மஸு யே லோகே க்ருதபுண்யா தபஸ்விந: ॥ (41½)

யேஷாம் ஶைவம் பரம் ஜந்ம யேஷாமீஶ: ப்ரஸீதது ।
தத்ர வாஸம் லபந்தே ஹி தே மஹாத்மாந: ஸுவ்ரதா: ॥ (42½)

(உ)

பூலோக கைலாஸமாயும் ரொம்பவும் மகிமை பொருந்தியதாயும் புண்யத்தைத்தரத் தகுந்ததாயும் மிக புண்யக்ஷேத்ரமாயுமிருக்கிற அந்த திருப்பரங்குன்றத்தில் ஒருவருடைய ஹஸ்தி (எலும்பு) கள் எவ்வளவு காலம்வரையிலிருக்கிறதுகளோ, புத்திமானே! அதற்கு நூறுபங்குக்கதிகமான காலம்வரையில் அவர் சிவலோகத்தில் பூஜிக்கப்படுகிறார். "யோகிஶ்ரேஷ்டா! பிரஹ்மஞானியான ஸநத்குமாரமஹரிஷே! இந்த விஷயத்தில் விசேஷமாய்ச் சொல்லுவதில் (பலன்) என்ன? சுருக்கமாயுரைக்கின்றேன், கேளும். உலகத்தில், அநேக ஜன்மங்களில் விசேஷ புண்யம் செய்தவராயும், தபஸ் புரிந்தவராயும், கடைசி ஜன்மத்தை அடைந்தவராயும். ஈஶ்வரப்ரஸாதம், பெற்றவராயுமுள்ள மகான்களும், மகா தபஸ்விகளுமான அந்தப் பெரியோர்கள்தான் அந்த திவ்ய க்ஷேத்ரத்தில் வாஸத்தை அடைகின்றார்கள்." (42½)

(ஸ-ம)

தாபத்ரயாபிஸந்தப்தா: யே மஹாவ்யாதிபீடிதா: ।
புத்ரஹீனாஸ்ததா யே ச தாரித்ர்ய பரிபீடிதா: ॥ (43½)

க்ஷணக்ஷணம் மஹாபத்பிராக்ராந்தா: க்ரூரகண்டகா: ।
க்ஷுத்வம் து:க்க ஶோகார்த்தா ஸ்தாவரஸ்தாஸ்ச யே நரா: ॥ (44½)

க்ஷுதிதா: ஸிம்ஹலிதா யே ச து:ஷ்டராஜ ப்ரபீடிதா: ।
க்ஷயரோகஸமாக்ராந்தா: காமக்ரோத ப்ரபீடிதா: ॥ (45½)

து:ஸ்வப்ந வ்யஸநோபேதா: து:கிதாஸ்ச ஸர்வகர்மணா: ।
தைவஸ்ய ஸத்யதோ ஸம்ஸாரஸ்ய ஹ்ருத: ப்ரயாகர: ॥ (46½)

(உ)

தன்னாலும் பிறராலும் தெய்வத்தாலும் வருகிற தாபத்ரயங்களை யடைந்தவர்களும், மகாவியாதியினாலே பீடிக்கப்பட்டவர்களும், புத்ரனில்லாதவர்களும், தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டவர்களும், க்ஷணத்திற்கு க்ஷணம் மகாஆபத்துகளால் ஆக்ரமிக்கப்

பட்டவர்களும், கொடியகர்மங்களைச் செய்தவர்களும், ஜன்மாந்திரத்திற்செய்த தீவினையினுல் அடிக்கடி ஹிம்சை (பாதை) அடைந்தவர்களும், எப்பொழுதும் துக்க சோகங்களினுலே பீடிக்கப்பட்டவர்களும், சாபத்தை யடைந்தவர்களும், சத்ருக்களினுலும் துஷ்ட ராஜாக்களினுலும் பீடிக்கப்பட்டவர்களும், அபம்ருத்யுவினுலே பீடிக்கப்பட்டவர்களும், காலம்ருத்யுவினுலே இழுக்கப்பட்டவர்களும், கெட்ட ஸ்வப்னம்கண்டு விஸனமடைந்தவர்களும், வெகு பாபங்களைச்செய்து கலங்கினவர்களுமாகிய இப்படிப்பட்ட ஜனங்களாலேயும், கருணைக்கடலாகிய பராசலேஶ்வரர், ஸத்யாத்ரிநாதர்:— ஸ்ரீஸுப்ரஹ்மண்ய மூர்த்தி, ஸேவிக்கத்தகுந்தவரான ப்ரபு. (46½)

(மூ) सूतः ॥

माहात्म्यं परमैश्वर्यं पर्वतस्य [illegible] ।
शृणुतात्रैव मुनयो मनोवाचामगोचरम् ॥ (47½)

सनत्कुमार मुनये यदुक्तं नन्दिना तदा ।
वक्ष्याम्यहं संग्रहेण यथामति मुनीश्वराः ॥ (48½)

[illegible] । (49½)

[illegible]

(உ) ஸூதர் சொல்கிறார்:—

"ஹே சௌநகாதி மஹரிஷிகளே! உத்தமோத்தமமான பராசல க்ஷேத்ரத்தினுடைய, மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாததான மகிமையை உரைக்கின்றேன், கேளுங்கள். நந்திகேஶ்வரரால் ஸநத்குமார மஹரிஷிக்கு எது சொல்லப்பட்டதோ, ஹே மஹரிஷிகளே! அந்த மகிமையை என்புத்திக்கெட்டினவரை சுருக்கமாகச்சொல்லு

கின்றேன். அந்தமகிமையை விஸ்தாரமா யுரைப்பதற்கு அநேகம் கோடிவருஷங்கள் சொன்னாலும் முடியாது. அந்த மாகாத்ம்யமோ (மகிமையோ) மிகவும் ஆச்சர்யமானது. அதைச் சொல்லவோ நான் சக்தியற்றவனாக யிருக்கிறேன். புண்யாத்மாக்களே! மங்களகரமான அந்தபராசல க்ஷேத்ரத்தில் அநேக தீர்த்தங்களால் ஸேவிக்கப்பட்ட சரவணப்பொய்கை என்ற மகாதீர்த்தத்தில் எவன் ஸ்நாநம்செய்து விட்டு கருணைக்கடலாகிய தேவஸேநாபதியான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினுடைய தரிசனத்தைச் செய்கிறானோ அவன், கைலாஸ பர்வதத்தில் ஸ்ரீகண்ட பரமேஶ்வர மூர்த்தியினுடைய ஸந்நிதானத் தில் எப்பொழுதும் வஸிக்கிறான். இதில்ஸந்தேகமே யில்லை." (50½)

(ஶ்லோ)

விஶ்வாசீ ஶப்தா நாரதஸ்ய மஹதா ஶாபேந யா க்லிஷ்டா
தத் க்ஷேத்ரம் ஸமவாப்ய ஶாபஜமஹோ ஹித்வா திவம் ஸம்ஶ்ரிதா।
தஸ்மாத் த்ரய்யாரணீ மதஸ்ய ஸகலம் கைலாஸ ஶைலஸ்ய
மாஹாத்ம்யம் வக்தும் அநேநாபி சதுராநநோ வக்த்ரம் க்ஷமோ
மஹாந் ॥ (51½)

(உ)

விஶ்வாசி என்கிற அப்ஸரஸ்த்ரீயானவள் நாரதமஹரிஷியி னுடைய மகத்தான சாபத்தினாலே பீடிக்கப்பட்டவளாய், பராசல க்ஷேத்ரத்தை அடைந்து சாபத்தினாலேற்பட்ட பாதையை நிவர்த்தி செய்துகொண்டு மறுபடியும் ஸ்வர்க்கத்தை அடைந்தாள். ஆகையி னாலே, ஹே மஹரிஷிகளே! பூலோககைலாஸமாய் விளங்கும் இந்த பராசல க்ஷேத்ரத்தின் மகிமையை முழுதுமுரைக்க மகானாகிய நான்முகக் கடவுளும் சக்தியற்றவர். (51½)

(ஶ்லோ)

யஶ்ஶ்ருணோதி (1) பரமேஶ பக்திமாந் தத்வஸார மபிதாயகம்
ஸமாயஶு ।
உத்தமம் பரமாம்ஶபாவகம் ஶ்ரீதயாமயீ மபிஜேஷ்டமாப்நு
யாத் ॥ (52½)

---

(1) பரமேஶ்வர மேவைஷகம்—பாராயணம்.

இதி ஶ்ரீ ஶைவ மஹாபுராணே
ஸநகாதிஶ்ருத ஸம்ஹிதாயாம் மஹாஸிம்ஹாஸநே க்ஷேத்ர வைபவே
ஸத்யகிரி மாஹாத்ம்யே நவமோऽத்யாய꞉ ॥

(உ)

தத்வங்களுக்குள் ஸாரமானதும் எல்லா புருஷார்த்தங்களேயும் கொடுக்கிறதுமான இந்தக்ஷேத்ர மாகாத்ம்யத்தையும், கங்காதீர்த்தத்தினுடைய உத்பத்தியையும், சிவபக்தியுள்ள யாதொருவன் கேட்கிருனே அவன் சித்தசுத்தி ஈராய் உள்ள எல்லா இஷ்டங்களேயும் அடைவான். ($52\frac{1}{2}$)

ஒன்பதாவது அத்யாயம்
முற்றிற்று.

அத தஶமோऽத்யாய꞉ ॥

(ம-ஒ) ருஷய꞉ ॥

அஹோ ஸத்யகிரிக்ஷேத்ர மாஹாத்ம்யம் பரமாத்புதம் ।
ஸூத தாஸ்மாகம் மஹாபாக ஸூதயோக்தம் த்வமஹர்ஷி ॥ (1)

நாரதேந புரா ஶப்தா விஶ்வாசீ த்வப்ஸரோவரா ।
பராஶர்யம் ஸரோஸாத்ய ஶாபமுக்தா திவங்கதா ॥ (2)
இத்யுக்தம் பவதா ஸூத தச்சரித்ரம் வதஸ்வ ந꞉ ॥ ($2\frac{1}{2}$)

பத்தாவது அத்யாயம்.

(உ) சௌநகாதிரிஷிகள் கேள்கின்ருர்கள்:—

“மகாபாக்யசாலியாகிய ஸூதமஹரிஷே! இந்த பராசல க்ஷேத்ர மாகாத்ம்யமானது ரொம்பவும் மேலாயும் ஆச்சர்யகரமாயுமிருக்கிறது. அதை தாங்கள் மறுபடியும் எங்களுக்குச் சொல்லவேண்டும். முக்தி நாரதமஹரிஷியினல் சபிக்கப்பட்ட விஶ்வாசி என்னும் ஶ்ரேஷ்டமான அப்ஸரஸ்த்ரீயானவள் இந்த பராசல

க்ஷேத்ரத்தை யடைந்து சாபத்திலிருந்து விடுபட்டவளாகி ஸ்வர்க்கத்தை யடைந்தாளென்று தங்களால் சொல்லப்பட்டதே, அந்த சரித்திரத்தை (விபரமாக) எங்களுக்கு உரைக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.'' (2½)

(மூ-ம்) ஸூத: ।

[illegible]
[illegible] (3½)

[illegible]
[illegible] (4½)
[illegible] (5)

(உ) ஸூதமஹரிஷி சொல்கிறார்:—

ஒரு ஸமயத்தில் நாரதமஹரிஷியானவர் மஹாபுண்ய லோகமான ப்ரஹ்மலோகத்திலிருந்து புறப்பட்டு தேவேந்த்ரனைப் பார்ப்பதற்காக வேகமாய்ப் போனார். அந்தக்காலத்தில், ஜனங்களை மோகிக்கச் செய்கிறவளான ''விஶ்வாசீ'' என்னும் மேலான அப்ஸரஸ்த்ரீயானவள் மன்மதனால் பீடிக்கப் பட்டவளாய்க் கொண்டு, குபேரனுடைய குமாரனும் பரம பாக்யசாலியுமான ''யக்ஷ''னோடுகூட, மனுஷ்யதர்மத்திற்கேற்ப விஶ்வாஸத்துடன் வழியிலே க்ரீடைசெய்து கொண்டிருந்தாள். (5)

(மூ-ம்)

[illegible]
[illegible] (6)
[illegible] (6½)

(உ)

''ஹே ஶௌநகாதி மஹரிஷிகளே! அப்பொழுது அந்த வழியாகவந்த நாரதமஹரிஷியை, அந்த யக்ஷன் கண்டு பயந்தவனாய், பரபரப்போடு எழுந்திருந்து, பக்தியுடன் அம்முனிவர்முன் தலை

வணங்கி நின்றான். அந்த விஶ்வாசியோவென்றால், ரூபயௌவன ஸம்பத்தினாலும் மயக்கத்தினாலும் லஜ்ஜையற்று (ஆடையன்னியில்) நின்றாள். (6½)

(மூ-ம்)

தாம் த்ருஷ்ட்வா ததா க்ருத்தோ நாரதஸ்தாம் ஶஶாப ஹ ।
அநங்கீக்ருத்ய யஸ்மாந்மாம் திஷ்டஸி த்வம் துராத்மநி ॥ (7½)
தத்பூலோகே மநுஜா பூத்வா வேஶ்யா பவ மதாலஸே ॥ (8)

(உ)

நாரத மஹரிஷியானவர் அப்பேர்ப்பட்டவளைப் பார்த்து "ஏ துராத்மாவே! நீ என்னைக்கண்டு லக்ஷியம்செய்யாமல் நின்றபடியினால், மதத்தால் சோம்பலுடையவளே! நீ பூலோகத்தில் மனுஷ்ய ஸ்த்ரீயாய்ப் பிறந்து வேசியாகக்கடவாய்" என்று சபித்தனர். (8)

(மூ-ம்)

ஸஹஸா த்வரயா பீதா து:கேந மஹதாயுதா ।
ப்ரணம்ய தம் ஶாபமோக்ஷம் ப்ரார்த்தயாமாஸ நாரதம் ॥ (9)

(உ)

அப்பொழுதே அந்த விஶ்வாசியானவள் அதிகமான துக்கத்தை யடைந்து மிகவும் பயந்தவளாய், அந்த நாரதமஹரிஷியை நமஸ்கரித்து சாபவிமோசனம் செய்யவேணுமாய்ப் பிரார்த்தித்தாள். (9)

(மூ-ம்)

ஸோऽப்ரவீத்தாம் தேவீம் ப்ரார்த்திதோ கருணயாந்வித: ।
பூலோகே ஸத்யவ்ரத க்ஷேத்ரம் யதா த்வம் ஸங்கதா பவே ॥ (10)
தத்ர தே ஶாபமோக்ஷஸ்து பவிஷ்யதி நஸம்ஶய: ।
இத்யுக்த்வா ச மஹாயோகீ யயௌ தேவஸபாந்தரம் ॥ (11)

(உ)

அப்படிப் பிரார்த்திக்கப்பட்ட நாரதமஹரிஷியானவர் கருணையுடன் கூடினவராய் அந்ததேவஸ்த்ரீயைப் பார்த்துச் சொல்கிறார்;

"ஓ அபலே! நீ பூலோகத்தில் ஸத்யாசல க்ஷேத்ரமென்னும் திருப்பரங்குன்றத்தை எப்பொழுது அடைகின்றாயோ அப்பொழுது சாபவிமோசனமாகும். ஸம்சயமில்லை;" என்று அந்த மகாயோகியானவர் சொல்லிவிட்டு தேவஸபையை நோக்கிப் போய்விட்டார். (11)

(ஸ-ம்)

ஏஷா ஸா த்வயா ஶாபாந்நாரதஸ்ய மஹாத்மநः ।
ஸாऽபி கல்யாண நகரே வேஶ்யாயாः ஸுதயா அபவத் ॥ (12)

வேஶ்யாயாஶ்சைவ காமேந ப்ராப்ய யௌவநயௌவநா ।
ஸர்வஜாதி ஸமுத்பந்நைः புருஷைர்நீதிவர்ஜிதா ॥ (13)
விஷயாநுபவாத்தஸ்யாः மஹாரோகஸமந்விதா ॥ (13½)

(உ)
பிறகு அந்த விஶ்வாசியானவள் மஹாஞான நாரதமஹாரிஷியினுடைய சாபவேகத்தினாலே பூலோகத்தில் "கல்யாண நகர"த்தில் (மணலூரில்) "பத்மினீ" என்ற வேசிக்குப் பெண்ணாய்ப் பிறந்தாள். காலக்ரமமாய் யௌவனத்தை யடைந்த அவள், நீதி தவறி எல்லா ஜாதி புருஷர்களோடும் கூடி விஷயஸுகங்களை யனுபவித்தாள். அந்தக்காரணத்தினால் மகாவியாதியை அடைந்தாள். (13½)

(ஸ-ம்)

தஸ்மிந் காலே ஜநாஸ்ஸர்வே ஸுப்ரஹ்மண்யம் ஸுரார்ச்சிதம் ।
ஸத்யஜ்ஞாந ஶரீரஸ்ய ஸ்கந்தஸ்ய பரமாத்மநः ॥ (14½)

நிரீக்ஷார்த்தஞ்ச கல்யாணம் ரதோத்ஸவமேவ ச ।
ஸேவிதும் ச யயுஸ்தீர்த்தம் ஸர்வை ஸாऽபி யயௌ ததா ॥ (15½)

(உ)
அந்தக்காலத்தில் பங்குனி உத்திரத்தில் எல்லாஜனங்களும், பராசலநாயகனும் பரமாத்மாவுமான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினுடைய திருக்கல்யாண மகோத்ஸவத்தையும் தேரோடும் திருநாளையும் தீர்த்தவாரி உத்ஸவத்தையும் தரிசிக்கப்போனார்கள். அப்பொழுது அந்த விஶ்வாசியும் அவர்களுடன்கூட போனாள். (5½)



''விசுவாசீ'' என்னும் அப்ஸரஸ்த்ரீயும் ''ராஜசேகர'' மகாராஜனும்
சரவணப்பொய்கையில் நீராடிப் புராணம் கேட்டு குமாரஸ்வாமியை
தரிசித்துத் தங்கள் சாபம் நீங்கி நற்கதி அடைதல். [பக்கம் 1

(𑌮𑍂)

𑌤𑌤𑍍𑌰 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌮𑌹𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌪𑌦𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌶𑍋𑌭𑌿𑌤𑍇 ।
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌰𑌥𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑍃𑌤 𑌮𑍁𑌤𑍍𑌸𑌵𑌮𑍍 ॥ (16½)

𑌤𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌮𑌹𑌾𑌸𑍇𑌨𑌂 𑌗𑍁𑌹𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌮𑍋𑌚𑌕𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑍇𑌷𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑌰𑌯𑌾 𑌤𑌦𑍍𑌦𑌿𑌨𑍇 𑌚 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥ (17½)

𑌉𑌷𑌿𑌤𑍍𑌵𑌾𑌥 𑌰𑌜𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍁 𑌮𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍 ।
𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌪𑌠𑌨𑍇 𑌪𑍍𑌰𑌵𑌣𑌾𑌸𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌾 ॥ (18½)
𑌪𑍁𑌰𑌾𑌣 𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌶𑍃𑌣𑍋𑌤𑍍𑌤𑌥𑌾 ॥ (19)

𑌉𑌪𑌵𑌾𑌸𑌪𑌰𑌾 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑍈𑌵 𑌚 ।
𑌮𑍂𑌰𑍍𑌛𑌾𑌵𑍍𑌯𑌾𑌜𑍇𑌨 𑌸𑌹𑌸𑌾 𑌤𑌦𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌚 𑌮𑌾𑌨𑍁𑌷𑌮𑍍 ॥ (20)

𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰 𑌵𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌶𑌾𑌪𑌾 𑌦𑌿𑌵𑌂 𑌗𑌤𑌾 ।
𑌏𑌵𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑌿𑌶𑌯 𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥ (21)

(உ)

அங்கு தாமரை புஷ்பங்களால் அழகுபொருந்திய மகாதீர்த்தமான சரவணப்பொய்கையில் ஸ்நாநம்செய்து, ஸாக்ஷாத்தேவேந்த்ரனால் நிர்மாணம்செய்யப்பட்ட அத்புதமான அந்த ரதோத்ஸவத்தை தரிசித்து, அந்த க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருக்கும் தேவஸேநாபதியும் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்கடிப்பவருமான குஹஸ்வாமியையும் விசேஷ பக்தியுடன் தர்சனம் செய்தாள். பின்னும் அங்கேயேதங்கி அவ்வுத்தம க்ஷேத்ரத்தின் மாகாத்ம்யத்தைக் கேட்பதில் ஆசையுள்ள மனதுடன் உபவாஸமிருந்து, ராத்திரியில் ப்ராஹ்மணோத்தமர்களை அழைத்து நன்கு உபசரித்து, அவர்களில் புராணம் சொல்வதில் தேர்ச்சியுள்ளவர்களை ப்ரார்த்தித்து நமஸ்காரம் செய்து, அந்த ஸ்தல புராணத்தைச் சொல்லக்கேட்டாள். பின் நமஸ்காரம் செய்தாள். அப்பொழுதே மூர்ச்சை அடைந்தாள். அதுகாரணத்தால் சீக்ரமாக அந்த மநுஷ்ய சரீரத்தை விட்டு, அந்த உத்தமக்ஷேத்ரமகிமையால் நாரதமஹரிஷி சாபத்திலிருந்தும் விடுபட்டு ஸ்வர்க்கத்தை அடைந்தாள். இவ்வாறு அந்த

க்ஷேத்ரத்தின் மஹிமையானது மிகவும் சிறந்ததாயும் ஆச்சரிய (21)
முள்ளதாயு மிருக்கிறது.

(மூ-ம்)

[illegible] ।
[illegible] ॥ (22)

[illegible] ।
[illegible] ॥ (23)
[illegible] ॥ (23½)

(உ) ஸூதமஹரிஷி பின்னும் சொல்கிறார்:—

“ஹே சௌனகாதி மஹரிஷிகளே! இன்னமும் அந்த க்ஷேத்ர மாகாத்ம்யத்தைச் சொல்லுகின்றேன். முன் ஒரு காலத்தில் காஞ்சிபுரமென்னும் புண்ய க்ஷேத்ரத்தில், அநேக சாஸ்த்ரங்களுடைய தத்வங்களை யறிந்தவனும், எப்பொழுதும் ஸ்வதர்மத்தைக் கைவிடாதவனும், பரமசிவனிடத்திலும் நாராயணனிடத்திலும் ஸமமாய் பக்தி செய்கிறவனும், ப்ராஹ்மண பக்தியுடையவனும், அநேக தானங்களை அளிக்கிறவனும் மகாதேஜஸ் பொருந்தினவனு
மான “ராஜசேகரன்” என்று பெயர் பூண்ட ஓர் அரசன் இருந் (23½)
தான்.”

(மூ-ம்)

[illegible] ।
[illegible] ॥ (24½)
[illegible] ॥ (25)

(உ)

அவன் ஒரு ஸமயத்தில் ரொம்பவும் இகழப்பட்ட “த்ரிதண்டிகள்” என்கிற வைஷ்ண ஸன்யாசிகளினுடைய கிராமத்திற்குப் போனான். அந்த ஊரில் மகாத்மாவான அந்த மகாராஜாவிற்கு, வேதமோதாதவர்களும் வெள்ளை மண்ணை எப்பொழுதும் பூசிக்

கொள்ளுகிறவர்களுமான அந்த த்ரிதண்டிகளுடன் ஸம்பாஷணை ஏற்பட்டது. (25)

(ஸ-மூ) 𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌿𑌨𑌃 ॥

𑌶𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌶𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌤 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌦𑍀𑌕𑍍𑌷𑌯𑌾 ।
𑌦𑍀𑌕𑍍𑌷𑍈𑌵 𑌮𑍋𑌚𑌿𑌨𑍀 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌮𑍍 ॥ (26)

𑌰𑌹𑌸𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇 𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌤𑌾𑌵𑌕𑍈𑌶𑍍 𑌶𑌂𑌭𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ॥ (27)

(உ) த்ரிதண்டிகள் சொல்லுகிறார்கள்:—

"ஹே ராஜனே! நாய் மாம்ஸத்தைத்தின்கிறவனானாலும் விஷ்ணு தீக்ஷையால் கர்ம பந்தங்களை விட்டவனாகி மோக்ஷத்தை யடைகிறான். எல்லோருக்கும் விஷ்ணு தீக்ஷைதான் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய தென்று அறியத்தக்கது. இந்த மார்க்கத்தில் ஒரு ரஹஸ்யமிருக்கிறது. அதென்னவென்றால் "வேறு தெய்வத்தை பூஜை செய்யக்கூடாது; விஷ்ணுதீக்ஷை பெற்றுக்கொண்டவர்கள் ரொம்ப ப்ரயத்தினம் செய்தாவது எவ்விதத்திலும் சம்புவை ஆராதிக்காமலிருக்கக் கடவார்கள்." (27)

(ஸ-மூ)

𑌇𑌤𑍍𑌥𑌂 𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌸 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌪𑌸𑍍𑌤𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ।
𑌤𑍍𑌯𑌜𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌶𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑌿 𑌨 𑌵𑍈𑌦𑌿𑌕𑌾𑌨𑍍 ॥ (28)

𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌤𑌾𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚𑌾𑌚𑌰𑌤𑍍 ।
𑌸 𑌰𑌾𑌜𑌶𑍇𑌖𑌰𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑌪𑌾𑌲𑌯𑌤𑍍 ॥ (29)

(உ)

இவ்விதம் சொன்ன த்ரிதண்டிகளுடைய வாக்கியத்தைக் கேட்டு அந்த ராஜசேகரராஜனனவன் துன்மார்க்கமான பாஷண்ட மார்க்கத்தை யடைந்து, வேதங்களையும் அவைகளை யறிந்த வைதிகப்ராஹ்மணர்களையும் ஆதரிக்காமல், தாந்த்ரிகமான பாஷண்ட மதாசாரமென்கிற எல்லா கர்மாவையும் பின்பற்றிக்கொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். (29)

(ஸ-மூ)

ததோ பஹுதிதே காலே ஸ ராஜா பஞ்சதாம் கத:।
வேதோக்தேந ப்ரகாரேண நாஸ்யாபூத் ஔர்த்வதைஹிகம்॥ (30)

ததோ யமபடைர் கோரை: த்ருதோ நாஸௌ ஸிவத்ரோஹகாரணாத்।
ஸிவத்ரோஹேண நரகே யாதநா அயுதாப்தம் ஸ்தித:॥ (31)

(உ)

பின்னர் வெகுகாலம் சென்று அவ்வரசன் மரணமடைந்தான்; வேதமார்க்கத்தால் செய்யவேண்டிய அபரக்ரியைகள் ஒன்றும் அவனுக்குச் செய்யப்படவில்லை. பின்பு பயங்கரமாயுள்ள யமதூதர்களால் பிடிக்கப்பட்டு சிவத்ரோகம் செய்ததற்காக பதினாயிரம் யுகம் வரையில் கொடிய நரகத்தில் அவன் தள்ளப்பட்டான். (31)

(ஸ-மூ)

ஸம்புக்த்வா யாதநாஸ்தத்ர நிஷ்க்ரம்ய நரகாந் ந்ருப:।
ஸ விந்த்யாத்ரே: ஸமீபே து பிஸாசோ ஜாயத மஹாந்॥ (32)

ந பஸ்யந் தோயகம் யாவத் த்ருஷயா பீடிதோ ப்ருஸம்।
குஹாவிடபஸம்ஸ்தேஷு விசேஷ பயாகுல:॥ (33)

யத்ராஸ்ய ஸ்ரமம் பாத்யம் ஸஸர்ஜ காமம் ப்ருஸம்।
ததோ விஜிதக்ஷுதாயா ஸோயத்ர ஹ்ரஸ்வதமேவித:॥ (34)

ஹாஹதோஸ்மீதி ஸம்ஹவே ரோதநாத் த்ருஷ்ட பாதித:।
க்ஷுத்தர்த்ருஷ்டாம் பஸ்யந் ஸர்வப் ப்ராணி ரக்ஷஸ்யவா॥ (35)

உத்தம் தஸ்ய பிஸாசஸ்ய ஸ்ருத்வா வாக்யம் பரிதாபவ:।
ஸ குர்வந் தத்ர பிஸாசம் தம் உவாச ஹ॥ (36)

(உ)

இவ்வாறு வெகு காலம் நரகயாதனையை அனுபவித்த பின்னர் அவ்வரசன் நரகத்தினின்று கரையேறி, விந்த்ய பர்வதத்தின் பக்கத்தில் ஓர் பெரிய பிசாசாய் ஜனித்தான். அப்பொழுது தாகத்தி

னால் பிடிக்கப்பட்டு ஒருதடாகத்தை அடைந்தான். பைரவ மூர்த்தியின் ஆக்ஞையால் அங்கே தீர்த்தம் காணவில்லை. பிறகு அந்த பிசாசானது அநேக இடங்களில் சஞ்சரித்துக்கொண்டுவந்து, ஒரு காலத்தில், பரிசுத்தமானதும் ஸகல காமங்களோடு கூடினதுமாயுள்ள அகஸ்த்ய மஹரிஷியினுடைய ஆஶ்ரமமிருக்கும் மலைய பர்வதத்தை அடைந்தது, அங்குள்ள "தாணிமர"த்தின் கீழ் நிலையடைந்து ரொம்ப துக்கத்தோடு "ஐயோ! நான் கெட்டுப்போய் விட்டேன்" என்று தெய்வத்தினுலேவைப்பட்டதாகி அடிக்கடி அழுது புலம்பிற்று. அப்படிப் பசிதாகங்களால் தபிக்கிறதும் ஸமஸ்த பிராணிகளையும் ஹிம்ஸை செய்கிறதுமான அந்த பிசாசினுடைய அழுகுரலைக்கேட்டு, கும்பமுனியானவர் அந்த இடத்திற்கு வந்து அந்த பிசாசைப் பார்த்துச் சொல்லுகிறார். (36)

(ஜ-ம)

கஸ்த்வம் போ பீஷணாகாரோ கிம் ரோதிஷி ஸுதாருணம் ॥ (36½)
அகஸ்த்ய வாக்யமாகர்ண்ய பிஶாசஸ்து ரோதனம் ।
உத்ஸ்ருஜ்ய தீனயா வாசா வினயா வனதஸ்ததா ॥ (37½)

(உ)

"ஹே பிசாசே! பார்த்தவர்களுக்கு பயத்தைக்கொடுக்கக்கூடிய உருவமுடைய நீ யார்? ரொம்ப பயங்கரமான குரலுடன் ஏன் அழுகிறாய்? என்று கேட்டார். அப்பொழுது அந்த பிசாசானது அகஸ்த்ய முனிவருடைய வார்த்தையைக் கேட்டு அழுகையை நிறுத்திவிட்டு, ரொம்ப வணக்கத்தோடு தீனமானகுரலுடன் பதில் சொல்லுகின்றது. (37½)

(ஜ-ம)

ஶங்கர த்விஜ மஹாத்யுதே ஸர்வஜ்ஞ ஸ்ரீஶ்ரீமாந் ।
வேதாந்த கதிநாம் யஸ்து ஸமுத்ர: ஸரிதாம்பதே ॥ (38½)

வேதோத்யுக்த யோகிபி: ஸந்தேஜ்யா யோமஹாத்ரவிண ப்ராஹ்மண: ।
ஸ்ரீவைஷ்ணவாந் ஸதாத்தா யாதநா யம கிங்கரா: ॥ (39½)

[illegible]
[illegible] (40½)

(உ)

"சிவபெருமானை த்வேஷித்ததின் பலனாக இக்கதியை யடைந்தேன். வேதங்களில் சொல்லப்பட்ட எக்ஞம் முதலான கர்மங்களுக்கு பலன் கொடுக்கப்பட்டவரும், வேதங்களில் எந்த இடத்திலும் ஸ்துதிக்கப்பட்டவரும், யோகிகளினாலே பூஜிக்கப்பட்டவருமான அப்பேற்பட்ட பரமசிவன், என்னால் த்வேஷிக்கப்பட்டார். அந்த த்வேஷத்திற்காக எமதர்ம ராஜனால் ஏற்படுத்தப்பட்ட அநேக நரகயாதனைகள் என்னால் அனுபவிக்கப்பட்டன. வெகு காலத்திற்குப்பின் நகரங்களிலிருந்து கரையேறி பைசாச ஜன்மாவை அடைந்தேன். இப்பொழுது தாங்கள் தயவுசெய்து பைசாச ஜன்மாவைப் போக்கடிக்கத்தக்கதான புண்ய கர்மாவைச் சொல்லியருள வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டது. (40½)

(ஸ-ம) [illegible] ॥

[illegible]
[illegible] (41½)

[illegible]
[illegible] (42½)
[illegible] (43)

(உ) அகஸ்த்ய மஹரிஷி சொல்கின்றார்:—

"ஏ பிசாசே! வேத சாஸ்த்ரங்களால் வெளியிடப்பட்டிருக்கும் நல்வினைகள் நான்கு வர்ணத்தார்களாலும் முயற்சியோடு அநுஷ்டிக்கப்படவேண்டியன. தேவதைகளிடத்தில் த்வேஷ புத்தியில்லாமல் ஸேவிக்கவேண்டியது. எவர்கள் பரமசிவனிடத்திலாவது மகாவிஷ்ணுவிடத்திலாவது த்வேஷம் செய்கிறார்களோ அந்த அல்ப மனுஷ்யர்கள், சந்த்ர ஸூர்யாளுள்ள வரையில் நரகங்களை அடைகிறார்கள். ஆகையினால் மனதினாலாவது வாக்கினாலாவது சரீரத்தினாலாவது தெய்வங்களிடத்தில் த்வேஷம் செய்யக்கூடாது.'' (43)

(௪-௭)

[illegible]
[illegible] (44)

[illegible]
[illegible] (45)

[illegible]
[illegible] (46)

[illegible]
[illegible] (47)

[illegible]
[illegible] (48)

[illegible]
[illegible] (49)
[illegible] (49½)

(௨)

இவ்விதம் சொல்லி அந்த பைசாச ஜன்ம மோசனத்தையும் சொல்லுகிறுர். "ஹே பிசாசே! நான் உனக்கு உண்மையான ஒரு வார்த்தை சொல்லுகிறேன், கேட்பாயாக. உத்தமோத்தமமாயும் மங்களகரமாயுமுள்ள பராசலம் என்னும் திருப்பரங்குன்றத்திற்கு நீ போ; உனக்கு க்ஷேமமுண்டாகும். அந்த க்ஷேத்ரத்தில் உனக்கு பைசாச முக்தியானது உண்டாகிறது. இந்த விஷயத்தில் ஸந்தேஹமேவேண்டாம். அந்த ஸத்யாசல க்ஷேத்ரத்தில் கார்த்திகை மாஸம் க்ருத்திகா நக்ஷத்திரத்தன்று, தேவர்கள் ஸித்தர்கள் முதலானவர்களால் ஸேவிக்கப்பட்டதும், ஸ்வர்க்க மோக்ஷங்களுக்கு ஸாதகமானதுமான சரவணப் பொய்கையில் ஸ்நானம் செய்வாயாகில் பிசாசு ஜன்மாவிலிருந்து மோசனத்தை அடைவாய். இது முதல் ஐந்தாவது தினமாகிய கிருத்திகா நக்ஷத்திரமும் பௌர்

ஸமி திதியும் கூடிய புண்யதினத்தில், ப்ரஹ்மதேவரால் ஏற்படுத்தப்பட்டதும் ஸர்வ ஸித்திகளையும் கொடுப்பதுமான ஸாக்ஷாத் ஸுப்ரஹ்மண்ய மஹோத்ஸவம் நடக்கப்போகிறது. நானும் தரிசனம் செய்யப்போகின்றேன். ஹே பிசாசே! நீயும் என்னுடன் வா” வென்று சொல்லி, “ஹே சௌநகாதி மஹரிஷிகளே! அந்த மஹரிஷியானவர் தன் சிஷ்யர்களோடும் மற்ற ரிஷிக்கூட்டங்களோடும் கூட திருப்பரங்குன்றத்திற்குப் போனார்.” (49½)

(ஸ)

𑌸𑌶𑌿𑌷𑍍𑌯𑍋 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌹 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌮𑌾𑌨𑌸𑌃 ।
𑌗𑌤𑍍𑌵𑌾 𑌜𑌵𑍇𑌨 𑌕𑌾𑌰𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌦𑌿𑌵𑌸𑍇 𑌶𑍁𑌭𑍇 ॥ (50½)

𑌕𑍁𑌮𑌾𑌰𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌋𑌷𑌿𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 𑌪𑍈𑌶𑌾𑌚𑍀𑌂 𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌸𑍍𑌵𑌤𑌨𑍁𑌂 𑌜𑌵𑌾𑌤𑍍 (51½)

𑌦𑌿𑌵𑍍𑌯𑌦𑍇𑌹𑌂 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌦𑍇𑌵𑍈𑌰𑌪𑌿 𑌸𑍁𑌪𑍂𑌜𑌿𑌤𑌃 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌦𑌿𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑌰𑌿𑌶𑍋𑌭𑌿𑌤𑌮𑍍 ॥ (52½)

𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌶𑌿𑌵𑌾𑌕𑌾𑌰𑌂 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌤𑌃 ॥ (53½)
𑌮𑍁𑌨𑍇𑌰𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌲𑍋𑌕𑌂 𑌪𑍍𑌰𑌯𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 ॥ (54)

(உ)

அந்தப் பிசாசும் ஸந்தோஷமுடையதாகி அவருடன் கூட சீக்ரமாகப்போய், கார்த்திகை மாஸத்தில் மங்களமாகிய கிருத்திகா நக்ஷத்திரத்தில் மஹரிஷி சொன்ன ப்ரகாரம் சரவணப்பொய்கையில் ஸ்நாநம் செய்த மாத்திரத்தில் பைசாச ரூபமான சரீரத்தை விட்டு தனது இயற்கையான திவ்யதேகத்தை சீக்ரமாய் அடைந்து, தேவதைகளால் பூஜிக்கப்பட்டவனாய், தேவஸ்த்ரீகளால் சூழப்பட்ட திவ்யவிமானத்திலேறி, சிவஸ்வரூபியாகிய கும்பஸம்பவரை (அகஸ்த்ய மகரிஷியை) நமஸ்காரம் செய்து, மகாதீர்த்தத்தினுடைய மஹிமையினாலும் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினுடைய ப்ராஸாதத்தினாலும் அகஸ்த்ய மாமுனிவரினுடைய அனுக்ரஹத்

தினாலும், அந்த (பைசாச ஜன்மம் நீங்கின) ராஜசேகர ராஜன் ஸ்வர்கலோகத்தை அடைந்தான். (54)

(மூ)

एवं सत्याचल क्षेत्र प्रभावं मुनिपुङ्गवाः ।
मयोक्तं संग्रहेण प्रसादात् गुरोर्द्विजाः ॥ (55)

(உ)

"ஹே சௌநகாதி முனிஸ்ரேஷ்டர்களே! எனது குருவின் அருளால் ஸத்யாசலக்ஷேத்ர மாகாத்ம்யத்தை இவ்விதம் சுருக்கமாக உரைத்தேன்." (55)

(மூ)

इदं पवित्रं परमं पुरातनं
समस्त शापौघ दुःखमोचनम् ।
यः श्रद्धया शृणुयात् पठेद्वा
सर्वानभीष्टान् लभते चिरात् सः ॥ (56)

इति श्री शैवे महापुराणे
सनत्कुमार संहितायां [illegible] क्षेत्र वैभवे
सत्यगिरि माहात्म्ये दशमोऽध्यायः

(உ)

மிகவும் பரிசுத்தமானதும் ரொம்பமேலானதும், பழமையானதும் (ஆதியாயுள்ளதும்) எவ்வித சாபங்களினாலும் ஏற்படும் கஷ்டங்களையும் நிவர்த்தி செய்கிறதுமான இந்த க்ஷேத்ர மாகாத்ம்யத்தை எவன் அன்பினோடு படிக்கின்றானோ, எவன் சிரத்தையோடு கேழ்க்கின்றானோ, அவன் ஸர்வேஷ்டங்களையும் சீக்ரமாய் அடைகின்றான். (56)

பத்தாவது அத்யாயம்

முற்றிற்று.

सप्तदशोऽध्यायः ॥

(ऋषयः) ऊचुः ॥

[illegible] ।
विधात्रा विहितं सूत [illegible] ॥ (1)

[illegible] ।
[illegible] ॥ (2)

பதினேழாவது அத்யாயம்.

(உரை) சௌநகாதி மஹரிஷிகள் கேட்கிறார்கள்:—

"தபஸையே தனமாகவுடைய ஹே ஸூதமஹரிஷே! கார்த்திகை மாஸத்தில் க்ருத்திகா நக்ஷத்திரத்தில் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்கு ரதோத்ஸவமானது பிரஹ்மதேவரால் நடத்தி வைக்கப்பட்டதென்று தங்களால் சொல்லப்பட்டது. ஹே மகா புத்திமானே! அந்த சரித்திரத்தை எங்களுக்குச் சொல்லவேண்டு"மென்று சௌநகாதி முனிவர்களால் ப்ரார்த்திக்கப்பட்ட ஸூத மஹரிஷியானவர், மஹரிஷிகளைப்பார்த்துச் சொல்லுகிறார். (2)

(सूतः)

[illegible] ।
[illegible] ॥ (3)

[illegible] ।
[illegible] ॥ (4)

[illegible] ।
[illegible] ॥ (5)

[illegible] ।
[illegible] ॥ (6)

நிவ்ருத்ய த்வாயாமத்ய ஙிமு்ாவாவ ஃவாவஹ ।
உத்தீாஂமஂ ஙீயா ஜ்ஷஂ ஶஂஹோ ஙூிக வெஜஸஃ ॥ (7)

(உ)

"ஹே மஹரிஷிகளே! வெகுகாலத்திற்குமுன் அனாதியாயிருக்கிற ஈஶ்வரமாயையினாலே மோகத்தைபடைந்த பிரஹ்மதேவர் மகாவிஷ்ணு இவ்விருவர்களும் "நான் பெரியவன்" "நான் பெரியவன்" என ஒருவருக்கொருவர் வாதம் செய்துகொண்டார்கள். அப்பொழுது அதனைப்பார்த்து, பரமசிவ ஸம்பந்தமான அக்னி ரூபமாகிய தேஜஸ்ஸானது உலகமெங்கும் சூழ்ந்தது. கண்ணால் பார்க்க முடியாததும் ஆதியந்தமில்லாததுமான அந்த தேஜஸ்ஸானது, ஞானக்கண்படைத்த தேவர்களாலுங் கூட பார்க்கமுடியாததாயிருந்தது. அப்பொழுதே மஹத்தாயிருக்கிற தேஜோரூபியான அந்த ஈஶ்வரனுடைய சிரஸ்தானத்தைத் தேடவேண்டுமென்ற அபிப்ராயங்கொண்டு, பிரஹ்மதேவரானவர் ஹம்ஸ (அன்ன) பக்ஷியாகி வேகமாய் உயரக்கிளம்பி வெகுகாலம் தேடிப்பார்த்தும் சிரஸ்தானத்தைக் காணாமல், பின்னரும் போய்த்தேட சக்தியற்றவராய் சீக்ரமாகத்திரும்பி வந்து "மகாதேஜோரூபியான பரமசிவனுடைய சிரஸானது என்னால் தரிசிக்கப்பட்டது." என்று பொய்மொழி கூறினர். (7)

(8-9)

உக்தி ப்ரவக்தி வாணீஶெ ஸஹஸா விஷ்ணு ரவ்யயஃ ।
கெூாப ரமூவஂ ஸமீவாக்ஷ்ய ஃஹதீஂ ஶஃஷிநீஂதஷா ॥ (8)

விக்வா ரஸாதயஂ தூஂ ப்ரவிஶ்ய ஸூமயநு வாஙநஃ ।
ஶிவாஂவ்ரி ஷெஶஂ ஸஹஸ் நத்ஷ்வாஷா தா நிவ்ருத்யவ ॥ (9)
யமாயஹுவேவ ஷெ்ரவாவ நவஶ்ாஙீகி ஹஙூிஸாரா ஃ ॥ (9½)

(உ)

"மஹரிஷிகளே! இவ்வாறு ப்ரஹ்மதேவர் சொல்லவே, மகாவிஷ்ணுவானவர் மிகவும் பெரியவராக ரூபத்தை எடுத்துக்கொண்டு சீக்ரமாய் பூமியைப் பிளந்துகொண்டு பாதாளம் வரையில் ப்ரவே

சித்து அங்கெல்லாம் தேடியும் பரமசிவனுடைய பாதங்களிருக்கு மிடத்தைக் காணமுடியாமல் திரும்பிவந்து, "ஈஶ்வரனுடை பாதகமலங்களை நான் காணவில்லை" என்று உண்மையையே உரைத்தார்". (9½)

(மூ-ம்)

ஶஶாபாய ததா கோபாத் உக்ரரூபம் ஹ்ருதாஶாஸந: ।
பூஜாரஹிதபவத்வம் த்வம் ப்ரோக்தவாந் த்வம் ம்ருஷா யத: ॥ (10½)
ப்ரதிஷ்டாஸு நஹி தே ஸந்நிதாந் பஹுஷு ஸந்நிதௌ த்வம் ம்ருஷா ॥ (11)

(உ)

அப்பொழுது உக்ரமான ஆக்ஞை செய்யும் உக்ரமூர்த்தியான ஈஶ்வரன், அந்த ப்ரஹ்மதேவரைப்பார்த்துக் கோபங்கொண்டு, "ஹே ப்ரஹ்மதேவா! நீர் இப்பொழுது நமது ஸந்நிதானத்தில் பொய்மொழி புகன்றமையால் பூலோகத்தில் பிம்பங்களில் உமக்கு பூஜையில்லாமல் போகக்கடவது" என்று சாபங்கொடுத்தார். (11)

(மூ-ம்)

உதிஶப்தோ மஹேஶேநாஜ: ப்ரணம்ய ஶிரஸா ஹரம் ।
ப்ரார்த்தயாமாஸ தம் ப்ரஹ்மா க்ருபயா ஶங்கரோऽவதத் ॥ (12)

(உ)

இவ்வாறு சிவபெருமானால் சபிக்கப்பட்ட ப்ரஹ்மதேவரானவர், ஈஶ்வரனைத் தலைவணங்கி நமஸ்காரம் செய்து சாபமோசனத்தைச் சொல்லியருள வேண்டுமென ப்ரார்த்தித்தார். சிவபெருமானும் கருணை கூர்ந்து ப்ரஹ்மதேவரைப் பார்த்துத் திருவாய்மலர்ந்தருளுவாயினர். (12)

(மூ-ம்)

ஸாந்த்வயித்வா வசோ யாத ஸக்ருஜ்ஜாந ஶ்ரீஶிவஸ்தலே ।
தத்ர மத்வாஸ்வேஶோவ்யம் க்ருதாந் க்ருத்வா ஸஹோமதே ॥ (13)

[illegible]
[illegible] (14)

[illegible]
[illegible] (15)

[illegible]
[illegible] (16)
[illegible] (16½)

(உ)

“ஹே ப்ரஹ்மதேவா! பூலோகத்தில் “ஸத்யஞானகிரி” என்ற பராசல க்ஷேத்ரமானது ரொம்ப மேலானதாக விளங்குகிறது. நீர் அங்கு சென்று “அஶ்வமேதம்” என்கிற யாகத்தைச்செய்து, கார்த்திகை மாஸத்தில் க்ருத்திகா நக்ஷத்ரத்தன்று அந்த ஸத்யகிரிநாதராகிய கார்த்கேயருக்கு ஆதரவுடன் உத்ஸவம் செய்து வைத்து, அந்த ஸுப்ரஹ்மண்யமூர்த்தியினுடைய அநுக்ரஹத்தினல் சாபத்திலிருந்து விடுபட்டவனகி, அந்த ஸத்யகிரிவாஸத்தினலே பொய் சொன்ன தோஷத்திலிருந்தும் நிவர்த்தியாகி எல்லா க்ஷேமங்களையும் அடையப்போகிறீர். ஹே மகாபுத்திமானனை ப்ரஹ்மதேவா! பராசலமென்கின்ற அந்த க்ஷேத்ரத்தில், வைதிக சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட ப்ரகாரம் கர்மாக்களை அநுஷ்டித்து வரும் ப்ராஹ்மணர்களால் பிம்பத்தில் பூஜையானது அதுமுதல் உமக்கு யேற்படப்போகிறது” என்று ஷாட்குண்ய பரிபூர்ணராகிய பரமசிவன் அநுக்ரஹித்தார். (16½)

(ஐ-௧)

[illegible]
[illegible] (17½)

[illegible]
[illegible] (18½)
[illegible] (19)

(உ)

பின்னர் பரமசிவன் மிகவும் ப்ரீதியோடு கூடினவராய் மகா விஷ்ணுவைப் பார்த்துச் சொல்லுகின்றார். "ஹே லக்ஷ்மீநாயகரான மகாவிஷ்ணோ! நீர் முழுதும் உண்மை கூறின காரணத்தினால் உமக்கு பூலோகத்தில் அநேக க்ஷேத்ரங்களில், நமக்கு ஸமமான விசேஷ பூஜையானது, ஸகலவைபவங்களுடனும் யேற்படட்டும்", என்று இவ்வாறு கூறிவிட்டு சிவபெருமான் அப்பொழுதே அந்தர்த்தானமாயினர். (19)

([illegible])

[illegible] (20)

[illegible] (21)

[illegible] (22)

[illegible] (23)

[illegible] (24)

[illegible] (25)

[illegible] (26)

[illegible] (27)

ஸ்ரீ [illegible] பாடசாலை

[illegible] இலக்கம் ....

[illegible]

திருப்பரங்குன்றத்தில் ப்ரஹ்மதேவர் அசுவமேதயாகமும் கோடிலிங்க ப்ரதிஷ்டையும் செய்து சாபவிமோசனம் பெறல். [பக்கம் 209

𑌕𑍋𑌟𑌿 𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌿 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌾𑌨𑌿 𑌦𑍍𑌰𑍁𑌹𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 ।
𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌪𑌂𑌚𑌾𑌕𑍍𑌷𑌰 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 ॥ (28)

𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 𑌪𑌶𑍁𑌪𑌤𑍇𑌃 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌂 𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।
𑌸𑍍𑌵𑌪𑌦𑌂 𑌸𑌾𑌰𑌸𑌂𑌸𑍇𑌵𑍍𑌯 𑌦𑍍𑌰𑍁𑌹𑌿𑌣𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪 𑌯𑌥𑌾𑌪𑍁𑌰𑌾 ॥ (29)

(உ)

"முன் சொன்னபடி ஈஶ்வரனால் கட்டளையிடப்பட்டவரான ப்ரஹ்மதேவர், ஸரஸ்வதியோடும், தேவர்களோடும் முனிக்கூட்டங்களோடும் கூடினவராகி சீக்ரமாய் "பராசல க்ஷேத்ரம்" வந்து சேர்ந்து, வைகாசி மாஸத்தில், "குமாரஸரஸ்" என்னும் சரவணப் பொய்கைக் கரையில் மூன்று அஶ்வமேதயாகங்களை விதிப்படி செய்துமுடித்து, ஹே சௌநகாதி மஹரிஷிகளே! அந்த புத்திமானாகிய ப்ரஹ்மதேவரானவர், எக்ஜேஶ்வரனும் மஹேஶ்வரனும் பராத்பரனுமாகிய ஸத்யாசலேஶ்வரரைப் பூஜித்துத் த்ருப்தி செய்து வைத்தார். பிறகு தேவதச்சனாகிய விஶ்வகர்மாவை வரவழைத்து, ஷண்முகப்பெருமானுக்கு மஹாரதம் ஒன்று நிர்மாணம் செய்வித்து, மங்களகரமான கார்த்திகைமாஸத்தில் கார்த்திகை நக்ஷத்திரத்தன்று நல்ல முகூர்த்தத்திலே, ரொம்ப விசேஷமான உபசாரங்களோடும், சங்கம் துந்துபி ம்ருதங்கம் படகம் முதலிய நானாவித வாத்தியங்கள் கோஷிக்கவும், வாய்ப்பாட்டு சதுர் வாத்யம் முதலிய நானாவித சங்கீத வைபவங்களோடும், அகஸ்த்யாதி மஹரிஷிகள் செய்யும் ஸ்வஸ்திவாசனங்களோடும், சைவாகம விதியை யறிந்தவர்களும வேதவேதாந்தங்களைக் கரை கண்டவர்களுமான ப்ராஹ்மணர்களால், ஸர்வ ஜனங்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியதான ரதோத்ஸவ மஹோத்ஸவத்தை, ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்கு, வெகு விமர்சையுடன் நடத்திவைத்தார். ஸத்யகிரிநாதரான குஹ பரமாத்மாவின் க்ருபையால், பொய் சொன்னதினாலுண்டாகிய தோஷத்திலிருந்து விடுபட்ட ப்ரஹ்மதேவரானவர், கோடிக்கணக்கான பார்த்திவ லிங்கங்களை (சிவலிங்கங்களை) ப்ரதிஷ்டை செய்து, விதிப்ரகாரம் பஞ்சாக்ஷர மந்த்ரத்தினாலே பூஜை செய்து, ஹே மஹரிஷிகளே! பசுபதி

யாகிய பரமசிவனுடைய அநுக்ரஹத்தினாலே உத்தமோத்தமமான பதத்தை யடைந்து, தேவகணங்களோடு கூட முன்போல தமது மேலான ஸ்தானத்தை சீக்ரமாய்ச் சேர்ந்தார்''. (29)

(ச-ம)

[illegible]
[illegible] (30)
[illegible] (30½)

(உ)

"ஹே சௌநகாதி மஹரிஷிகளே! அதுமுதல் பராசல நாதரான குஹஸ்வாமிக்கு, கார்த்திகேய பரமாத்மாவிற்கு, ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்கு, வருஷந்தோறும் ப்ரஹ்மோத்ஸவ மென்ற ரதோத்ஸவமானது உலகத்தில் ப்ரஸித்தமாச்சுது. (30½)

(ச-ம)

[illegible]
[illegible] (31½)

[illegible]
[illegible] (32½)

[illegible]
[illegible] (33½)

(உ)

"ஹே மஹரிஷிகளே! உத்தமோத்தமமான பராசல க்ஷேத்ரத்தில் கார்த்திகை மாஸத்தில் க்ருத்திகா நக்ஷத்திரத்தன்று, அநேகம் ப்ராஜாபத்யக்ருச்ரபலத்தைக் கொடுக்கிறதான சரவணப்பொய்கையில் ஸ்நாநம் செய்து, எல்லா தேவர்களுக்கும் ரக்ஷகரும் தாரகாஸுரஸம்ஹாரம் செய்தவரும் தாரகப்ரஹ்ம ரூபியுமான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை, உலகத்தில் ஒரு தரமாவது தரிசனம் செய்கிறவர்கள், எல்லா துக்கங்களிலுமிருந்து விடுபட்டவர்களாகி

ஸகல ஸம்பத்துக்களோடும் கூடி வாழ்ந்து, தேகாந்தத்தில் ரொம்ப மேலானதும் அழிவற்றதுமான பரமசிவ பதத்தை யடைகிறார்கள். (33½)

(மூ)

[illegible]
[illegible] (34½)

(உ)

